விலை : 20.00
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-7619)

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 12 வெள்ளிக்கிழமை (24.02.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 067

# வடக்கு - கிழக்கில் விரைவாக
# இராணுவத்தை அகற்றுங்கள்
# காணிகளை விடுவியுங்கள்



## ஐ.நா விசேட நிபுணர் ரீட்டா வலியுறுத்து

(ஜெனிவா)

வடக்கில் இராணுவத்தினர் வசம் உள்ள பொதுமக்களின் 6 ஆயிரத்து 124 ஏக்கர் காணிகள் உடனடியாக முன்னுரிமை அடிப்படையில் விடுவிக்கப்பட்ட வேண்டும் என வலியுறுத்தியுள்ள சிறுபான்மையினர் விவகாரங்களை ஆராயும் ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர் ரீட்டா ஐசாக் நாடியா, வடக்கு -கிழக்கு மாகாணங்களிலிருந்து இராணுவத்தினரை அகற்றுவது அவசிய மானது என பரிந்துரை செய்துள்ளார்.

(23-ம் பக்.)

**தரம் - 5**
புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இன்றைய வலம்புரியில்...

ஆசிரியர் :
திரு. வே.அன்பழகன்

## இந்தோனேசியா வருமாறு ஜனாதிபதிக்கு அழைப்பு

(கொழும்பு)

இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடா தமது நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அழைப்பு விடுத்துள்ளதாக இந்தோனேசிய பிரதி வெளிவிவகார அமைச்சர் ஏ.எம்.பசீர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார.

நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அடுத்த மாதம் 6,7ஆம் திகதிக

23ஆம் பக்கம் பார்க்க....

துரத்திப் பிடிக்கப்பட்ட லொறிக்குள்

## வெட்டப்பட்ட நிலையில் 40 மாடுகள் மீட்பு!

(மிருசுவில்)

வெட்டப்பட்ட 40 மாடுகளின் தலைகளுடன் இறைச்சியையும் கொழும்பிற்கு கொண்டு செல்ல முற்பட்ட லொறி ஒன்று வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக வைத்து துரத்தி பிடிக்கப்பட்டுள்ளதாக வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி எஸ். லவன் தெரிவித்துள்ளார்.

வவுனியா சோயா வீதியிலுள்ள

23ஆம் பக்கம் பார்க்க....

## நிறைவேற்றதிகாரம் நீடிக்கப்படவேண்டும்

சுதந்திரக்கட்சி

(கொழும்பு)

மாகாணங்களை தனித்து விடுவதன் மூலம் அரசியல் பயணம் வேறு திசையில் பயணிக்க ஆரம்பித்துவிடும். ஆகவே நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை தொடர்ந்தும் நீடிக்க வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்

24ஆம் பக்கம் பார்க்க....

## பரவிப்பாஞ்சான் காணிகளை விடுவிக்க படைத்தரப்பு இணக்கம்

காணிக்குள் செல்லும் வரை போராட மக்கள் உறுதி



23ஆம் பக்கம் பார்க்க....

## 31 ஆயிரம் ஏக்கர் காணியில் மாங்குளத்தில் அபிவிருத்தி பணி!

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தின் தலைநகரமாக மாங்குளத்தை அபிவிருத்தி செய்வதற்காக ஏ- 9 வீதியின் இரு மருங்கிலும் 31ஆயிரம் ஏக்கர காணி இனங்காணப்பட்டுள்ளது என்று மாநகர மற்றும்மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை சிறப்புக் கட்டளைக்கு அமைய எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு மாகாணத்தின் தலைநகரமாக மாங்குளத்தை உருவாக்கும் திட்டம் தெரிவு செய்யப்பட்டுள்

23ஆம் பக்கம் பார்க்க....

## உணவு தவிர்ப்பு போராட்டம் உயிர் மாய்ப்பாக மாறும்!

புதுக்குடியிருப்பு மக்கள் எச்சரிக்கை

(பனிக்கன்குளம்)

தமது உணவுத்தவிரப்பு போராட்டத்தை நல்லாட்சி அரசாங்கம் உதாசீனம் செய்யுமாக இருந்தால் குறித்த போராட்டம் உயிர் மாய்ப்பு போராட்டமாக மாறும் என முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் எச்சரித்துள்ளனர்.

பொதுமக்களின் காணிகளிலுள்ள இராணுவத்தை வெளியேறுமாறு கோரி புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்னால் முன்னெடுக்கப்பட்டு வரும் நில மீட்பு போராட்டம் நேற்று இருபத்தோராவது

23ஆம் பக்கம் பார்க்க....

## கறுப்புப்பட்டி வாகனப்பேரணி

(யாழ்ப்பாணம்)

மக்களின் மண் மீட்பு போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் ஆதரவு தெரிவித்து பாரிய வாகன பேரணி போராட்டம் ஒன்று இன்றைய தினம் முல்லைத்தீவு கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு போராட்டக்களத்துக்கு அண்மையில் நடைபெறவுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழர் உரிமைகளை விற்பவருக்கு எம்மை விமர்சிக்க அருகதையில்லை

## சம்பந்தரின் உரைக்கு கஜேந்திரகுமார் சாடல்



(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் உரிமைகளை விற்று அரசியல் பிழைப்பு நடத்தும் எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன். எம்மை தோற்றுப்போனவர்கள் என கூறமுடியாது என தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சம்பந்தனுக்கு முதுகெலும்பிருந்தால் பகிரங்க விவாதத்திற்கு வரட்டும் என

23ஆம் பக்கம் பார்க்க....




முல்லைத்தீவு - கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்களின் காணிகளில் விமானப்படையினர் முகாம் அமைந்துள்ள நிலையில் அப்பகுதிகளை விடுவிக்ககோரி பொது மக்கள் மேற்கொண்டு வரும் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று 24வது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டு தொடர்ந்து வருகின்றது.

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# சட்டவிரோத புலம்பெயர்வோர் குறித்து சர்வதேச ரீதியில் செயலாற்ற வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி வலியுறுத்து

சட்டவிரோதமாக வரும் புலம்பெயர்வோர் தொடர்பில் ஒவ்வொரு நாட்டிலும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவது போன்று சர்வதேச ரீதியிலும் இணைந்து செயற்பட வேண்டியது முக்கியமானதென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற புலம்பெயர்வோர் சுகாதாரம் தொடர்பான சர்வதேச ஆலோசனை மாநாட்டின் நிறைவு நிகழ்வில் நேற்று பிற்பகல் கலந்துகொண்டு உரையாற்றும்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சட்டபூர்வமாக வருகைதரும் புலம்பெயர்வாளர் நாட்டுக்கு ஆசீர்வாதம் என்பதுடன், சட்டவிரோத புலம்பெயர்வோர் நாட்டில் சுகாதார, சமூக, அரசியல் பிரச்சினைகள் பலவற்றை ஏற்படுத்துவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் தொடர்பான பிரச்சினைக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு, உலக சுகாதார அமைப்பு உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களும் தற்போது முன்னுரிமை அளித்து செயற்படுவதற்கு அதுவே காரணமென குறிப்பிட்ட ஜனாதிபதி. வருடாந்த ஐக்கிய நாடுகள் அமைப்பின் மாநாடுகளுக்கு செல்லும் போதும் அதனோடு இணைந்த கலந்துரையாடல்களிலும் அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோர் சுகாதாரம் தொடர்பில் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் தான் தனிப்பட்ட கவனம் செலுத்துவதாகவும் தெரிவித்தார்.

இன்று (நேற்று) வெளியிடப்பட்ட கொழும்பு பிரகடனத்தின் நோக்கங்களை அடைவதற்காக அனைத்து அங்கத்துவ நாடுகளும் பாடுபடுமென நம்புவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

19 நாடுகளின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் கடந்த 21ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமான மாநாடு நேற்றுடன் நிறைவடைந்தது.

2008ஆம் ஆண்டின் உலக சுகாதார அமைப்பின் சுகாதார மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கமைய ஐக்கிய நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளும் புலம்பெயர்ந்தோர் சுகாதாரம் தொடர்பான கொள்கையை தயாரித்து அமுல்படுத்த உடன்பட்டன.

இந்த பிரேரணைக்கு மிகவும் அக்கறையுடன் பதிலளித்த இலங்கை, புலம்பெயர்வாளர்களுக்கான சுகாதார கொள்கை தயாரிக்கப்பட்ட முதலாவது நாடாகவும் தனியொரு நாடாகவும் மாறியுள்ளது. அந்த அக்கறையான பிரதிபலிப்புக்கு கௌரவமளிக்குமுகமாக புலம்பெயர்ந்தோர் சுகாதாரம் தொடர்பான இரண்டாவது சர்வதேச ஆலோசனை மாநாடு இலங்கையில் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, அமைச்சின் செயலாளர் அனுர ஜயவிக்ரம, உலக சுகாதார அமைப்பின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் மருத்துவ கலாநிதி பூனம் பெத்ரபால் சிங், புலம்பெயர்வோர் தொடர்பான சர்வதேச அமைப்பின் ஆசிய பசுபிக் பிராந்திய பணிப்பாளர் மருத்துவ கலாநிதி நெநெட் மோட்டஸ் உள்ளிட்ட வெளிநாட்டு பிரமுகர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (செ-11)

### மாணவர் படுகொலை

## கைதான பொலிஸார் தொடர் மறியலில்

யாழ். கொக்குவில் குளப்பிட்டி பகுதியில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உயிரிழந்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட ஐந்து பொலிஸார் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை யாழ். நீதவான் நீதிமன்றத்தில், பதில் நீதவான் வீ.ரி.சிவலிங்கம் முன்னிலையில் நேற்று இடம்பெற்றது.


இதன்போது நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேகநபர்களான பொலிஸ் உத்தியோகஸ்தர்களை எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கொக்குவில், குளப்பிட்டி சந்தியில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி உயிரிழந்தனர்.

ஆரம்பத்தில் இந்த சம்பவத்தை விபத்து என பொலிஸார் குறிப்பிட்ட போதிலும், மாணவர்களின் சடலங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையின் போது, ஒருவருடைய சடலத்தில் துப்பாக்கி சூட்டுக் காயம் காணப்பட்டது.

இதனையடுத்து, சம்பவ தினத்தன்று கடமையிலிருந்த ஐந்து பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# வீட்டினுள் ஏற்பட்ட தீ விபத்தால் பொருட்கள் பல எரிந்து நாசம்



(மல்லாவி)

வவுனியா பொலிஸ் நிலையப்பிரிவுக்குட்பட்ட தேக்கவத்தை பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் நேற்றைய தினம் திடீரென ஏற்பட்ட தீ விபத்து காரணமாக வீட்டிலிருந்த பெறுமதியான பொருட்கள் பல எரிந்து நாசமாகியுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

தேக்கவத்தை பகுதியில் வீட்டார் அனைவரும் வெளியே சென்றிருந்த வேளையில் திடீரென சமையலறைப் பகுதியில் தீ பரவத் தொடங்கியுள்ளது.

இதனை அவதானித்த அயலவர்கள் வீட்டு உரிமையாளருக்கும் வவுனியா பொலிஸாருக்கும் தொலைபேசி ஊடாக தகவலை தெரியப்படுத்தியதுடன், தண்ணீர் ஊற்றி தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.

இதேவேளை தகவல் கிடைத்ததும் வவுனியா பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பொது மக்களின் உதவியுடன் தீயை ஏனைய இடங்களுக்கு பரவாமல் கட்டுப்படுத்தியுள்ளனர்.

எனினும் இத் தீ விபத்து காரணமாக இலத்திரனியல் உபகரணங்கள் உட்பட சமையலறையிலிருந்த அனைத்து பொருட்களும் எரிந்து நாசமாகியுள்ளது.

விபத்து தொடர்பில் பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் இருந்து எரிவாயு ஒழுக்கின் காரணமாக அல்லது மின்னொழுக்கு காரணமாக தீ பரம்பல் இடம்பெற்றிருப்பதாக தெரிய வந்துள்ள நிலையில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். (செ-15)

கிளிநொச்சி
கந்தசாமி ஆலயம்
சிவராத்திரி விழா

மகா சிவராத்திரி விழாவை
முன்னிட்டு கிளிநொச்சி
கந்தசாமி ஆலயத்தில்
**விவாத அரங்கு, நாடகங்கள்,
நடனம், இசைக்கச்சேரி, கவியரங்கு**
போன்ற பல தேர்ந்த நிகழ்ச்சிகள்
நடைபெற ஏற்பாடு
செய்யப்பட்டுள்ளது என்பதை
அறியத் தருகின்றோம்.

(C-7650) **- ஆலய நிர்வாகம்**

யா/மல்லாகம் மகா வித்தியாலயம்
பழைய மாணவர் சங்க
வருடாந்த பொதுக்கூட்டம்

26.02.2017ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் மேற்படிக் கூட்டம் நடைபெறும். அனைத்து பழைய மாணவர்களையும் நலன்விரும்பிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அதிபர்**
(8037) **யா/மல்லாகம் மகா வித்தியாலயம்**

# சீன கம்யூனிஸ்ட் கட்சியினர் ஜனாதிபதியுடன் சந்திப்பு



சீனா எதிர்காலத்திலும் இலங்கையுடன் உண்மையான நண்பராக இருக்குமென சீன கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழுவின் வெளிவிவகார திணைக்கள தலைவர் Song Tao உள்ளிட்ட சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியை சந்தித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சிக்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலுள்ள நீண்ட கால உறவுகளை எதிர்காலத்தில் மேம் படுத்துதல் தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது. அதற்கென இரண்டு கட்சிகளையும் சேர்ந்த அலுவலர் மட்ட சந்திப்புக்களை அதிகரிப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

எதிர்வரும் ஜூன் மாதத்தில் சீனாவில் நடைபெறும் மாநாட்டில் பங்குபற்றுமாறு சீன கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சிக்கு அழைப்பு விடுத்தது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துவது முக்கியமானதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை தூய்மையான அரசியல் கட்சியாக கட்டியெழுப்பி சிறந்த அரசியல் இயக்கமாக முன்னெடுப்பது தனது இலட்சியமென தெரிவித்தார்.

இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சீனா வழங்கும் ஒத்துழைப்பை நன்றியுடன் நினைவுகூர்ந்த ஜனாதிபதி. அந்த பாரிய அபிவிருத்தி திட்டங்கள் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு பெரும் பங்களிப்பை வழங்குவதாகவும் சீன - இலங்கை உறவுகளை அனைத்து வகைகளிலும் பலப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமெனவும் தெரிவித்தார்.

தனது கோரிக்கைக்கமைய சீன அரசாங்கத்தின் உதவியில் இலங்கையில் நிர்மாணிக்கப்படவுள்ள சிறுநீரக மருத்துவமனை வேலைகளை இந்த ஆண்டில் ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பை அதிகரித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாட்டை முன்னேற்றுவதற்கு மேற்கொள்ளும் செயற்றிட்டங்களை பாராட்டிய சீன கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிகள், சீன உதவியுடன் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்களை வெற்றிகரமாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் முன்னெடுப்பது தொடர்பாக ஜனாதிபதிக்கு தமது நன்றிகளை தெரிவித்தனர். (செ-11)

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
IELTS
• Latest training materials. ( Book 11 )
• Skills development in all four categories.
• Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
IELTS Life Skills
திருமணம் செய்து நிரந்தர விசாவில் UK செல்பவர்களுக்கானது, புதிய நடைமுறை-க்கு அமைவாக இலகுவான முறையில் UK அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை (C-7648)
British Council'S
IELTS Registration Centre
Spoken English
www.itdml.com/english Hotline 0777 17 35 17
DML INTERNATIONAL ENGLISH COLLEGE

# மன இருளகன்று ஒளிபிறக்க பிரார்த்திக்கின்றேன்

## சிவராத்திரி தின வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு



நன்நெறி கொண்ட மக்களாக அனைவரும் வாழ வேண்டும் என்பதனையே அனைத்து சமயங்களும் போதிக்கின்றன. அந்த சமய தத்துவங்களையும், பண்புகளையும் நினைவூட்டுவதற்காக விசேட பண்டிகைகள் மற்றும் விரதங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன.

அந்த வகையில் மனதிலுள்ள இருளான அகந்தை, ஆணவத்தை அழித்து அமைதியையும், அன்பையும் உருவாக்கும் இலக்குடனான பல்வேறு பாரம்பரிய சமய நிகழ்வுகள் தொடர்ந்தும் இடம்பெறுவது, இன்றைய நவீன தொழில்நுட்ப உலகில் மனிதர்கள் மனிதாபிமானத்துடன் வாழ்வதற்கு மிகவும் இன்றியமையாதவையாக அமைகின்றன.

இன்றைய அதிவேக பொருளாதார போட்டிகளுக்கு மத்தியில் பாரம்பரிய மன அழுத்தத்துடன் வாழ்பவர்களுக்கு மத வழிபாடுகள் ஓர் ஆற்றுப்படுத்தல் பணியை மேற்கொள்கின்றன. அந்தவகையில் ஆன்மீக செயற்பாடுகள் சிறப்பான சமூகத்தை உருவாக்குவதற்கு உந்துசக்தியாகவே அமையும்.

இலங்கை வாழ் இந்துக்கள் போன்றே உலக வாழ் இந்துக்களும் ஆன்மீகத்தின் ஊடாக தமது மனதைப்பக்குவப்படுத்துவதற்காகவே மகா சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்கின்றனர்.

இப்புனிதமான சிவராத்திரி நாளில் அவர்களது மன இருளகன்று ஒளி பிறக்க வேண்டுமெனும் பிரார்த்தனைகள் நிறைவேறி, பண்புமிக்க நாடு உருவாக வேண்டுமென பிரார்த்திக்கிறேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்துள்ள மகா சிவராத்திரி தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (இ-3)

## பாரிய நிதி மோசடிகள் தொடர்பான

# ஜனாதிபதி விசாரணைக்குழுவின் பதவிக்காலம் மேலும் நீடிப்பு!

(கொழும்பு)

**பாரிய நிதி மோசடிகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் ஜனாதிபதி விசாரணைக்குழு ஒன்று நிறுவப்பட்டது. இந்த விசாரணைக்குழுவின் பதவிக் காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.**

அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசாரணைக்குழுவின் பதவிக் காலத்தை நீடித்துள்ளார்.

இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் 6 ஆம் திகதி நிறைவடையவிருந்த ஆணைக்குழுவின் பதவிக் காலம் செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேன்முறையீட்டு நீதிபதி பிரிதி பத்மன் சூரசேன தலைமையில் இந்த விசாரணைக்குழு இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சட்டவிரோத கடவுச்சீட்டுக்கள்; விமலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



சட்டவிரோதமான கடவுச்சீட்டைப் பயன்படுத்தி கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாக, வெளிநாடு செல்ல முற்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக, நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கு எதிரான வழக்கு, மே மாதம் 16ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கு, நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, நீர்கொழும்பு மேலதிக நீதவான் கபில துஸ்ஸந்த எபிட்டவல, இவ் வழக்கை ஒத்திவைத்தார். (இ-7)

## பகிடிவதை கொடூரங்கள் பற்றி இணையத்தில் முறையிடுங்கள்

(கொழும்பு)

"பகடிவதை" என்ற பெயரில் நிகழ்த்தப்படும் கொடூரங்கள் பற்றி முறையிடுவதற்கு, "கணனித் தொகுப்பு முறைப்பாட்டுப் பொறிமுறை" என்ற ஒன்றை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நிறுவியுள்ளது. "முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றவுடன் அது தொடர்பில் விசாரிக்கப்படும்.

முறையிட்ட பின்னர் அதனை மீளப் பெற முடியாது. பொய் முறைப்பாடுகள் செய்தால் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ugc.ac.lk/rag/ எனும் இணையத்தளத்தினுடாக பாதுகாப்பாகவும் இரகசியமாகவும் இந்த முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கான வழிவகை செய்யப்பட்டுள்ளது. சகலவிதமான பகடிவதைகள் குறித்தும் மேற் குறிப்பிட்ட இணையத்தளத்தில் முறையிட முடியும். பாதிக்கப்பட்டவர்களுக்கு வழிகாட்டல், பாதுகாப்பு வழங்குதல் மற்றும் கல்வியை தொடர ஆதரவும் வழங்கப்படவுள்ளது.

மேலும், 24 மணித்தியாலங்களும் செயற்படக் கூடிய 011 212 3700, 011 212 3456 என்ற தொலைபேசி இலக்கங்களையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கியுள்ளது. (இ-7)

## உத்தரவை மீறல்; மோ.சைக்கிள் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம்

தெல்தெனிய, திகனை பிரதேசத்தில் உத்தரவை மீறி பயணித்த மோட்டார் சைக்கிள் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போக்குவரத்து கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸாரே இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை போக்குவரத்து கடமைகளில் ஈடுபட்டிருந்தபோது பொலிஸார் வீதியால் சென்ற மோட்டார் சைக்கிளை மறித்துள்ளனர். எனினும் குறித்த மோட்டார் சைக்கிள் உத்தரவை மீறி சென்றுள்ளது. இதனால்பொலிஸார் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரே இச்சம்பவத்தில் காயமடைந்து தெல்தெனிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் காயமடைந்த நபர்கள் இருவரும் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட நிலையில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பில் தெல்தெனியப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுவருகின்றனர். (இ-7)

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் ஆஸி தடுமாற்றத்துடன் ஆரம்பம்



புனேயில் நடைபெற்று வரும் முதல் டெஸ்டில் மிட்செல் ஸ்டார்க்கின் அதிரடி அரைசதத்தால் அவுஸ்திரேலியா 9 விக்கெட் இழப்பிற்கு 256 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நேற்று புனேயில் தொடங்கியது. நாணய சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா பட்டிங் தேர்வு செய்தது.

ரென்ஷா, வோர்னர் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். இருவரும் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். முதல் ஓவரில் இருந்தே பந்து நன்றாக திரும்பியது. இதனால் 2-வது ஓவரில் இருந்தே இந்தியா சுழற்பந்தை பயன்படுத்தியது.

மதிய உணவு இடைவேளைக்கு சற்று முன் அவுஸ்திரேலியா முதல் விக்கெட்டை இழந்தது. 27.2 ஓவரில் 82 ஓட்டங்கள் எடுத்திருக்கும்போது அவுஸ்திரேலியா முதல் விக்கெட்டை இழந்தது. வோர்னர் 38 ஓட்டங்கள் எடுத்த நிலையில் உமேஷ் யாதவ் பந்தில் க்ளீன் போல்டாகி வெளியேறினார். அப்போது 36 ஓட்டங்கள் எடுத்திருந்த ரென்ஷா உடல்நல கோளாறு காரணமாக வெளியேறினார்.

அடுத்து ஸ்மித், ஷோன் மார்ஷ் ஆகியோர் களம் இறங்கினார்கள். மதிய உணவு இடைவேளையின் போது அவுஸ்திரேலியா ஒரு விக்கெட் இழப்பிற்கு 84 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஸ்மித், ஷோன் மார்ஷ் ஆகியோர் தலா ஒரு ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

மதிய உணவு இடைவேளை முடிந்து மீண்டும் ஆட்டம் தொடங்கியது. 16 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஷோன் மார்ஷ், ஜெயந்த் யாதவ் பந்தில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த ஹேண்ட்ஸ்காம்ப் 22 ஓட்டங்களில் அரங்கு திரும்பினார்.

மறுமுனையில் விளையாடிய ஸ்மித் 27 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அஸ்வின் பந்தில் ஆட்டம் இழந்தார்.



உடல்நலக் கோளாறால் வெளியேறிய ரென்ஷா மீண்டும் களம் இறங்கினார். அவர் ஒருபுறம் நிலைத்து நிற்க மறுபுறம் அவுஸ்திரேலிய பட்ஸ்மேன்கள் அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர். மிட்செல் மார்ஷ் 4 ஓட்டங்களில் வெளியேற, ரென்ஷா 125 பந்துகளை சந்தித்து அரைசதம் அடித்தார். உமேஷ் யாதவ் ரிவர்ஸ் ஸ்விங் பந்தால் அவுஸ்திரேலிய பட்ஸ்மேன்களை மிரட்டினார்.

அவுஸ்திரேலிய விக்கெட் கீப்பர் வேட் 8 ஓட்டங்களில் உமேஷ் யாதவ் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டம் இழந்தார். ரென்ஷா 68 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த ஒகீபே, லயன் ஆகியோரை டக்அவுட்டில் வெளியேற்றினார் உமேஷ் யாதவ். ஓகீபேயை அபாரமாக கேட்ச் பிடித்து வெளியேற்றினார் விக்கெட் கீப்பர் சஹா.

அவுஸ்திரேலியா அணி 205 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 9 விக்கெட்டுக்களை இழந்தது. 10-வது விக்கெட்டுக்கு ஸ்டார்க் உடன் ஹசில்வுட் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி ஓரளவிற்கு தாக்குப்பிடித்து விளையாடியது. ஸ்டார்க் அவ்வப்போது பவுண்டரியும், சிக்சரும் விளாசினார். அவர் 47 பந்தில் 5 பவுண்டரி, 3 சிக்சருடன் அரைசதம் அடித்தார். அணியின் ஸ்கோரும் 250 ஓட்டத்தினைத் தொட்டது. ஸ்டார்க், ஹசில்வுட் ஜோடி முதல் நாள் முடியும் வரை அவுஸ்திரேலியாவை ஆல்அவுட் ஆகாமல் பார்த்துக் கொண்டது.

இதனால் முதல்நாள் ஆட்டநேர முடிவில் அவுஸ்திரேலியா 9 விக்கெட் இழப்பிற்கு 256 ஓட்டங்கள் எடுத்துள்ளது. (க)

## வடக்கு புத்தர் சிலைகள் உடைப்பின் சூத்திரதாரிகள் தென்னிலங்கையினர்?

### நாடாளுமன்றில் ஜே.வி.பி கேள்வி



(கொழும்பு)

வடக்கில் புத்தர் சிலைகள் உடைக்கப்படுவதன் பின்னணியில் செயற்படும் சூத்திரதாரிகளை அரசு கண்டறியவேண்டும் என வலியுறுத்தியுள்ள ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க வலியுறுத்தினார்.

இதன்பின்னணியில் வடக்கிலுள்ள தமிழர்கள் இருக்கின்றனர் என தவறான விம்பமொன்று சமூக வலைத்தளங்களில் தோற்றுவிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

வடக்கில் பௌத்த மதத்துக்கும், விகாரைகளுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனத் தவறான தகவல் பரப்பப்பட்டு வருகின்றது. அண்மையில், வடக்கிலுள்ள புத்தர் சிலை மீது ஒயில் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. தேடிப்பார்த்தால் தென்னிலங்கையில் செயற்படும் குழுவொன்றின் பிரதிநிதிகளே அதைச் செய்துள்ளனர்.

எனவே, இவ்வாறான சூத்திரதாரிகளைக் கண்டறிந்து அரசு மக்களுக்கு உண்மையைத் தெளிவுபடுத்த வேண்டும்.

சகல இனங்களுக்கும் சம உரிமை கிடைக்கவேண்டும். ஜனநாயக ரீதியிலான உரிமைகள் உறுதிப்படுத்தப்படவேண்டும். இதுவே நல்லிணக்கத்தை நோக்கிப் பயணிப்பதற்கான சிறந்த பாதையாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் தமது உரையின்போது இந்திய ஜனாதிபதி, பிரதமர், ஐ.நா போன்ற சர்வதேச அமைப்புகள் வெளியிட்ட கருத்துகளை மேற்கோள் காட்டிப் பேசினார். பிரச்சினை சர்வதேச மயப்படுத்தப்படுகின்றன என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. சர்வதேச சமூகத்தால் பிரச்சினைகளை தீர்க்க முடியாது என்ற உண்மையையும் புரிந்துகொள்ள வேண்டும்.

ஜெனிவாத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இலங்கை தொடர்பான அறிக்கையும் வெளிவரவுள்ளது. இதன் போது புதியதொரு பிரேரணை கொண்டுவரப்படலாம். கால அவகாசம் வழங்கப்பட்டு பிரச்சினைகள் இழுத்துக்கொண்டு செல்லப்படலாம். அரசு என்னதான் நன்மை செய்தாலும் சர்வதேசம் இனி விட்டுவிடாது. பலஸ்தீனத்தில் குண்டு போடும் கூட்டம்தான் இலங்கை பற்றியும் பேசுகின்றது. ஆகவே, உள்நாட்டுப் பொறிமுறை மீது எதிர்க்கட்சித் தலைவர் நம்பிக்கை வைக்கவேண்டும். சர்வதேசத்தின் தோளில் தொங்கினால் முன்நோக்கி நகரமுடியாது.

வடக்கு மக்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. காணிப்பிரச்சினை, காணாமல் போனோர் பிரச்சினை என அந்தப் பட்டியலை நீடித்துக்கொண்டே போகலாம். இவற்றுக்கு அரசு தீர்வைக் காணாததாலேயே அதை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு இனவாதிகள் சிலர் முயற்சிக்கின்றனர்.

கேப்பாப்பிலவு மக்களின் போராட்டம் தொடர்கின்றது. புதுக்குடியிருப்பிலும் உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. காணி உரிமைப் பத்திரமும் மக்களிடம் இருக்கின்றது. எனவே, அந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க தனது உரையில் வலியுறுத்தினார். (செ-11)

## வடக்கு வைத்தியசாலைகளில்

# பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனையை முற்றாகத் தடைசெய்ய தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுகாதார அமைச்சின் கீழ் உள்ள வைத்தியசாலைகள் அனைத்திலும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனையை முற்றுமுழுதாக தடை செய்வதற்கு ஆலோசனை முன்வைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கில் டெங்கு தொற்று தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கூட்டம் நேற்றைய தினம் வடமாகாண சுகாதார அமைச்சின் அலுவலகத்தில் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

அதன் போதே மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் அக் கலந்துரையாடலில் தெரிவிக்கையில், வடக்கில் உள்ள மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை போன்ற அனைத்து பிரதேசங்களிலும் கழிவகற்றல் முறை ஒழுங்கு படுத்தப்பட வேண்டும் என்றும், கழிவுகளை தரம்பிரித்து அகற்றும் செயற்பாடுகள் சீரான முறையில் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் போதனா வைத்தியசாலைகளில் பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனைகள் தடைசெய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் நிலையில் ஏனைய ஆதார வைத்தியசாலைகள், பிரதேச வைத்தியசாலைகளிலும் உடனடியாக பொலித்தீன் பாவனை தடைசெய்யப்பட வேண்டும் என அதிகாரிகளால் ஆலோசனை வழங்கப்பட்டது. எனவே அவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என அமைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கழிவகற்றல் செயற்பாடுகளுக்கு ஆளணி பற்றாக்குறை நிலவும் பகுதிகளில் தேவையான ஆளணி எண்ணிக்கையை உடனடியாக பட்டியலிட்டு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் அனைத்து பகுதிகளிலும் தொடர்ச்சியான முறையில் நடைபெற வேண்டும் என்றும் யாழ் மாவட்டத்தில் யாழ்ப்பாணம், உடுவில், நல்லூர், சாவகச்சேரி ஆகிய பிரதேசங்களில் டெங்கு தாக்கத்தின் அளவு அதிகரித்துள்ளதென்றும் அப்பகுதிகளில் கூடுதல் விழிப்புணர்வும் கடுமையான நடவடிக்கைகளும் அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும் உரிமையாளர்கள் இல்லாத காணிகளுக்கு குறிப்பிட்ட தினங்களுக்குள் துப்புரவு செய்வதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டு அறிவித்தல் பலகைகள் நாட்டப்பட வேண்டும் என்றும் குறித்த கால எல்லைக்குள் துப்புரவு செய்யப்படாதவிடத்து பிரதேச சபைகள் குறித்த காணிகளை துப்புரவு செய்ய வேண்டும் என்று அதற்கான கட்டணத்தை உரிமையாளர்களிடம் இருந்து அறவிட வேண்டும் எனவும் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. (செ-9)

### வீதி விபத்து இருவர் காயம்

வீதியால் நடந்து சென்ற மூவர் மீது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் நடந்து சென்றுகொண்டிருந்தவர்களில் இருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் பண்டிக்குளம் பூநகரி வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் பண்டிக்குளம் பூநகரியைச் சேர்ந்த எஸ்.மதிவண்ணன் (வயது 34) அவரது சிறு வயது மகனான மதிவண்ணன் எலிமிற்றன் (வயது 5) ஆகியோரே காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸில் முறையிடப் பட்டதனை தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-30)

### இன்றைய போட்டிகள்

ஞானதீபம் இளையோர் திறன் விருத்தி மையம் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து நடத்தும் 23 வயதுக்குட்டவருக்கான கரப்பந்தாட்ட போட்டியில் இன்று மாலை 5 மணியளவில் நடைபெறும் போட்டியில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகமும்

மாலை 5.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக்கழகமும்,

இரவு 7.15 மணியளவில் நடைபெறும் போட்டியில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அச்சுவேலி யுத் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

இதேவேளை ஆவரங்கால் இந்து இளைஞன் மற்றும் புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக்கழகத்துடன் வெற்றி பெறும் அணி புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகத்துடன் மோதவுள்ளது. (க)

# கொள்கைக்கு விரோதமானோரை கொல்லவேண்டிய அவசியமில்லை

### மக்களே அவர்களை நிராகரிப்பர் - கஜேந்திரகுமார்

(யாழ்ப்பாணம்)

தமிழ்தேசிய கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தமிழ் மக்களுடைய கொள்கைக்கு விரோதமாக செயற்பட்டிருந்தாலும் அவர் கொல்லப்பட வேண்டிய அவசியம் இல்லை என தெரிவித்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்களே அவரை நிராகரிப்பர் எனவும் தெரிவித்துள்ளார்.

கந்தர்மடத்தில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் நேற்றுமுன் தினம் பாராளுமன்றத்தில் பேசியிருந்த சம்பந்தன்

நாம் தம்மை துரோகிகள் என கூறுவதனால் தான் சுமந்திரன் கொல்லப்படுவதற்கு திட்டமிடப்பட்டது என்ற ரீதியில் அவர் பேசியிருந்தார்.

இந்த கொலைமுயற்சி உண்மையாக இருந்தாலும் அல்லது பொய்யாக இருந்தாலும் அதனை எம்மோடு தொடர்படுத்தி பேசியதனை வன்மையாக கண்டிக்கின்றோம்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் ஆகியோர் இந்த கொலை முயற்சி என்பது திட்டமிட்ட நாடகம் என கூறியுள்ளனர். இவை சம்பந்தனுக்கு தெரியாதா? மக்களுடைய கொள்கைகளுக்கு விரோதமாக செயற்படும் சுமந்திரன் போன்றோர் மக்களிடமிருந்து தம்மை பாதுகாக்க வேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது.

அதனால் தான் கொலை முயற்சி என்று நாடகமாடி பாதுகாப்பை தன்னை சூழ தீவிரப்படுத்தியுள்ளார். மேலும் சம்பந்தனுடைய பேச்சால் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களுக்கு இலங்கை அரசால் உயிர் ஆபத்து ஏற்படும் நிலைகூட தோன்றியுள்ளது.

எமக்கு உயிர் ஆபத்துக்கள் ஏதும் ஏற்பட்டால் கட்டாயமாக இலங்கை அரசும் சம்பந்தனும் பொறுப்புக் கூற வேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார். (செ-4)




பாடசாலை மாணவர்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மாணவர்கள் ஒன்றிணைந்த செயற்றிட்டம் ஒன்று நல்லிணக்க அமைச்சின் ஏற்பாட்டில் நேற்றையதினம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ.வி.கே. சிவஞானம், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்: உ.சாளின்)

# மகாசிவராத்திரி விரதத்தின் மகிமையைப் பேணுவோம்

இந்துக்களின் மிகவும் புனித தினமாக விளங்கும் மகாசிவராத்திரி விரத தினத்தில் சகல மதுபானக் கடைகளையும், இறைச்சிக் கடைகளையும், அசைவ உணவகங்களையும் மூடி மகா சிவராத்திரி விரதத்தின் புனிதத்தன்மையைப் பேண ஒத்துழைப்பு வழங்குமாறு இந்த நாட்டின் அதிமேதகு ஜனாதிபதி, மாண்புமிகு பிரதமர், அரசாங்கம், சகல தலைவர்கள் மற்றும் இந்நாட்டின் மக்களாகிய அனைவரிடமும் பகிரங்கமாக வேண்டிக் கொள்ளுகின்றோம்.

நாடெங்கும் பரந்துவாழும் இந்து மக்கள் மகா சிவராத்திரி விரததினத்தன்று ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டுப் பரம்பொருளின் அருளைப் பெறும் வகையில் போக்குவரத்து ஒழுங்குகளை செய்யுமாறும் வேண்டுகிறோம்.

மகாசிவராத்திரி தினத்தின் மகிமையை மறக்காது அன்று சமய அனுட்டானங்களை அனுட்டித்து வழிபாடுகளில் ஈடுபடுமாறு இந்து மக்கள் அனைவரையும் வேண்டுகிறோம்.

சுமார் 4 தசாப்தங்களாக வேதனைகளாலும் சோதனைகளாலும் வாடும் எம் மக்களுக்கு விமோசனம் அருளுமாறும், தங்கள் சொந்த இடங்களை விட்டு வெளியேற்றப்பட்ட மக்கள் மீண்டும் தம் வதிவிடம் திரும்ப அருள் பாலிக்குமாறும், சிறைகளில் அரசியற் கைதிகளாக வாடும் எம் உடன் பிறப்புக்களை அந்தக் கொடுமையிலிருந்து விடுவிக்குமாறும் இப் புனிதமான - புண்ணிய மிகுந்த மகாசிவராத்திரி விரத தினத்தில் எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேதஸ்ரீ நடராஜப்பெருமானின் திருவருளை வேண்டி அகில இலங்கை இந்து மாமன்றம் பிரார்த்தித்து நிற்கின்றது என மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் மற்றும் பொதுச் செயலாளர் வே. கர்நாமி ஆகியோர் இணைந்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## சிவராத்திரி தின நிகழ்வுகள்

தெல்லிப்பழை தமிழ்ச் சங்க அனுசரணையுடன் கீரிமலை சிவபூமி மடத்தில் இன்றையதினம் சிவராத்திரி தின சிறப்பு நிகழ்ச்சிகள் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் தொண்டுநாதன் சுவாமிகளின் ஆன்மிக சொற்பொழிவும், பக்த நந்தனா இசைநாடகமும், வாழ்வு பெற்ற வல்லி என்ற தலைப்பில் வில்லிசை நிகழ்வும் அதனைத் தொடர்ந்து குருபசிட்டி சுகுமார் குழுவின் ஒயிலாட்டம், காவடி, கரகாட்டம் என்பனவும் அருணோதயாக் கல்லூரியின் கிராமிய நடனமும் இடம்பெற்று நாளை சனிக்கிழமை காலை மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (இ-12)

---

வடகோவை ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி அலய மகா சிவராத்திரி விழா இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும். மாலை 6மணிக்கு ஆரம்பமாகி நான்கு சாமப் பூசைகள் இடம்பெறவுள்ளன. இரவு 7மணிமுதல் ஆன்மீக கலைநிகழ்வுகள் இடம்பெறும். (இ-3)

## யாழ்ப்பாண வர்த்தகர்களுக்கு சிவராத்திரியை முன்னிட்டு விடுமுறை

(யாழ்ப்பாணம்)

இன்று சிவராத்திரி தினத்தை முன்னிட்டு விரதமிருக்கும் வர்த்தக ஊழியர்கள் நன்மைகருதி அவர்கள் கோரிக்கைக்கு அமைவாக 25022017 சனிக்கிழமை அவர்களுக்கு விடுமுறை வழங்கி உதவுமாறு யாழ்ப்பாண வர்த்தகர்களை யாழ். வணிகர் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. (இ)

edexcel PEARSON CIOB RICS
INTAKE NOW ON

UGC அங்கீகாரம் கொண்ட UK Degree பட்டப்படிப்புகளை இலங்கையிலேயே பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்பு...

BUSINESS MANAGEMENT MARKETING | HRM — HND — Leading to BA (Hons) from the UK Universities
QUANTITY SURVEYING — HND — Leading to BSc (Hons) from the UK Universities
BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY — HND — Leading to BSc (Hons) from the UK Universities
CIVIL ENGINEERING — HND — Leading to BEng / BSc (Hons) from the UK Universities
TELECOM ENGINEERING — HND — Leading to BEng (Hons) from the UK Universities
COMPUTING — HND — Leading to BSc (Hons) from the UK Universities
ELECTRICAL & ELECTRONIC ENGINEERING — HND — Leading to BEng / BSc (Hons) from the UK Universities
LAW — LLB — Leading to LLB (Hons) from the UK Universities

FOUNDATION PROGRAMMES
• Diploma in IT (DIT) • Diploma in CAD & BS • BMAc • Certificate in English • Diploma in English • National Dip. in Engineering

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
Jaffna Campus, 16, Point Pedro Road, Jaffna.
City Campus, 256, Galle Road, Colombo 6. T: 011 236 4459
Mount Campus, 54, Galle Road, Mt. Lavinia. T: 011 272 8082
Kandy Campus, 344, Peradeniya Road, Kandy. T: 081 222 4731
JAFFNA 077 710 2131 / 077 960 3753
COLOMBO 077 283 4595
Batti Campus, 294, 1/4, Trinco Road, Batticaloa. T: 065 222 8451
Wayamba Campus, 103, Dambulla Road, Kurunegala. T: 037 223 3339
18 YEARS
Corporate Office, 32, Dharmarama Road, Colombo 6. T: 0112597217
Kalmunai Campus, 392/1, Main Street, Kalmunai. T: 067 222 6899

Platinum Partner No.1 BTEC Centre in Sri Lanka by Pearson UK @ BTEC Higher Education Forum 2016
Educational Institute with Best Academic & Industry Interface by South Asian Partnership Summit & Business Awards 2016
Academic Impact Winner by QSI - UK 2016
Ranked as No.1 Higher Education Provider (Private Sector) - Survey by IUMD 2014
BTEC Gold Partner by Pearson - UK 2013
Performance Excellence Award by Pearson - UK 2011
Fastest Growing BTEC Centre by Pearson - UK 2010

HOTLINE : 021 221 9910 | Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk

## இராசி பலன்

24.02.2017
(மாசி 12, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.32 மணிக்கு
திரயோதசி முன்னிரவு 9.39மணிவரை
திருவோணம் முழுவதும்
சுபநேரம் 6.30 -8.00 மணிவரை
இராகுகாலம் 11.00-12.30 மணிவரை
மகா சிவராத்திரி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| செவ் சுக் | | | |
| சூரி புத கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் புனர்பூசம் | | |
| சந் | | | ராகு |
| | சனி | குரு | |

**மீனம்:** அதிர்ஷ்ட வாய்ப்புகள் கிடைக்கும் நாள், வெளியூர் பயணங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மேடம்:** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம்.

**இடபம்:** அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், நல்லவர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்:** கவலைகள் தீர பரம்பொருளை வழிபட வேண்டிய நாள், வேலைச் சுமை கூடும், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**கடகம்:** நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறும் நாள், தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம், வழிபாடு மகத்துவம் தரும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மகரம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், சிக்கனத்தைக் கடைப் பிடிக்கும் எண்ணம் உருவாகும்.

**தனுசு:** குடும்பத்தில் மங்கள நிகழ்வுகள் நடை பெறுவதற்கான வாய்ப்புண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள்

**விருச்சிகம்:** வளர்ச்சி கூடும் நாள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் புகழ் கூடும், விரதம், வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்

**துலாம்:** செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறைப்படைவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்

**கன்னி:** மன நிறைவு கூடும் நாள், பிள்ளைகளால் பெருமைகள் ஏற்படலாம், உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள்

### திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகத்தின்

# புதிய பிரிவின் ஆரம்பமும் சான்றிதழ் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகத்தின் 20ஆவது புதிய பிரிவின் ஆரம்ப வைபவமும் கடந்த ஆண்டின் பயிற்சியை நிறைவு செய்த 19ஆவது பிரிவு மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு இல. 286, பிரதான வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறும்.

மன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நாடகப் பேராசான் குழந்தை ம.சண்முகலிங்கமும் சிறப்பு விருந்தினராக அமலமரித் தியாகிகள் சபையின் வடமாகாண நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் அருட்பணி ஞா.ரமேஸ் அடிகளாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் பயிற்சியை நிறைவு செய்யும் மாணவர்களின் கலை நிகழ்வுகளாக ஒயிலாட்டமும் 'யாரோடு நோகேன்' நாடகமும் இடம்பெறும். ஆர்முள்ள அனைவரையும் இந்நிகழ்வில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-3)

# பொலிஸ் காவலரண் திறப்பு

துன்னாலை புளியங்கிரான் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் காவலரணுக்கான கட்டடம் எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது. உப பொலிஸ் பரிசோதகராக கடமையாற்றிய கணபதிப்பிள்ளை வடிவேலு ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் இக்கட்டடம் அமைக்கப்பட்டது. முள்ளிப் பகுதியூடாகச் செல்லும் மக்களின் பாதுகாப்புக் கருதியும், அப்பகுதியில் நடைபெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் முகமாகவும் பொலிஸ் காவலரண் அமைக்கப்பட்டது.

இந்த காவலரண் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ணவினால் திறந்து வைக்கப்படவுள்ளது. நா.குமரகுருநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக காங்கேசன்துறை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டி.கே.பியந்த,சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் ஜெயலத், நெல்லியடிப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.பி. ஏ.பியந்த, வல்வெட்டித்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி தி.ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3,60)




## முதியோர் ஒன்றுகூடல்

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் ஒன்று கூடல் நாளை மறுதினம் 26ஆம் திகதி ஞாயிற்றக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்க மண்டபத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் அனைத்து சிரேஷ்டப்பிஜைகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் ந.கனகலிங்கம் அறிவித்துள்ளார். (இ-3)

## பெருந்திருவிழா

ஊரெழுஶ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 13 நாட்கள் நடைபெறும். 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் வசந்த மண்டப பூசையுடன் இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்த திருவிழாவும் நடைபெறும். (இ

## ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரி



நயினாதீவு பிரதேச வைத்தியசாலையின் ஆண்கள், பெண்கள் விடுதி மற்றும் மலசலகூடம், குடும்பநல உத்தியோகத்தரின் விடுதி ஆகியன பாழடைந்து இடிந்து விழும் நிலையில் காணப்படுகின்றன. இவ் வைத்தியசாலை பழைமைவாய்ந்ததாக காணப்படுவதுடன் வைத்தியசாலையின் சுவர்கள் இடிந்து விழும் நிலையில் காணப்படுகின்றன. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்துமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-3)

# மகாத்மா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அல்வையூர் பிரித்தானியா உறவுகளின் அனுசரணையுடன் நடைபெறும் அல்வாய் வடக்கு மகாத்மா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மகாத்மா முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

MSSEEDO இணைப்பாளர் செல்வி தர்மலிங்கம் தனுஜா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன், கௌரவ விருந்தினர்களாக மாகாணசபை உறுப்பினர் வே.சிவயோகன்,மாகாணசபை உறுப்பினர் சி.அகிலதாஸ், வடமராட்சி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிப் பொறுப்பாளர் ஐ.ஶ்ரீரங்கேஸ்வரன், வடமராட்சி வலயக்கல்வி ஆசிரிய ஆலோசகர் க. கண்ணதாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3,60)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்-கந்தர்மடம் சிவ உதய நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் மார்ச் மாதம் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை மாசி மகத்தன்று காலை 7 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெற்று அன்றைய தினம் மாலை 6 மணிக்கு தீக்குளிப்பும் இடம்பெறவுள்ளது.

++++++++++

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை வெள்ளாந்தெரு நல்ல தண்ணீர் கிணற்றடி ஶ்ரீ ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் மார்ச் மாதம் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை 15 தினங்கள் இடம்பெறவுள்ளன. இவ் உற்சவ காலங்களில் தினமும் மாலை 6 மணிமுதல் இரவு 7 மணி வரை வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி.அருளானந்தம் ஆசிரியரால் தெய்வீகப் பேருரை நிகழ்த்தப்படும். (இ-3)

# கரவெட்டி பிரதேச செயலகத்தின் வருடாந்த விளையாட்டு விழா

கரவெட்டி பிரதேச செயலகத்தின் வரடாந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணியளவில் பிரதேச செயலாளர் ச.சிவஶ்ரீ தலைமையில் யா/நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சு.முரளிதரன் கலந்து கொள்வார். (இ-12)







கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். போதனா வைத்தியசாலையின் விளையாட்டு மருத்துவ அதிகாரி ச. அற்புதச் செல்வன் மங்கல விளக்கேற்றுவதையும் மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்ச்சியினையும் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் மாணவியொருவருக்கு வெற்றிக்கிண்ணம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய சுற்றாடலில் புகைத்தலில் ஈடுபடுவோர் கைதாவார்கள்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வர ஆலய சுற்றாடலில் புகைத்தலில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆலயத்தினுள் புனிதத்தனைமையை பேணும்படி ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். ஆலய உற்சவ கால கூட்டம் அண்மையில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே இவ்வாறான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அத்துடன் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு ஆலய சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்றும் ஆலயத்தின் நுழைவாயிலுக்கருகிலும் உள்பகுதியிலும் பாதணிகளுடன் செல்ல கூடாது என்றும் பக்தர்கள் வீதி ஒழுங்கு முறைகளை கடைப்பிடித்து வாகனங்களை தரிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# நிர்வாக சபைத் தெரிவு

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் வரடாந்தக் பொதுக்கூட்டம் கடந்த 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதில் நிர்வாக சபை உறுப்பினர்களின் தெரிவும் இடம்பெற்றது. போஷகர் இ.குணசிங்கம், தலைவர் சோ.விஷ்னுதாஸ், செயலாளர் ஞா.டிலைக்சன், பொருளாளர் இ.ரகு, உபதலைவர் கி.துரைசிங்கம், உப செயலாளர் யோ.மதுதாசன், கலை கலாசார பண்பாட்டு கழக தலைவர் சி.மகேந்திரன், கணக்காய்வாளர் கி.தேவபாலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-12)

# புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்கள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்

## ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

பொதுமக்கள் மீது புலனாய் வுத்துறையினர் மேற்கொள்ளும் தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மகஜர் ஒன்று ஜனாதிபதி யிடம் சமர்ப்பிப்பதற்கென பொதுமக்களால் நேற்றையதினம் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபரிடம் யாழ்.மாவட்ட செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் முப்படையினரின் ஆக்கிரமிப்புக்குள் உள்ள பொது மக்களின் காணிகளை விடுவிக்க கோரி நேற்று முன்தினம் தேசிய ரீதியிலான நில மீட்புப் போராட்டமும் பேரணியும் யாழ். நகரில் முன்னெடுக்கப்பட்டது. போராட்ட த்தின் முடிவிலேயே மேற்குறித்த மகஜர் பொதுமக்களால் கையளிக்கப்பட்டுள்ளது.

நில மீட்புப் போராட்டத்தில் கலந்து கொள்வதற்காக முகாம்களில் உள்ள மக்களை ஏற்பாட்டாளர்கள் அழைத்திருந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் வலி வடக்கு பகுதியில் உள்ள சில முகாம்களுக்கு சென்ற புலனாய்வுத் துறையினர் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டாம்.

இதனால் நீங்கள் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் என்று அச்சுறுத்தல் விடுத்ததுடன், அதிகாலை போராட்டத்துக்கு ஆயத்த மாக இருந்த பேருந்துகளை படம் எடுத்ததுடன் போராட்டத்தில் கலந் துகொண்டவர்களையும் புகைப்படம் எடுத்துள்ளனர் என்றும் இதன் காரணமாக பலர் வெளியில் தமது உரிமைகளைக் கேட்ப தற்கு அஞ்சுகின்றனர்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இவ்வாறான அச்சுறுத்தல்கள் இடம்பெற்றது.

ஆனால் நல்லாட்சி என்று கூறப்படுகிற மைத் திரி அரசிலும் இவ்வாறான அச்சுறுத்தல் நடக்கிறது.

இவ்வாறான அச்சுறு ததல்கள் தொடர்ச் சியாக இடம் பெறுவது நிறு த்தப்பட வேண்டும் என தெரி வித்தே மேற் குறித்த மகஜரை கையளித்துள்ளனர்.

(இ-9)


### வீடு காணி விற்பனைக்கு

கோப்பாய்மத்தி அண்ணமார்கோவிலடிப் பகுதியில் சுற்றுமதிலுடன் வீடு (இரண்டு பரப்புக்காணி) மற்றும் 5,8,7 பரப்புக் காணிகள். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-

த.தருமரத்தினம், அண்ணமார் கோவிலடி, கோப்பாய் மத்தி.

தொ.பே.இல. 077 821 5069

(தி-7607)





தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழக சமூகவியல்துறை ஏற்பாட்டில் நடைபெற்ற ''சமூகம், சுற்றுச்சூழல், மேம்பாடு'' எனும் தலைப் பிலான சர்வதேச மாநாட்டில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், பதிவாளர் தாவரவியல் பேராசிரியர் கே.ஆறுமுகம் தலைமையில் உரை நிகழ்த்துவதையும், அண்ணாமலைப் பல்கலைக்கழக சமூகவியல் பேராசிரியர் ஜே.கிருஷ்ணமூர்த்தியால் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.




இணுவில் திருப்பதி
அருள்மிகு
திருவேங்கடேஸ்வரர் ஆலய
இலட்சார்ச்சனை விழா -2017
15.02.2017- 24.02.2017 வரை

தினமும் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி 7.30 மணிக்கு நிறைவடையும்.
10 ஆம் நாள் இன்று (24.02.2017) பகவத் கீதா ஹோமம்- சர்வசித்தி பெறல், மகா பூர்ணாகுதி, தாராஹோமம், சைவப்புலவர்- சைவநெறி சன்மார்க்க காவலர் நித்திய தசிதரன்
விடயம்- கிருஷ்ணா உபதேசம்
சொற்பொழிவு ஒருங்கமைப்பு
நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபம், நல்லூர்.
திரு.சண்முகராஜா கணேசலிங்கம், தர்மகர்த்தா
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
021 224 2300


# பொலநறுவை புராதன சிவாலயத்தில் மகா சிவராத்திரி வழிபாடுகள் இன்று

பொலநறுவை புராதன சிவாலயத்தில் மகா சிவராத்திரி புனித தினத்தில் விசேட பூஜை வழிபாடுகளை நடத்த பொலநறுவை சமன்பிட்டி -காமதேனு இந்து சமய வளர்ச்சி மன்றத்தின் தலைவர் பாலன் சுதாகரன், மாமன்றத்தின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்துள்ளார்.

இந்நிகழ்வுகளில் மாமன்றப் பிரதிநிதிகளாக, மாமன்ற ஆலோசகர் சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்கள், சி.த.சி.அருளானந்தன், ஜெ.நிரோஷ்காந் உள்ளிட்டோர் கலந்து கொள்வர்.

அதேவேளை அகில இலங்கை இந்து மாமன்றத் தலைமையகத்தில் எழுந்தருளி அருள்பாளித்துக் கொண்டிருக்கும் பரம் பொருளாம் ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் சந்நிதியிலும் நான்கு சாமங்களும் அபிஷேகங்களுடன் மகா சிவராத்திரி பூஜை வழிபாடுகள் நடைபெற வுள்ளன.

(இ-3)


## பணிநிலை வெற்றிடம்

ஜெயந்திநகர் , கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கீழ்வரும் பணிநிலை வெற்றிடம் உண்டு.

நடன பாட ஆசிரியர்

தகைமைகள்

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் நடன பாடத்தில் (2 nd Class upper Division ) பட்டத்தினைப் பூர்த்தி செய்திருத்தல்.
2. பெண்பாலார் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
3. முழுநேர ஆசிரியராகக் கடமையாற்ற வேண்டும்.
4. ஒழுக்கம், நன்னடத்தையுடையவராக இருக்க வேண்டும். (கிராம சேவையாளர் நற்சான்றிதழ் மேலும் இரண்டு சமூகப் பெரியவர்களது நற்சான்றிதழ் இணைக்க வேண்டும்)

குறிப்பு:
★ இல்லத்தில் தங்கியிருந்து கல்வி பயிற்றுவித்தல் வேண்டும்.
★ உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்.
★ சம்பளம் ரூபா 22000இற்கு குறையாது வழங்கப்படும்.

கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் ''நடன ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பம்'' என்பதைத் தவறாது குறிப்பிட்டு (சகல சான்றிதழ்களின் பிரதிகளுடன்) 03.03.2017 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். கால தாமதமாகும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(தி-7642)

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:
தி. இராசநாயகம், தலைவர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.
தொலைபேசி இல. 077 060 4950, 021 492 3118
மின்னஞ்சல் முகவரி : rasa46 @ yahoo.com,
mahadevaswamikalchildrenhome@gmail.com



## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5’6"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/6990

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 2
உயரம்: 5’2"
தகைமை/தொழில்:O/L/ சொந்ததொழில்
எதிர்பார்ப்பு:சைவபோசனம்
தொ.இ: B/6991

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 31
உயரம்: 5’8"
தகைமை/தொழில்:Diploma தொழிலதிபர் கனடா PR
தொ.இ: B/6992

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 64சூரி செவ் 8 இல்
உயரம்: 5’8"
தகைமை/தொழில்Diploma/அரசதொழில்
எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்றவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/6999

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்:சதயம்
கி.பா: 62சூரிசெவ் 7 இல்
உயரம்: 5’
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/4333

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்:உத்தரம்
கி.பா: 35சூரிசெவ் 7 இல்
உயரம்: 5’2"தகைமை/ தொழில்:Diploma/ஆசிரியர்
தொ.இ: G/4338

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 12செவ் 4 இல்
உயரம்: 5’4"
தகைமை/தொழில்:BA
தொ.இ: G/4342

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்:மூலம்
கி.பா: 15
உயரம்: 5’4"
தகைமை/தொழில்:BSc, MSc/ அரசதொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்
தொ.இ: G/4369

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

# இனியும் அரசியல்வாதிகளை நம்பத் தயார் இல்லை மக்களை நம்பியே போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம்

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கப் பிரதிநிதி தெரிவிப்பு



(பரந்தன்)

நாம் இனியும் அரசில்வாதிகளை நம்பத்தயாராக இல்லை. எங்களுடைய மக்களை நம்பியே போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம் என கிளிநொச்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தின் பிரதிநிதி ஆனந்த நடராஜா லீலாதேவி தெரிவித்துள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தொடர் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நேற்று கிளிநொச்சி சந்தை வர்த்தகர்கள் ஊர்வலமாகச் சென்று கலந்துகொண்டனர். இதன்போது அவர்களுக்கு நன்றி தெரிவித்து கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

காணாமல் ஆக்கப்பட்ட எங்களுடைய பிள்ளைகளுக்கும் உறவுகளுக்கும் நல்ல தீர்வு கிடைக்க வேண்டும். அத்தோடு விரைவான தீர்வாக அது கிடைக்க வேண்டும் என்பதோடு. இலங்கை அரசுக்கு பொறுப்புக்கூறல் விடயத்தில் ஐ.நா. காலநீடிப்பு வழங்கக்கூடாது என்பதனையும் வலியுறுத்தி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். எங்களது இந்தப் போராட்டத்திற்கு நாம் அரசியல்வாதிகளை நம்பியிருக்கவில்லை. அவர்கள் விரும்பினால் எங்களது போராட்டத்தில் கலந்து கொள்ளலாம். அது அவர்களுடையவிருப்பம். ஆனால் நாங்கள் எங்கள் பிள்ளைகளுக்கான இந்தப் போராட்டத்திற்கு மக்களின் ஆதரவையே பெரிதும் நம்பியிருக்கின்றோம்.

எனவே இன்று சந்தை வர்த்தகர்கள் வந்து கலந்து கொண்டு ஆதரவும் தெரிவித்தது போன்று ஏனைய அமைப்புகள் மற்றும் பொதுமக்களின் ஆதரவையே நம்பியிருகின்றோம் எனத் தெரிவித்த அவர், இந்த தொடர் போராட்டத்திற்கு விரைவில் நல்ல தீர்வு கிடைக்காதுவிட்டால் எங்களது போராட்ட வடிவங்கள் மாறும் எனவும் லீலாதேவி மேலும் குறிப்பிட்டார். (2)

# 4 ஆவது நாளாகவும் பரவிப்பாஞ்சான் மக்களின் போராட்டம் தொடர்கிறது





பரவிப்பாஞ்சான் இராணுவமுகாம் முன்பாக கடந்த 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ள நில மீட்புக்கான போராட்டம் இரவு- பகலாக நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்து இப் போராட்டத்திற்கு பல வழிகளிலும் ஆதரவு பெருகி வருவதுடன் அரசியல் பிரமுகர்கள், கிளிநொச்சி சந்தை வர்த்தகர்கள், பொது அமைப்புக்கள் எனப் பலதரப்பினரும் நேரில் வருகை தந்து கலந்துரையாடி வருகின்றனர். (2-312)




# வவுனியா நகர சபையினரால் வீதி விளக்குகள் பொருத்தும் பணி ஆரம்பம்



வவுனியா நகர சபையினரால் நகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு வருவதாக வவுனியா நகர சபைத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகர்ப்புறங்களில் ஏற்கனவே வீதி விளக்குகள் பொருத்தப்பட்ட நிலையில் தற்போது புறநகர்ப்பகுதிகளாகிய தாண்டிக்குளம், கோவில்குளம், பூந்தோட்டம் மற்றும் ஓயார் சின்னக்குளம் போன்ற பகுதிகளில் வீதி விளக்குகள் பொருத்தும் நடவடிக்கையில் நகரசபை ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இச்செயற்பாடு குறித்து கருத்து தெரிவித்த நகரசபை செயலாளர் இ.தயாபரன்,

பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க பல சிரமத்திற்கு மத்தியில் நகரசபையினர் வீதி விளக்குகளை பொருத்தும் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர்.

மின்சாரத்தை மிச்சப்படுத்தும் நோக்கில் பொதுமக்கள் தங்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

தங்கள் வீடுகளுக்கு முன் மின்கம்பத்தில் பொருத்தப்பட்டுள்ள தெரு விளக்குகளை வீணாக எரிய விடாது காலக்கிரமத்தில் அணைக்க வேண்டும். இதன் காரணமாக மின்சாரத்தையும் கட்டணத்தையும் சேமிக்க முடியும் என்பதோடு நகர அபிவிருத்தியில் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என குறிப்பிட்டார். (2-250)

# சீமெந்து கலவைக் காவுவண்டி தடம்புரள்வு




மாங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் ஏ-9 வீதியில் உள்ள பழைய முறிகண்டிக்கும் - திருமுறிகண்டிக்கு இடையில் உள்ள 18ஆம் போர் ஏற்றம் பகுதியில் சீமெந்து கலவைக் காவு வண்டி வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் தடம் புரண்டு விபத்துக்குள்ளான சம்பவம் நடைபெற்றுள்ளது.


இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி கட்டுமானப் பணிகளுக்கான கலவை செய்யப்பட்ட சீமெந்து கலவையை ஏற்றிச் சென்ற வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் தடம் புரண்டு விபத்துக்குள்ளான சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்த விபத்தை அடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (2- 15)

# பாலைதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா ஏற்பாடுகள் பூர்த்தி



(பூநகரி)

பாலைத்தீவு அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் மார்ச் மாதம் 16 ஆம் திகதி ஆரம்பமாகி 19 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளதாகவும் இறுதி திருப்பலிப் பூஜை 19 ஆம் திகதி காலை நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. திருவிழா சம்பந்தமாக ஆராய்வதற்கும், ஒழுங்குகளை மேற்கொள்வதற்குமான கலந்துரையாடல் கூட்டம் கடந்த 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூநகரி பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது.


இக் கூட்டத்தில் பூநகரி பிரதேச செயலர் சி.க. கிருஸ்னேந்திரம், வலைப்பாடு பங்குத்தந்தை எஸ்.எஸ்.விமலசேகரம், பூநகரி பங்குத்தந்தை அருள்தாஸ் ஜெயபுரம், பங்குத்தந்தை அருள் செல்வா மாவட்டக் கூட்டுறவு ஆணையாளர், ந.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடற்படை, தரைப்படை ஆகியவற்றின் பொலிஸ் பிரிவின் உயர்நிலை அதிகாரிகள் கலந்து கொண்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி தெரிவித்தனர்.

சுகாதாரசேவை, குடிநீர் வசதிகளை செய்வதற்கான ஒழுங்குகளை பூநகரி பிரதேச சபையும் பூநகரி, முழங்காவில் சுகாதார சேவைப்பிரிவினரும் மேற்கொள்வதாகவும் சகல யாத்திரிகர்களுக்குமான குடிநீர் வசதியை கடற் படையினரும் செய்ய உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இக் கூட்டத்தில் கருத்து தெரிவித்த மாவட்ட அரச அதிபர் சென்ற ஆண்டு பத்தாயிரத்துக்கு மேற்பட்ட யாத்திரிகர்கள் பங்கு கொண்டதாகவும் இம்முறை 12 ஆயிரத்திற்கு மேற்பட்ட யாத்திரிகர்கள் பங்கு கொள்வார்கள் எனஎதிர்பார்ப்பதாகவும் அவர்களுக்கு வேண்டிய சேவைகளை செய்வதற்கு சகல தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். பள்ளிக்குடா, வலைப்பாடு, நாச்சிக்குடா,கௌதாரி முனை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இருந்து 16 ஆம் திகதி முதல் யாத்திரிகர்கள் பயணத்தை ஆரம்பிப்பார்களென தெரிவிக்கப்படுகிறது

இக்கூட்டத்தில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், ப.நோ.கூ.சங்கம், வர்த்தக சங்கப்பிரதிநிதிகள், பிரதேச கிராம சேவை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2-84)

# நல்லூர் கந்தசாமி ஆலயத்தில் இருந்து புறப்பட்ட பாதயாத்திரை இன்று திருக்கேதீச்சரத்தை சென்றடையும்



மகா சிவராத்திரியை முன்னிட்டு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து திருக்கேதீச்சரம் வரையான பாத யாத்திரை கடந்த 19 ஆம் திகதி காலை 7.30 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி முன்றலில் இருந்து ஆரம்பித்தது.

இப்பாதயாத்திரை நேற்று அதிகாலை இலுப்பைக்கடவை முனீஸ்வரம் தேவஸ்தானத்தில் இருந்து புறப்பட்டு கள்ளியடி கற்பகப் பிள்ளையார் ஆலயம் சென்று அங்கிருந்து கோவில்குளம் நுங்குவெட்டி ஐயனார் ஆலயத்தில் நேற்று மதியம் தரித்து நின்றது.

அதன் பின்னர் தொடர்ந்து மன்னார் – பள்ளமடு பாதையூடாக பாப்பா மோட்டையிலுள்ள வைரவர் ஆலயம், ஆக்காட்டி வெளிப்பிள்ளையார் ஆலயம்,வேட்டையார் முறிப்பு அம்மன் ஆலயத்தை இரவு சென்றடைந்து அங்கு பாதயாத்திரையாக வந்த சிறுவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் அடியார்களுக்கு ஆன்மீக நூல்கள் வழங்கப்பட்டன. இன்று அதிகாலை 5 மணியளவில் மேற்படி ஆலயத்தில் இருந்து புறப்பட்ட பாதயாத்திரை அடம்பன் பிரதேச செயலக பிரிவிலுள்ள பிள்ளையார் ஆலயம் சென்று அடம்பன் பிரதான வீதியூடாக மாந்தைச் சந்தியைச் சென்றடைந்து அங்கிருந்து திருக்கேதீச்சரம் ஆலயத்தைச் சென்றடையவுள்ளது.

அதன் பின்னர் பாதயாத்திரையில் எடுத்துச் செல்லப்பட்ட வேல் பாலாவித் தீர்த்தக் கரையில் வைத்து தீர்த்தமாடப்பட்டு அடியார்களும் தீர்த்தமாடி தீர்த்தம் வழங்கப்படவுள்ளது. (2)

# உழவு இயந்திரத்தில் ஏற்றப்படும் கழிவுகள் மூடப்படாமையால் நிலத்தில் சிந்துகின்றன

## வவுனியா நகர சபையினர் கவனத்தில் எடுப்பார்களா?



வவுனியா நகரசபையினால் நகர்ப்புறங்களில் இருந்து அகற்றப்படும் குப்பைகள் மீண்டும் வீதியிலேயே விழும் நிலை காணப்படுகின்றது.

நகர்ப்பிரதேசத்தில் இருந்து உழவுஇயந்திரங்களில் ஏற்றப்படும் கழிவுப்பொருட்கள் பம்பைமடு பிரதேசத்தில் குப்பை கொட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட இடத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றது.

இந் நிலையில் உழவியந்திரத்தில் கொண்டு செல்லப்படும் குப்பைகள் மூடப்படாமல் கொண்டு செல்லப்படுவதனால் உழவியந்திரத்தில் இருந்து குப்பைகள் மீண்டும் வீதியில் விழும் நிலை காணப்படுகின்றது.

வவுனியா வைத்திய சாலையில் 95 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில் டெங்கு அபாயம் வவுனியாவை அச்சுறுத்தி வருகின்றமையால் இவ்வாறு குப்பைகள் வீதியில் வீழ்வது தொடர்பில் நகர சபையினர் உரிய கவனம் செலுத்த வேண்டும் என பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (2-250)

# திருக்கேதீச்சர வீதிகளை புனரமைக்க வீதி அபிவிருத்தி அமைச்சர் பணிப்புரை

மகாசிவராத்திரிக்கு வருகை தரும் அடியார்களின் நன்மை கருதி திருக்கேதீச்சரம் செல்லும் பிரதான மூன்று வீதிகளில் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான இரண்டு வீதிகளை புனரமைக்குமாறு மன்னார் மாவட்ட வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளருக்கு வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வீதி பராமரிப்பிற்காக ஒரு மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு கடந்த சில வருடங்களாக மூடப்பட்டிருந்த மனிதப் புதைகுழி காணப்பட்ட பகுதியான வீதியும், பிரதான வீதியுமாக இரண்டு வீதிகளும் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் குறித்த புனரமைப்புப் பணிகளை கடந்த 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை அமைச்சர் பா.டெனிஸ்வரன் பார்வையிட்டார். (2-250)

# கிளிநொச்சி சந்தை வர்த்தக நிலையங்களை மூடி ஊர்வலமாகச் சென்று கவனயீர்ப்பு

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்திற்கு ஆதரவாக






கிளிநொச்சியில் கடந்த 20 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டு இரவு- பகலாக இடம்பெற்று வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம், பரவிப்பாஞ்சான் மக்களின் நிலம் மீட்பு போராட்டம் ஆகியவற்றிற்கும் கிளிநொச்சி சந்தை வர்த்தகங்களும் கலந்து கொண்டு ஆதரவு வழங்கியதுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டிருந்தனர்.

நேற்று வியாழக்கிழமை காலை சந்தை நடவடிக்கையை இடைநிறுத்தி, வர்த்தக நிலையங்களை மூடி சந்தையிலிருந்து ஊர்வலமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் கந்தசுவாமி ஆலயத்திற்குச் சென்ற வர்த்தகர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். இது தொடர்பில் சந்தை வர்த்தக சங்க பிரதிநிதிகள் கூறுகையில்,

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு ஏழு ஆண்டுகள் கடந்த நிலையிலும் எமது மக்களின் காணி, காணாமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகளின் பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்படவில்லை. கடந்த அரசு தமிழ் மக்களின் உணர்வுகளை மதிக்காது, அவர்களின் பிரச்சினைகளை கவனத்தில் எடுக்காத அரசாக இருந்த தன் காரணமாக நாட்டில் நல்லாட்சி அரசாங்கத்தை ஏற்படுத்துவோம் என தமிழ் மக்களின் பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டதற்கு அமைவாக நல்லாட்சி அரசுக்கு வாக்களித்து புதிய அரசை ஏற்படுத்த உதவியிருந்தோம்.

புதிய அரசும் தமிழ் மக்களின் காணி பிணக்கு, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை, அரசியல் கைதிகளின் பிரச்சினை போன்றவற்றை தீர்த்து வைப்பதாக கூறியிருந்தது. அதனை தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் எங்களிடம் உறுதியளித்திருந்தார்கள். ஆனால் புதிய அரசு ஆட்சிக்கு வந்த இரண்டு வருடங்கள் கடந்து விட்ட நிலையில் எதுவும் நடைபெறவில்லை. கடந்த ஆட்சி போன்றே இந்த ஆட்சியும் காணப்படுகிறது. ஆனால் தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் இந்த அரசுக்கு போதிய அழுத்தம் கொடுக்காது அரசுக்கு ஆதரவளித்து வருகின்றனர். இது கவலையளிக்கிறது எனச் சந்தை வர்த்தகச் சங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர். (2-312-15)

# எமது பூர்வீக நிலங்களில் இருந்து படைத்தரப்பை வெளியேற்றுங்கள்

## மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களை இன அழிப்புச் செய்து எட்டு ஆண்டுகள் ஆகிவிட்ட போதும் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களில் வலுக்கட்டாயமாக படைத்தரப்பை அரசு நிறுத்தியுள்ளதாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது. கேப்பாப்பிலவு மக்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்ற போராட்டம் தொடர்பில், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த இருபது நாட்களுக்கு மேலாக தமது இருப்பியலுக்கான வாழ்வுரிமைப் போராட்டத்தை முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்கள் மேற்கொண்டு வருவதை தாங்கள் அறியாமல் அல்ல. ஆனால் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக சிங்கள மக்களுக்கு ஒரு நீதியும் தமிழ் மக்களுக்கு மற்றொரு நீதியுமே இலங்கையில் ஆட்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

தமிழ் மக்களை இன அழிப்புச் செய்து எட்டு ஆண்டுகள் ஆகிவிட்ட போதும் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களில் வலுக்கட்டாயமாக படைத்தரப்பை நிறுத்தியுள்ளீர்கள்.

தமிழ் மக்களை வகைதொகையின்றி படுகொலை செய்த படைத்தரப்பு எமது பூர்வீக நிலங்களை அபகரித்து சுகபோகம் அனுபவிக்க நாம் விரக்தியடைந்து வீதியில் நின்று போராடும் நிலைமையை ஏற்படுத்திவிட்டீர்கள். உங்கள் நல்லாட்சி எனும் குள்ளாட்சிக்கும் மகிந்த ராஜபக்ஷவின் சர்வாதிகார ஆட்சிக்கும் என்ன வித்தியாசம்.

அவர்கள் முகத்தில் குத்தினார்கள். நீங்கள் எமது வாக்கால் அரியணை ஏறி எம்மை அடியோடு கறுவறுக்க முனைகிறீர்கள். வடக்கு, கிழக்கிலேயே பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் எதற்கு படைத்தரப்பு? இவ்வாறு தான் கடந்த காலங்களிலும் ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டதன் விளைவே ஆயுத கலாசாரம் தோற்றம் பெற்றது. தமிழ் மக்கள் இலங்கையர்களாக வாழ்வதில் வெறுப்பும் ஏற்பட்டது. எமக்கு அயல்நாட்டு மன நிலைமையை உருவாக்கியதும் உங்கள் செயற்பாடுகளே. ஜனநாயக கோரிக்கையை ஏற்க மறுக்கும் அரசாங்கம் எப்படி மக்களாட்சியை தொடர முடியும்.

நீங்கள் தமிழ் அரசியல் வாதிகளை ஏமாற்றுவது போல் தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது. மக்கள் ஒருபோதும் இலக்கு மாறியவர்கள் அல்ல. சகல நிலைகளிலும் தமிழ் மக்களை விரக்தியடைய வைத்து விட்டீர்கள். நல்லிணக்கம் என்பது சமநிலை பகிர்வுறவாடலிலேயே தங்கியுள்ளது. மேட்டிமை வாத ஏகாதிபத்தியத்தால் இன நல்லுறவு மேம்படப் போவதில்லை. எம்மை தொடர்ந்து தோற்கடிக்கப்பட்ட இனமாக கருதுகிறீர்கள். நாம் உயர்ந்த இலட்சியத்துடன் உன்னதமான விடுதலைக்காக போராடிய இனம் என்பதனையும் மறந்துவிடாதீர்கள்.

எனவே காலம் தாமதித்து நீதியை நீர்த்துப்போக வைத்து நீர்க்குமிழியாக்காமல். நீதியின் பால் நியதியை காட்டுங்கள். அறம் வெல்லும் என நிறைவாக நம்புகின்றோம். எனவே கேப்பாப்பிலவு, புதுக்குடியிருப்பு ஆகிய எமது பூர்வீக நிலங்களில் இருந்து படைத்தரப்பை வெளியேற்றுங்கள். ஜனநாயக மரவுகளுக்கு மதிப்பளியுங்கள். அதுதான் ஜனநாயக மக்களாட்சி சட்டவாக்கத்தின் நேரிய ஒழுக்க பண்பாகும். ஆகவே எமது உரிமையை வழங்குங்கள்.

சலுகையை எதிர்பார்க்கவில்லை என்பதை புரிந்து கொள்ளுங்கள் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-4)

# பொருட்கள் தென்படாத நிலையில் அகழ்வுப் பணி கைவிடப்பட்டது



வவுனியா புண்டாரிக்குளம் தட்சணாங்குளம் இந்து மயானத்தில் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் இருப்பதாகத் தெரிவித்து கடந்த சில தினங்களாக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு மயானத்திலுள்ள வேலியை அண்டிய சில பகுதிகள் தோண்டும் பணிகள் இடம்பெற்றபோது எவ்விதமான பொருட்களும் கிடைக்கவில்லை.

கடந்த சில தினங்களாக மயானத்தில் சந்தேகத்திற்கு இடமான பலர் நடமாடியதுடன் மயானத்தின் சில பகுதிகள் தோண்டப்பட்டிருந்தன.

இதனையடுத்து குறித்த பகுதியில் விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்கள், நகைகள் இருக்கலாம் எனக் கருதி அப்பகுதியைத் தோண்டுவதற்கு நீதிமன்ற அனுமதியைப் பொலிஸார் கோரியிருந்தனர்.

இதனையடுத்து நேற்று முன்தினம் காலையிலிருந்து மயானத்தைச் சுற்றி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இன்று மயானத்திற்குச் சென்ற பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், வவுனியா பிரதேச செயலாளர், புலனாய்வாளர்கள், கிராம சேவையாளர், தொல்பொருள் ஆராட்சியாளர், மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தர் என். முருகதாஸ் முன்னிலையில் மயானத்தை தோண்டும் பணி இடம்பெற்றது. இதன்போது அங்கு பொருட்கள் எதுவும் மீட்கப்படவில்லை.

சில தினங்களுக்கு முன்னர் தோண்டப்பட்டு அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த பொருட்கள் காணாமல் போயிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (2-250-15)




# பிரதான வீதியை புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் உள்ள இத்தாவில் கிராமத்திற்கான பிரதான வீதியை புனரமைத்துத் தருமாறு பாதிக்கப்பட்ட கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கே.என்.92 கிராம அலுவலர் பிரிவான இத்தாவில் கிராமத்தின் பிரதான வீதி புனரமைக்கப்படாமையினால் வீதியைப் பயன்படுத்தும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கோயில்காடு, சதாபுரம், இத்தாவில் நல்லம்மாள் துண்டு, அரசர்கேணி ஆகிய கிராமங்களில் வசிக்கும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே இந்த பிரதான வீதியை வடிகாலமைப்பு வசதிகளுடன் புனரமைத்துத் தருமாறு பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களின் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

# வரட்சி, நிவாரணக் கொடுப்பனவுகள்; பதிவுகளை மேற்கொள்ள ஆரம்பிக்குக!

## கிளிநொச்சி அரசாங்க அதிபர் பணிப்பு

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது நிலவிவரும் வரட்சியின் பாதிப்புகள் மற்றும் நிவாரணக் கொடுப்பனவுகளுக்கான பதிவுகளை மேற்கொள்ள ஆரம்பிக்குமாறு அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பணித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கடந்த 21 ஆம் திகதி வரட்சி தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரினால் பணிக்கப்பட்டது. இது தொடர்பில் தெரியவருவதாவது,

கிளிநொச்சி மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் கடும் வரட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயம் அல்லது அதனை அண்டிய தொழில்களில் ஈடுபடும் மக்களுக்கான நிவாரணங்கள் வழங்கும் நோக்குடன் வரட்சி பாதிப்புகள் தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளுமாறும் இப்பதிவுகளை மேற்கொள்ள கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர்களை பயன்படுத்துவதுடன் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் உதவிகளையும் பெற்றுக் கொள்ளுமாறும் அரசஅதிபரால் கோரப்பட்டது.

இக் கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர், அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர், கமநல சேவை உதவி ஆணையாளர், கடல்வள நீரியல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் மற்றும் ஏனைய திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-312)

## விக்ஸ் காட்டுப்பகுதி மக்கள்

# காணி அனுமதிப்பத்திரம், வீட்டுத்திட்டம் வழங்குமாறு கோரி தொடர் போராட்டம்

### வவுனியா மாவட்ட செயலகம் முன்பாக நேற்றும் தொடர்ந்தது

வவுனியா, இராசேந்திரகுளம் விக்ஸ்காட்டு பகுதியில் வன இலகாவினருக்கான காணியில் கடந்த 6 ஆண்டுகளாக குடியிருந்த மக்கள் தமக்கான காணி அனுமதிப் பத்திரம், வீட்டுத்திட்டம் வழங்க வேண்டும் என்று தெரிவித்து நேற்றுமுன்தினம் முதல் மாவட்ட செயலகம் முன்னால் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.



நேற்றுக் காலை இராசேந்திரகுளம் விக்ஸ்காட்டிற்கு விஜயம் மேற்கொண்ட அரசாங்க அதிபர் ரோஹண புஸ்பகுமார, வன இலாகா அதிகாரி, வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, மேலதிக அரசாங்க அதிபர் உட்பட உயர்மட்டக்குழுவினர் அங்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்ததுடன், அப்பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு அருகிலுள்ள பகுதியில் 47 குடும்பங்களுக்குமான காணியைத் தெரிவு செய்தனர்.

அப்பகுதியில் மக்களை குடியமர்த்துவதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் குறித்த 47குடும்பங்களைத் தவிர வேறு எவரும் அப்பகுதிக்குள் சென்று காணி பிடித்து குடியமர முடியாது என்று வன இலகா அதிகாரிகள் தெரிவித்துள்ளதுடன், மீறி அப்பகுதியில் குடியமர்ந்தால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கருத்து தெரிவிக்கையில்,

தற்போது ஆடைத் தொழிற்சாலைக்கு அருகில் எம்மால் இனங்காணப்பட்ட பகுதியில் 47 குடும்பங்களுக்கும் காணி பகிர்ந்தளிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மூன்று மாத கால அவகாசத்தின் பின்னர் அக்காணியினை வன இலகா திணைக்களமிடமிருந்து பெற்றுத் தருவதாகவும் அது வரையில் குறித்த ஒதுக்கப்பட்ட பகுதியில் குடியிருக்குமாறும், வன இலாகா அதிகாரிகளால் எவ்வித இடையூறும் ஏற்படாது என்றும் தெரிவித்துள்ளார்.

எனினும் போராட்டம் மேற்கொள்பவர்கள் தமது வசிப்பிடக்காணியைப் பெற்றுத்தருமாறும் வேறு பகுதிகளில் தம்மால் சென்று குடியமர முடியாது என்றும் தெரிவித்து தொடர்ந்து தமது போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றனர். (2-250-15)

## 21ஆவது நாளாகவும் தொடரும் புதுக்குடியிருப்பு உணவுத் தவிர்ப்பு



புதுக்குடியிருப்பு மையப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தை வெளியேறுமாறு கோரியும் கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்களுக்கு ஆதரவாக அப் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக பொது மக்கள் முன்னெடுத்து வரும் காணி விடுவிப்பு போராட்டம் நேற்று 21 ஆவது நாளை எட்டியுள்ள அதேவேளை சுழற்சி முறையிலான உணவுத் தவிப்புப் போராட்டம் நேற்று ஒன்பதாவது நாளாகவும் தொடர்ந்தது. இந்நிலையில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கந்தையா சிவநேசன், முள்ளியவளையைச்சேர்ந்தபொது மக்கள் சிலர் கலந்து கொண்டு தங்களின் ஆதரவை வழங்கியிருந்தனர். (2-250)




## பிலவுக்குடியிருப்பு மக்களின் போராட்டத்திற்கு வவுனியா வளாக ஆசிரியர் சங்கம் ஆதரவு




கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்களின் மண்மீட்பு போராட்டம் நேற்று 24 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக ஆசிரியர்சங்கம், மாணவர்கள், ஊழியர்கள் ஆகியோர் வருகை தந்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்து அம்மக்களுக்கு ஆதரவை வழங்கினர்.

இதன்போது கேப்பாப்பிலவு காணி பிரச்சினைகளும் மக்களின் அவலங்களும் தொடர்பான அறிக்கையொன்று மேற்படி சங்கத்தினரால் வெளியிட்டு வைக்கப்பட்டது. (2-28)

## முற்றாக எரிந்த நிலையில் முச்சக்கரவண்டி மீட்பு

### மன்னாரில் சம்பவம்



(மல்லாவி)

மன்னார் பொலிஸ் நிலைய பிரிவில் உள்ள சௌத்பார் கடற்கரை காட்டுப்பகுதியில் தீயினால் முற்றாக எரிந்த நிலையில் முச்சக்கரவண்டி ஒன்றை மன்னார் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை நடைபெற்றிருக்கலாம் என பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மன்னார், சௌத்பார் கடற்கரைக்கு முன் பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் முச்சக்கர வண்டி ஒன்று முழுமையாக எரிந்த நிலையில் காணப்படுவதாக சௌத்பார் கடற்கரை பகுதியில் உள்ள கடற்படையினர் மன்னார் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே குறித்த பகுதிக்குச் சென்ற மன்னார் பொலிஸார் முச்சக்கர வண்டியை மீட்டுள்ளனர்.

எனினும் குறித்த முச்சக்கரவண்டிக்கு யாரும் உரிமை கோரவில்லை எனவும், இது தொடர்பாக எவ்வித முறைப்பாடுகளும் இதுவரை மன்னார் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குறித்த முச்சக்கர வண்டி வடக்கு மாகாணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் உரிமையாளர் தொடர்பாகவும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-15)

## பால் உற்பத்தியிலிருந்து பெறப்படும் பொருட்கள் தொடர்பில் ஆராய்வு

வவுனியா வடக்கு கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் த.செல்வராசா தலைமையில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வில் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா நேரடி விஜயம் மேற்கொண்டு இக்கூட்டுறவுச் சங்கத்தின் குறைநிறைகளை கேட்டறிந்ததோடு இச்சங்கத்தின் வளர்ச்சி தொடர்பாகவும் ஆராய்ந்தார்.

பால் உற்பத்தியிலிருந்து உருவாக்கப்படும் நெய், தயிர், யோக்கட், யூஸ் போன்றவற்றை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவது தொடர்பாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டதோடு சங்கத்தின் உற்பத்தி வளர்ச்சிகளுக்காக பாராளுமன்ற பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபா வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

உற்பத்திப் பொருட்களை மூலப் பொருட்களாக மாற்றப்பட்டு விற்பனை செய்யும் நிலையமாக வவுனியா வடக்கு கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கத்தினை மாற்ற வேண்டுமென்பது தனது எதிர்பார்ப்பு. அதற்கான உதவிகளையும் நேரடியான பங்கும் இருக்குமென பராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-15)

### வடக்கு பகுதியிலுள்ள 34 பிரதேச செயலகங்களுக்கும்

# காணி, காணாமல் போனோர் விபரங்கள் கோரி விண்ணப்பப்படிவங்கள் அனுப்பி வைப்பு

(குருமன்காடு)

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி வடக்கு பகுதியில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணி விபரங்கள் மற்றும் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட காணாமல் போனோரின் விபரங்களை வழங்குமாறும் அன்புக்கும் நட்புக்குமான இளைஞர் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அன்புக்கும் நட்புக்குமான இளைஞர் வலையமைப்பு வடபகுதியைச் சேர்ந்த 34 பிரதேச செயலகங்களுக்கும் தகவல் அறியும் உரிமைச்சட்ட விண்ணப்ப படிவங்களை தபால் மூலம் அனுப்பி வைத்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

தங்களது பிரதேச செயலக பிரிவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணியின் அளவுப் பரிமாணம் (ஏக்கர்) என்ன?, மேற்குறித்த காணியின் உரிமையாளரின் பெயர், முகவரி, தங்களின் பிரதேசத்திற்குள் தனியாட்களால் கையகப்படுத்தப்பட்டுள்ள அரசகாணியின் அளவு யாது, இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணியை இழந்தவர்களின் எண்ணிக்கை, பெயர் விபரம், முகவரி கிராம சேவையாளர் பிரிவு என்பவற்றை காணி சுவீகரிப்பு தொடர்பாக அறியும் நோக்குடன் கோரியுள்ளது.

இது தவிர, குறித்த பிரதேச செயலகத்திற்குட்பட்ட காணாமல் போனவர்களின் பெயர், முகவரி குறித்த குடும்பத்துடன் தொடர்பு கொள்ளக் கூடிய தொடர்பு இலக்கம் என்பவற்றை கிராம சேவையாளர் பிரிவு அடிப்படையில் தருக, குறித்த குடும்பத்தின் தற்போதைய குடும்ப பிரதானியின் முழுப் பெயரினையும் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கையையும் தருக என காணாமல் போனோர் தொடர்பான விபரங்களையும் அந்த அமைப்பு கோரியுள்ளது. இக்கடிதத்தைப் பெற்றுக் கொண்ட மடு பிரதேச செயலகம் மற்றும் வவுனியா பிரதேச செயலகம் என்பன உடனடியாகவே 14 நாட்களுக்குள் இது தொடர்பில் பதில் தரப்படும் என கடிதங்கள் மூலம் பதில் அனுப்பியுள்ளது. (2-250)

# அஞ்ஞான இருள் நீங்கி மெய்ஞ்ஞான ஒளிபெற்ற நாள்




இரவின் இரகசியம்

நவீன பொழுதுபோக்கு வசதிகள், வெகுஜனத் தொடர் பாடல் கருவிகள் எதுவும் வளர்ச்சியடைந்திருக்காத பண்டைய காலத்தில், பௌர்ணமி நாட்களே இரவுநேர நடமாட்டத்திற்கும் கேளிக்கைகளுக்கும் தெரிவு செய்யப்பட்டன.

நிலவொளி இல்லாத இரவுகளில், வெகு விரைவிலேயே ஊரடங்கி விடும். அக்காலப் பகுதியில், இருள் என்பது அக்கிரமங்களுக்குத் துணைபோகும் முக்கிய காரணியாக இருந்தது. அமாவாசையை ஒட்டிய தினங்கள் அதர்மச் செயல்களுக்குப் பெயர் போனவையாகக் கருதப்பட்டன. குறிப்பாக, பகலெல்லாம் உழைத்துக் களைத்தவர்கள், அலுத்துச் சோர்ந்து ஆழ்ந்து உறங்கும் நள்ளிரவு வேளை, அதர்மம் அதிகாரத்துடன் தலை விரித்தாடும் நேரமாக இருந்தது.

இத்தகைய பயங்கர மான பொழுதை நமது புராணங்கள், அன்பேயுருவான சிவ பெருமானுக்கு அர்ப்பணித்திருப்பதன் நோக்கம் சாதாரணமானதல்ல. இப்புராணக் கதைகளுக்கு அப்பால், பலராலும் அறியப் படாத அபூர்வமான சில உண்மைகள் புதைந்திருக்கின்றன.

அமாவாசையையொட்டிய இரவு, அநியாயங்களின் அதிதீவிரத்தைக் குறிக்கிறது. அறியாமை என்ற அக இருளால் நமது செயல்களில் தர்மம் நிலைகுலைகிறது. அதனால், புற வாழ்வில் துயரமும் அழிவும் இருள் போல் சூழ்கிறது. தர்மம் ஓங்கும் போது சாந்தியும் சந்தோசமும் தவழ்வதைப் போல, அது பிசகும் போது, அநாவசியத் தொல்லைகளில் அகப்பட்டுத் துன்பப்படுகிறோம். அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டி, அக இருள் போக்கக் கூடியவர் பரம்பொருள் ஒருவரே யாவார். சின்னஞ்சிறு குழந்தையொன்று தன்னை மறந்து உதவி தேடுவது போல, துன்பம் வந்ததும், உரிமையோடு, இறைவனை நாடுகிறோம். அந்த இக்கட்டான தருணத்தில், நமது அவலக் குரலுக்குச் செவிசாய்த்து, துன்பத்தை நீக்கி, சந்தோ சத்தை ஏற்படுத்தி விட்டு மறைபவர். தாய்போல் மன்னிக்கும் சிவபிரான். நன்மை பயக்கும் சிவபிரானுக்கு இர வுப்பொழுது உரித்தாக்கப்பட்டிருப்பதன் இரகசியம் இதுதான்.



திரிமூர்த்தி சிவனும் மும்மூர்த்தியரும்

பிறப்பு, இறப்புக்கு அப்பாற்பட்ட அவர், பூவுலகில் தாய் வயிற்றில் தோன்றித் தனக்கென ஒரு சரீர உருவம் தாங்காதவர். இருப்பினும், ஜீவாத்மாக்களுடைய நலன் கருதி, பூவுலகத்தில் அவதரித்து, பிரம்மா, விஷ்ணு, சங்கரர் மூலம் முத்தொழில்களையும் ஆற்றுகிறார். அதனால், அவர் திரிமூர்த்தி சிவன் எனப்படுகிறார்.

நாமும் வாழ்வில் முத்தொழில்களையும் ஆற்றுகிறோம்.

சிறந்த முறையில் படைத்தல், காத்தல், அழித்தலைச் செய்கின்றவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறார்கள். இங்கே படைத்தல் என்னும் செயற்பாடு, நமக்குள்ளே ஆழத்தில் புதைந்திருக்கும் இயல்பான குணங்களாகிய அன்பு, தூய்மை, சந்தோசம், அமைதி, ஞானம் என்பனவற்றை வெளித் தோன்றச் செய்வதாகும். அழித்தல் என்பது தன்னைப் பற்றிய தவறான புரிந்துணர்வால் ஏற்பட்ட காமம், கோபம், ஆசை, அகங்காரம், பற்று ஆகியவற்றை அடியோடு அழிப்பதாகும். படைக்கப்பட்ட நற்குணங்களை அவதானமாகப் பேணிப் பராமரிப்பது காத்தல் செயற்பாடு ஆகும்.

சருகு நிறைந்த வாளியொன்றிலே நீரை ஊற்றிக் கொண்டே செல்லும் போது, அவை தானாகவே மேலே வந்து, வெளியேறி விடும். உள்ளூர உள்ள நல்லியல்புகளை வெளித்தோன்றச் செய்யும் போது, தகாத இயல்புகள் காலப் போக்கில் தானாகவே அழிந்து போய் விடும். அதன்பின், புதிய மனோநிலையைப் பேணிப் பாதுகாக்கும் பணியே எஞ்சியிருக்கிறது.

இவ்வருடம் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சுகதாமம் மண்டபத்தில் மனித வாழ்வின் முழுமையை உணர்த்தும் "அர்த்த நாரீஸ்வரர்" என்ற கருப்பொருளில் பிரபல கலைஞர்களின் கலைநிகழ்வுகள் பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

அதனைத் தொடர்ந்து வரணி வடக்கு சிமிழ் கண்ணகி அம்மன் ஆலயத்தில் மாலை 7 மணி தொடக்கம் சிறப்பு ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. நிகழ்வில் பிரபல கலைஞர்களால் நடத்தப்படுகின்ற கலை நிகழ்வுகள், வீடியோ படக் காட்சிகள் விளக்கவுரைகள் போன்ற பல அம்சங்கள் உள்ளடக்கப்படுகின்றன. இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு நன்மை பெற அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

பிரம்மகுமாரிகள்
இராஜயோக
நிலையங்கள்
யாழ்., கிளிநொச்சி
மாவட்டங்கள்.

## மகா சிவராத்திரிப்பெருவிழா

புங்குடுதீவு கிழக்கு மாவுதில் அருள்மிகு நாயன்மார்ன வழங்கும் நாகேஸ்வரி சமேத நாகேஸ்வரன் ஆலய மகா சிவராத்திரிப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமைமாலை 6மணிக்கு நான்கு சாமப் பூஜை களுடன் அபிஷேக ஆராதனை என்பனவற்றுடன் இடம்பெறும்.

இச்சிவராத்திரி தினத்தில் யாழ்ப்பாணம் நாட்டார் அழகியற்கழகம் வழங்கும் கலா பூஷணம் வே.சிதம்பரநாதனின் நெறியாள்கையில் காத்தவராயன் சிந்துநடைக் கூத்து இடம்பெறும். (இ-3)

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தால் நடத்தப்படும் மகா சிவராத்திரி விழா இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் மாலை 6 மணி முதல் இடம்பெறும்.(இ-3)

## மகா சிவராத்திரியை முன்னிட்டு இன்று விடுமுறை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை நெல்லியடி வர்த்தக சங்கத்திற்குட்பட்ட கடைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-3-60)

## நல்லிணக்கத்தை ஏற்படுத்திய மத நல்லிணக்கக் கோபுரம்







சுழிபுரம் பறாளை பகுதியில் உள்ள ஈஸ்வர் தேவஸ்தானத்துக்கு அருகில் அமைந்துள்ள மத நல்லிணக்கக் கோபுரம், இனங்களிடையே மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக சோளியூரான் பிறைசூடி குரு தெரிவித்துள்ளார்.

எமது மாவட்டத்தில் மதங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக இந்து, பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய நான்கு மதங்களையும் பிரதிபலித்து காட்டுகின்ற வகையில் அந்தந்த மதங்களின் சின்னங்களை உள்ளடக்கி இக் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.


கோபுரத்தின் அடிப்பகுதியில் சுவாமி விவேகானந்தருடைய சிலை அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அனைத்து மதத்தினருக்கும் இடையே இன ரீதியான ஒற்றுமையை ஏற்படுத்த முடியும் என்ற நோக்குடன் இக்கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு கிறிஸ்தவ மதத்தினர் வந்து தமது பிள்ளைகளுக்கு ஏடு தொடக்குகின்றனர். பௌத்த மதத்தினர் இங்கு வந்து அர்ச்சனை செய்து வழிபட்டு செல்கின்றனர். சமத்துவமான முறையில் அனைத்து மதத்தினரும் வருகை தருகின்றனர். இது இனங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# பெண்கள் ஆட்சி செய்த மர்மங்கள் நிறைந்த சாகோன் நாகரிகம்







ஆராய்ச்சியாளர்களின் புதிய கண்டுபிடிப்பின் படி சாகோன் எனும் மர்மம் நிறைந்த நாகரிகத்தை பெண்களே ஆட்சி செய்ததாகவும், அவர்கள் தங்களது சக்திகளை தங்களின் மகள்களுக்கு வழங்கியதாகவும் கூறப்படுகிறது.

பூமி பிரபஞ்சத்தில் 1000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சாகோன்கள் இன்றைய நியூ மெக்ஸிக்கோ பகுதிகளில் வாழ்ந்து வந்துள்ளனர்.

மர்மம் நிறைந்த நாகரிகத்தினராக பார்க்கப்படும் சாகோன்கள் 100 இற்கும் அதிகமான அறைகள் கொண்ட லாவிஷ் கற்களால் ஆன வீடுகளில் வசித்து வந்துள்ளனர்.

வரலாற்றில் இருந்து கி.பி. 1140களில் மறைந்து போன இந்த பண்டைய நாகரிகம் பல்வேறு பெரிய கற்களால் ஆன வீடுகளை மட்டும் விட்டுச் சென்றுள்ளது.

இவற்றில் 100 இற்கும் அதிகமான அறைகள் இருப்பது இன்றைய ஆராய்ச்சியாளர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

சாகோன் நாகரிகத்தின் மிகப்பெரிய வீடு நியூமெக்ஸிக்கோவின் சாகோ காண்யோன் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பியூப்லோ பாணிட்டோ என அழைக்கப்படும் இந்த வீட்டில் மொத்தம் 650 அறைகள் உள்ளன, பியூப்லோ பாணிட்டோ சார்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் சாகோன் நாகரிகத்தை பெண்கள் தான் ஆட்சி செய்துள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

உயர் பிரிவினருக்காக ஒதுக்கப்பட்ட கல்லறைகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சாகோன்கள் தங்களது சக்திகளை தாய்மரபு மூலம் கி.பி 800-1130 வரை தலைமுறையினரிடையே கடந்து வந்திருப்பது தெரியவந்துள்ளது.

பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தொல்பொருள் ஆய்வாளர்கள் சாகோன்களின் அறை எண் 33-இல் இருந்து உயர் பிரிவினரின் மரபணுக்களை சேகரித்துள்ளனர்.

அங்கு கண்டெடுக்கப்பட்டுள்ள சடலங்கள் பார்க்க ஒரே மாதிரியானதாகவும், ஒரே மரபணு குடும்பத்தை சேர்ந்ததாகவே இருந்துள்ளன.

40 வயதில் மரணித்த பெண்மணி, அவரின் பெயர் மற்றும் 45 வயது பெண்மணி மற்றும் அவரின் மகளின் சடலங்கள் அங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இத்துடன் தலையில் காயம் ஏற்படுத்தப்பட்டு 40 வயதில் மரணித்த ஆண் மண்டை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. (இ-12)

# வேகமாகப்பரவும் பன்றிக்காய்ச்சல்

(கோவை)

தமிழகத்தில் கோவை, திருப்பூர், மதுரை, திருச்சி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் வேகமாகப் பரவி வரும் பன்றிக்காய்ச்சலால் 2 மாதத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14ஆக அதிகரித்துள்ளது. தமிழகத்தில் கடந்த 2 மாதங்களில் பல்வேறு வைத்தியசாலைகளில் 1020 பேருக்கு மேற்பட்டவர்கள் பன்றிக் காய்ச்சல் பாதிப்புகளுக்காக சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதில் கடந்த 2 நாட்களில் மட்டும் கோவையில் மூவரும், மதுரையில் ஒருவரும், திருச்சியில் ஒரு குழந்தை என மொத்தம் 5 பேர் இறந்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனையடுத்து கடந்த 2 மாதத்தில் பன்றிக்காய்ச்சலால் உயிரிழந் தவர்களின் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளது.

கோவை மாவட்டத்தில் இந்தக் காய்ச்சலால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தற்போதைய நிலவரப்படி கோவை அரசு வைத்தியசாலையில் 37 பேர் பன்றிக் காய்ச்சல் பாதிப்புகளுக்காக சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களுக்கு சிறப்புப் பிரிவில் வைத்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பன்றிக் காய்ச்சலுக்கு சிகிச்சை பெற்று வந்த கோவை சவுரிபாளையத்தை சேர்ந்த மைக்கேல் ராஜ் என்பவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

அதேபோல பகவதி என்பவரும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு அரசு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்தார். இவருக்கும் பன்றிக்காய்ச்சல் இருந்தது. இந்நிலையில் சிகிச்சை பலனின்றி இவரும் உயிரிழ்ந்தார்.


இதனையடுத்து பன்றிக் காய்ச்சல் குறித்த பீதி பொது மக்களிடையே மேலும் அதிகரித்துள்ளது. தமிழகத்தில் கடந்த 3 மாதங்களில் 1100 பேருக்கு பன்றிக் காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதில் 14 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-12)

# திருவிழாவில் பயங்கரம்

இந்தியாவில் கோவில் திருவிழாவின் போது 60 அடி தேர் கவிழ்ந்து பக்தர்கள் மீது விழுந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடகா மாநிலம் பெல்லாரியில் உள்ள கொட்டுரேஸ்வர கோவில் திருவிழாவிலே இந்த பயங்கர விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த தேர் திருவிழாவில் கலந்துகொண்ட ஆயிரக்கணக்கானோர் பக்தியுடன் தேரை இழுத்துக்கொண்டிருந்த போது திடீரென தேர் கவிழ்ந்து பக்தர்கள் மீது விழுந்துள்ளது.



இதில் தேரின் சக்கரத்தில் சிக்கி பலர் காயமடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விபத்தில் 6 பேர் காயமடைந்துள்ளதாக முதற்கட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும், விபத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து இதுவரை அதிகாரபூர்வ தகவல் ஏதும் வெளியாகவில்லை.

தேர் கவிழும் நிகழ்வை சம்பவ இடத்திலிருந்த நபர் ஒருவர் தனது தொலைபேசியில் பதிவு செய்துள்ளார். தற்போது, குறித்த அதிர்ச்சி காட்சி இணையத்தில் வெளியாகியுள்ளது. (இ-12)

# மகளை பார்ப்பதற்காக முகாமிற்குள் மறைந்திருந்த இலங்கையர் கைது

இலங்கையர் ஒருவர் சட்டவிரோதமான முறையில் இந்தியாவுக்கு சென்ற குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மண்டபம் அகதிகள் முகாமில் வைத்தே 42 வயதுடைய அந்தோனி தாஸ் என்ற தமிழர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்த மாதம் 09 ஆம் திகதி தலைமன்னாரில் இருந்து குறித்த இலங்கையர் குட்டி என்ற மற்றைய நபருடன் படகு மூலம் இந்தியாவுக்கு சென்றுள்ளார்.

பின்னர், சந்தேகநபர்களால் கைவிட்டுச் சென்ற படகை அரிச்சல்முனைப் பகுதியில் வைத்து இந்திய பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். இந்திய பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த முறைப்பாட்டிற்கு அமைய பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இதன் பின்னரே சந்தேக நபர் மண்டபம் அகதிகள் முகாமில் மறைந்திருந்த நிலையில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர், சேலம் அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் தன் மகளை பார்ப்பதற்காகவே வருகைத் தந்துள்ளார் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இருப்பினும் சட்டவிரோதமாக இந்தியாவிற்கு செல்ல முயன்ற குற்றத்திற்காக அந்தோனிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், குட்டி என்ற சந்தேகநபரை கைது செய்வது தொடர்பாகவும் பொலிஸார் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை, கைது செய்யப்பட்ட இலங்கையர் நீதித்துறை தடுப்புகாவலில் வைக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

# கலவரம் செய்து ஆட்சியை கலைக்க ஸ்டாலின் முயற்சி

## டி.டி.வி.தினகரன் குற்றச்சாட்டு

சட்டமன்றத்தில் கலவரம் செய்து ஆட்சியை கலைக்க மு.க.ஸ்டாலின் திட்டமிட்டதாக அ.தி.மு.க. துணை பொதுச்செயலாளர்டி.டி.வி. தினகரன் குற்றம்சாட்டியுள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் சசிகலா சொத்துக்குவிப்பு வழக்கில் சிறை சென்றபோது துணை பொதுச் செயலாளராக அவரது அக்காமகன் டி.டி.வி.தினகரனை கட்சியின் துணை பொதுச் செயலாளராக நியமித்தார்.

டி.டி.வி.தினகரன் நேற்று அ.தி.மு.க. தலைமைக் கழகத்துக்கு வந்தார். நண்பகல் 12 மணிக்கு வந்த அவருக்கு கட்சியின் மூத்த நிர்வாகிகள், தொண்டர்கள் உற்சாக வரவேற்பு கொடுத்தனர்.

பின்னர் அவர் தனது அறைக்கு சென்று பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அவைத் தலைவர் செங்கோட்டையன், பாராளுமன்ற துணை சபாநாயகர் தம்பித்துரை, அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன், தங்கமணி, வேலுமணி, அன்பழகன், ஜெயக்குமார், காமராஜ், திருத்தணி அரி எம்.பி., வேணுகோபால் எம்.பி. மற்றும் மாவட்ட செயலாளர் கலைராஜன்,



எம்.ஜி.ஆர். மன்ற மாவட்ட செயலாளர் தெய்வேந்திரன், கமலகண்ணன், திருச்சி மனோகரன் ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்தனர். பின்னர் டி.டி.வி.தினகரன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். ஜெயலலிதா கூறியதால் தான் கட்சியை விட்டு ஒதுங்கி இருந்தேன். கட்சியின் விதிமுறைப்படிதான் சசிகலா பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். கட்சியின் கணக்கு விபரங்களை பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன் கவனித்து வருகிறார்.

ஓ.பன்னீர்செல்வத்தின் செயற்பாடு அ.தி.மு.க. என்ற எஃகு கோட்டையை பாதிக்காது. கட்சி, ஆட்சியில் தனி நபர், குடும்ப என்ற ஆதிக்கம் இருக்காது.

சட்டமன்றத்தில் கலவரம் செய்து ஆட்சியை கலைக்க மு.க.ஸ்டாலின் திட்டமிட்டார். அது நடக்கவில்லை. தோல்வியின் விரக்தியில் அவர் செயற்படுகிறார். மக்கள் அ.தி.மு.க. மீது கோபமாக இருப்பதாக சொல்வது பொய் பிரசாரம்.

தி.மு.கவினர் மக்கள் என்ற போர்வையில் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகிறார்கள். வருகிற பாராளுமன்ற தேர்தலிலும் அ.தி.மு.க. வெற்றி பெறும். 2021இல் மீண்டும் அ.தி.மு.கவே ஆட்சியை பிடிக்கும்.

ஓ.பி.எஸ். என்பது ஒரு அணி அல்ல. அது ஒரு சிறு குழுதான். தாய் கழகத்தில் இருந்து பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்தால் தாய் மனதோடு ஏற்றுக்கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-12)

# அமெரிக்காவின் ஒருதலைப்பட்ச தீர்மானங்களை ஏற்க முடியாது

## மெக்ஸிக்கோ அறிவிப்பு




(வோஷிங்டன்)

ஒரு அரசாங்கத்தினால் திணிக்கப்படும் ஒருதலைப் பட்சமான தீர்மானங்களை ஏற்க முடியாது என மெக்ஸிக்கோ வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினால் வெளியிடப்பட்டுள்ள திருத்தியமைக்கப்பட்ட பயணத் தடை உத்தரவின் பிரகாரம், சட்டவிரோத குடியேற்றவாசிகள் நாடுகடத்தப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உரிய ஆவணங்களை கொண்டிராதவர்கள் மெக்ஸிக்கோவிற்கு நாடுகடத்தப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

ட்ரம்பின் குறித்த திட்டத்திற்கு மெக்ஸிக்கோ தமது கடும் கண்டனத்தை தெரிவித்துள்ள அதேவேளை, இவ்வாறு இன்னொரு அரசினால் திணிக்கப்படும் திட்டங்களை ஏற்க முடியாது என வெளியுறவுத் துறை அமைச்சர் கூறியுள்ளார்.

ட்ரம்பின் திட்டத்தினால் மெக்ஸிக்கோ ஆத்திரமடைந்துள்ள நிலையில், இது தொடர்பில் விவாதிப்பதற்காக அமெரிக்க இராஜாங்க செயலாளர் ரெக்ஸ் டில்லர்சன் மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு தலைவர் ஜோன் கெலி ஆகியோர் மெக்ஸிக்கோ விஜயம் செய்துள்ளனர்.

மெக்ஸிக்கோவை சென்றடைந்த அமெரிக்க உயர் மட்ட அதிகாரிகளை மெக்ஸிக்கோவிற்கான அமெரிக்க தூதுவர் வரவேற்றார். இந்நிலையில், அமெரிக்க அதிகாரிகளுக்கும், மெக்ஸிக்கோ ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது. (இ-12)

# பாக். தலிபான் தளபதி உள்ளிட்ட 8 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை



(கராச்சி)

பாகிஸ்தானில் கராச்சி நகரில் பொலிஸாருடன் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சண்டையின்போது, தலிபான் தளபதி ஒருவர் உட்பட 8 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானில் சிந்து, பலுசிஸ்தான், கைபர் பக்துங்வா, பட்டா, பஞ்சாப் மாகாணங்களில் தொடர்ந்து கடந்த 10 நாட்களாக தீவிரவாத தாக்குதல்கள் நடந்து வருகின்றன.

இந்தத் தாக்குதல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல்கள் காரணமாகவும் அமெரிக்காவின் தொடர் நிர்ப்பந்தத்தின் காரணமாகவும், தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு நவாஸ் ஷெரீப் அரசு பாதுகாப்பு படைகளுக்கு உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து நாடு முழுவதும் தீவிரவாதிகள் தேடுதல் வேட்டை முடுக்கி விடப்பட்டுள்ளது. 100இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் அண்மைக் காலத்தில் கொல்லப்பட்டும் உள்ளனர்.

இந்த நிலையில் பாகிஸ்தானின் துறைமுக நகரான கராச்சியில் மாலிர் பகுதியில் பக்ராபீரி வீதியில் தலிபான் இயக்க பயங்கரவாதிகள் பதுங்கி இருந்து கொண்டு அந்த நகரில் பயங்கரவாத தாக்குதல்கள் நடத்துவது தொடர்பாக சதித் திட்டம் தீட்டி வருவதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து நேற்று அங்கு விரைந்த பொலிஸார் தீவிரவாதிகள் பதுங்கி இருந்த இடத்தை சுற்றி வளைத்தனர்.

உடனே தீவிரவாதிகள், பொலிஸ் படையினர் மீது துப்பாக்கியால் சுட்டனர். பொலிஸார் தங்கள் துப்பாக்கிகளால் அவர்களுக்கு சரியான பதிலடி கொடுத்தனர். நீண்ட நேரம் இந்த துப்பாக்கி சண்டை நீடித்தது.

அதன் முடிவில் 8 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் பாகிஸ்தான் தலிபான் இயக்கத்தின் தளபதி குல் ஜமான் என் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-12)

# திருத்தப்பட்ட பயணத்தடை உத்தரவை வெளியிட்டார் ட்ரம்ப்



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் திருத்தியமைக்கப்பட்ட பயணத் தடை உத்தரவினை நேற்று முன்தினம் வெளியிட்டார்.

இந்த உத்தரவின் பிரகாரம் அமெரிக்காவில் குடியிருக்கும் வெளிநாட்டினர் சிறிய குற்றச் செயல்களில் ஈடுபட்டாலோ அல்லது எல்லைதாண்டி வந்தாலோ கைது செய்யப்பட்டு வெளியேற்றப்படுவர் என்று கூறப்பட்டுள்ளது. ட்ரம்பின் இந்த புதிய தடை உத்தரவினால் அமெரிக்காவிலுள்ள இலட்சக்கணக்கான வெளிநாட்டினர் வெளியேற்றப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் இந்த தடை உத்தரவு அமெரிக்காவில் தங்கியிருக்கும் வெளிநாட்டினர் மீது நடத்தப்படவுள்ள மறைமுக தாக்குதலாகவும் கருதப்படுகின்றது. அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்று ஒருசில நாட்களில் ஏழு முஸ்லிம் நாடுகளிலிருந்து அகதிகள் மற்றும் குடியேற்றவாசிகள் அமெரிக்காவினுள் நுழைவதற்குத் தடை விதித்தார். ட்ரம்பின் இந்த தடை உத்தரவுக்கு உலக நாடுகளில் மாத்திரமன்றி அமெரிக்காவிலும் பல்வேறு எதிர்ப்புக்கள் கிளம்பிய நிலையில் ட்ரம்பின் இந்த உத்தரவுக்கு அமெரிக்க நீதிமன்றம் தடை பிறப்பித்தது. இந்நிலையில், திருத்தம் செய்யப்பட்ட புதிய தடை உத்தரவை ட்ரம்ப் நேற்று முன்தினம் பிறப்பித்துள்ளார். (இ-12)

# கலிபோர்னியாவில் வெள்ளப்பெருக்கு!

கலிபோர்னியாவின் சான்ஜோஸ் பகுதியில் தொடர்ச்சியாக பெய்த மழையை அடுத்து குறித்த பகுதிகளில் பாரிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் பொது மக்கள் மற்றும் அவர்களின் செல்லப் பிராணிகளை பாதுகாப்பாக உலர் நிலங்களுக்கு அழைத்துச் செல்லும் நடவடிக்கையில் மீட்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

படகுகளைப்பயன்படுத்தி மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

வெள்ளநீரின் மட்டம் அதிகரித்து வருவதால் சுமார் 500 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக சான் ஜோஸ் மேயர் தெரிவித்துள்ளார். (இ-12)




# காற்றில் இயங்கும் கார் விரைவில் விற்பனைக்கு




அழுத்தப்பட்ட காற்றினை எரிபொருளாகக் கொண்டு டாடா நிறுவனம் வடிவமைத்துள்ள எயார்பொட் (Airpod) வகை கார்கள் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படாத வகையில் பெற்றோல், டீசலுக்கு மாற்றாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் இயங்கும் கார்கள் உருவாக்கம் குறித்து உலகின் பல்வேறு பகுதிகளிலும் ஆய்வுகள் நடந்து வருகின்றன.

பெற்றோல், டீசலுக்கு மாற்றாக மின்சாரத்தில் இயங்கும் மின்கல கார்களே இதுவரை முன்னிறுத்தப்பட்டு வந்தன.

எயார்பொட் என்று பெயரிடப்பட்டுள்ள இந்தவகை கார்களின் முதற்கட்ட சோதனைகள் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னரே முடிந்தது. இதனால் எயார்பொட் வகை கார்களை எதிர்வரும் 2020 ஆம் ஆண்டளவில் விற்பனைக்குக் கொண்டுவர டாடா நிறுவனம் முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. (இ-12)

# மரபணு மாறியதால் 57 குரங்குகள் ஜப்பானில் கொலை செய்யப்பட்டன



ஜப்பானில் உள்ள டாக்கா கோயாமா உயிரியல் பூங்காவில் மரபணு மாறியதால் 57 குரங்குகள் கொல்லப்பட்டன.

ஜப்பானின் வடக்கு பகுதியில் பனி குரங்குகளுக்கு பெயர்போன, உயிரியல் பூங்கா ஒன்றில் அதன் பராமரிப்பில் இருந்த 57 குரங்குகளின் உடலில் வேறொரு இனத்தின் மரபணு கண்டுபிடிக்கப்பட்டது.

ஜப்பானில் ஆபத்தான தாகக் கருதப்படும் அந்நிய குரங்கு இனமான ரீசஸ் மாகாக் இன குரங்குகளுடன் கலப்பினம் செய்யப்பட்டுள்ளது என அவற்றின் டி.என்.ஏவை பரிசோதித்த போது தெரிய வந்தது.

சோதனை செய்யப்பட்ட 164 குரங்குகளில், 57 குரங்குகளுக்கு மரபணு மாறியிருப்பது கண்டறியப்பட்டது.

இதனை அடுத்து 57 குரங்குகள் கொல்லப்பட்டன.

மீதமுள்ள 107 குரங்குகளை உயிரியல் பூங்காவில் பாதுகாத்து வருகின்றனர்.

மேலும் உள்நாட்டுசூழலை பாதுகாக்க அவைகளை கொல்ல வேண்டிய அவசியம் வந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த குரங்குகள் விஷ ஊசி ஏற்றி கொல்லப்பட்டன. (இ-12)

# குண்டுத்தாக்குதலில் 3 பேர் உயிரிழப்பு

ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகள் வைத்திருந்த சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் அப்பாவி மக்கள் 3 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர், 6 பேர் படுகாயம் அடைந்தனர்.

ஈராக் நாட்டில் கிர்குக் நகரில் சில பகுதிகளை 2014 ஆம் ஆண்டு முதல் ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தினர் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். அங்கு வசித்து வருகின்ற குடிமக்கள் அங்கிருந்து வெளியேறக் கூடாது என அவர்கள் தடை விதித்துள்ளனர்.

அப்படித் தப்பியோடுகிறவர்களையும் அவர்கள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தியும், துப்பாக்கிச் சூடு நடத்தியும் கொன்று விடுகின்றனர். ஆனால் அதற்கு மத்தியிலும் அங்கு வசித்து வருகின்ற மக்கள் அவ்வப் போது அங்கிருந்து தப்பி ஓடுகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் கிர்குக் நகரின் ஹாவிஜா பகுதியில் இருந்து சிலர் தப்பி ஹாம்ரீன் மலைப் பகுதியை அடைந்தனர். ஆனால் அங்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் வைத்திருந்த சக்தி வாய்ந்த குண்டு வெடித்த போது அதில் அவர்கள் சிக்கிக் கொண்டனர். இதில் 3 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். 6 பேர் படுகாயம் அடைந்தனர்.

அவர்கள் அங்கிருந்து மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அந்த சம்பவம் கிர்குக் பகுதி மக்கள் மத்தியில் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (இ-12)

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்க புதிய தேசிய ஆணைக்குழு

## அரசு அவசர அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தொடர்ந்து இடம்பெறும் பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் சட்டநடவடிக்கைகளை எடுப்பதற்காக புதிதாக தேசிய ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

தமிழர் பகுதிகளில், போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள், இராணுவத்தினராலும் அரச அதிகாரிகளாலும் பாலியல்ரீதியான துன்புறுத்தல்களை எதிர்கொள்வதாக, எழுந்த குற்றச்சாட்டுகளை அடுத்து, அரசாங்கம் இந்த அவசர அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க பணியகத்தின் தலைவரான சந்திரிகா குமாரதுங்க இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

எனினும், இலங்கை இராணுவம் இந்தக் குற்றச்சாட்டை மறுத்திருந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 34 ஆவது அமர்வு எதிர்வரும் 27ஆம் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்த விவகாரம் அரசாங்கத்துக்கு நெருக்கடியாக அமையலாம் என்பதைக்கருத்தில்கொண்டே, பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கான தேசிய ஆணைக்குழுவை அமைக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

பெண்களுக்கு எதிராக குற்றமிழைத்தவர்களைச் சட்டத்தின் முன்நிறுத்தும் அதிகாரம் இந்த ஆணைக் குழுவுக்கு வழங்கப்படும் என்றும் அரசாங்க அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## ஐ.ம.சு. முன்னணி ஆதரவுடன் அரசியலமைப்பு இடைக்கால அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும்-கிரியெல்ல



(கொழும்பு)

புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகளை மேற்கொண்டுவரும் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையானது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இணக்கப்பாட்டுடன் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இரண்டு பிரதான கட்சிகளும் கைகோர்த்து புதிய அரசாங்கத்தை அமைத்துள்ளன. இதனூடாக நீண்டகால அரசியல் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்குரிய வரலாற்று சந்தர்ப்பம் உருவாகியுள்ளது.

இந்த நிலையில், அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கான வழிநடத்தல் குழு இதுவரை 50 தடவைகள் கூடியுள்ளது.

இந்தக் குழுக் கூட்டத்தின்போதும் அதிகாரப்பகிர்வு குறித்த கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளதாக அமைச்சர் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

சிறுபான்மையின மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கே வாக்களிக்கின்றனர். எனவே, அவர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்குரிய பொறுப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருக்கின்றது. அதை மறந்து செயற்படமுடியாது என அமைச்சர் கிரியெல்ல கூறியுள்ளார்.(செ-1)

## ரத்ன தேரர் 28 ஆம் திகதி விசேட அறிவிப்பு

தன்மீது சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டு மற்றும் முறைப்பாடுகள் தொடர்பில் எதிர்வரும் 28 ஆம் திகதி விசேட அறிவிப்பொன்றை மேற்கொள்ளவுள்ளதாக அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

இதுவரை தான் அமைதியாக என்ன நடைபெறுகின்றது என்பதை அவதானித்துக் கொண்டிருந்ததாகவும், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தான் விடுக்கும் விசேட அறிவிப்பில் பல்வேறு சந்தேகங்கள் தெளிவாகும் எனவும் ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

ரத்ன தேரர் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றம் சென்றவர். இவர் அண்மையில் சுயாதீனமாகச் செயற்படுவதற்கு எடுத்துள்ள தீர்மானம், ஜாதிக ஹெல உறுமய கட்சிக்குள் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)





## இன்னும் சில மாதங்களில் 5இலட்சம் வேலைவாய்ப்பு

### நிதியமைச்சர் ரவி தெரிவிப்பு

இன்னும் சில மாதங்களில் ஐந்து இலட்சம் வரையான வேலைவாய்ப்புக்கள் இளைஞர், யுவதிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதாக, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டத்திற்கு அமைய இந்த வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மட்டக்குளிய பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### வீணாக்குவதுண்டா?

சிலருக்கு எதுவும் அநாவசியம். திருமணத்திற்குப் போவார்கள். சாப்பாட்டு இலைக்கு முன்பு பசியே இல்லாமல் அமருவார்கள். பரிமாறும் போது வேண்டாம் என்று சொல்லித் தொலைக்கமாட்டார்கள்.

"கொஞ்சம் போதும்" என்றும் வாய் முத்து உதிர்க்கமாட்டார்கள். சும்மா குதறி விட்டு எழுந்து விடுவார்கள். இப்படி அக்கிரமமாக வீண் செய்வார்கள்.

இந்தத் திருமணத்தை நடத்துபவர் எப்படித் தன் ஜென்மச் சேமிப்பையெல்லாம் திரட்டி இந்தத் திருமணத்தை நடத்துகிறார்?

அவரது இரத்தத்தையும் வியர்வையையும் சுண்டச் செய்த இந்தச் செலவீனத்தை நாம் வீணடிக்கலாமா? இப்படி எந்த ஒரு நினைப்பும் இவர்களுக்குள் தோன்றவே தோன்றாது.

பிறர் விடயத்திலும் தான் இப்படி என்றால் தன் விடயத்திலும் அப்படி! வீட்டில் ரேடியோ கத்தும்; தொலைக்காட்சி பாடும்; விசிறி ஓடும்; ஏகப்பட்ட விளக்குகள் எரியும். இவர்களோ தோட்டத்திலோ வாசலிலோ நின்று கொண்டிருப்பார்கள். நான் ஓர் உறவினர் இல்லத் திருமணத்தில் கலந்து கொண்டுவிட்டுத் திருப்பினேன். சாப்பிட நேரமில்லாததால் இரவுச் சாப்பாடு என் கையில் பொட்டலமாக தரப்பட்டது.

எனக்கோ வயிறு சரியில்லை. ரயிலின் ஜன்னல் வழியே தூக்கி வீசியிருக்கலாம். மனமில்லை. இரு ரயில் நிலையங்களையும் தாண்டி நின்ற ஒரு சந்தியில் ஒரு சிறுவன் கையை நீட்டினான். பார்சலைத் தூக்கிக் கொடுத்தேன்; அவன் கண்களில் பிரகாசம், தள்ளிப்போய் சாப்பிட வேண்டும்; வீட்டுக்கு எடுத்துப் போக வேண்டும் என்பது கூட அவனுக்குத் தெரியவில்லை. அவ்வளவு பசி! என் கண்ணெதிரே பிரித்து ஐந்து நிமிடத்தில் உணவை உருட்டித் தள்ளி விட்டு என்னைத் திருப்தியுடன் ஒரு பார்வை பார்த்தான். அதற்கிணையான மகிழ்ச்சியை நான் இதுவரை பெறவில்லை.

வீட்டில் உணவு வீணாகிக் கொண்டிருக்கும். இவர்களோ ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு வருவார்கள்.

வாகனத்தை ஸ்டார்ட் செய்து விட்டு நிமிடக் கணக்கில் பேசிக் கொண்டிருப்பார்கள். ஏன் இன்ஜினை அணைத்தால் என்ன?

பஸ்ஸில் போகவேண்டிய இடத்திற்கு ஆட்டோவில் போய் வீணாக்குவார்கள்.

பத்து நிமிடம் முன்னதாகப் போய் டிக்கெட் வாங்க மாட்டார்கள். கள்ளச் சந்தையில் நான்கு மடங்கு அதிகம் கொடுத்து டிக்கெட் வாங்கிப் படம் பார்ப்பார்கள்.

ஒரு குண்டூசியைக் கூட குப்பைத் தொட்டியில் வீசக் கூடாது. வீணாக்கும் குணம் நம்மைச் சரிவில் தள்ளும்.

சிக்கனத்தைப் பற்றி நான் பேச வரவில்லை. எந்த ஒரு சிறு விடயத்திலும் வீணாக்கும் குணம் கூடாதென்றேன்.

சுயமாகச் சம்பாதித்தாலும் சரி, பரம்பரைச் சொத்தானாலும் சரி, பிறருடையதாகவோ பொதுச் சொத்தாகவோ இருந்தாலும் சரி எதையும் விரயம் செய்யும் உரிமை நமக்குக் கிடையாது. இவர் எதையும் வீணாக்குவதே இல்லை என்ற மற்றவர்களின் பாராட்டைப் பெறுவதற்காக அல்ல, நம் நன்மைக்கேனும் வீணாக்கும் குணத்தை விட்டொழிக்க வேண்டும்.

**லேனா தமிழ்வாணன்**

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்- பகுதி 1

ஆசிரியர்: திரு.மு.வே.அன்பழகன்

**☛ 01 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**


01) விடுபட்ட எண் யாது?

2 x ☐ + 4 = 10


1) 3 2) 5 3) 6 4) 8

02) எந்த ஓட்ட வீரர் மிகப்பெரிய எண்ணைக் கொண்ட உடையை அணிந்துள்ளார்?


1) 2) 3) 4)




03) தரப்பட்ட படங்கள் இரண்டும் கொடிகளைக் குறிக்கின்றன.




எந்த வடிவம் இரண்டு கொடிகளிலும் உள்ளது.

1)  2)  3)  4) 

04) 6 x 9 = ☐

1) 15 2) 45 3) 48 4) 54

05) தரப்பட்ட மீன்களில் நிழற்றப்பட்ட மீன்களின் பின்னம் யாது?



1) $\frac{1}{2}$ 2) $\frac{1}{5}$ 3) $\frac{1}{3}$ 4) $\frac{1}{4}$

06) பின்வருவனவற்றில் 6 இன் பெருக்கமாக வருவது.

1) 4 2) 24 3) 38 4) 40

07) 1207 இல் இலக்கம் 1 இன் இடப்பெறுமானம் யாது?

1) 1 2) 10 3) 100 4) 1000

08) வாக்கியங்களைக் கொண்டு சம்பவம் ஒன்றின் சரியான ஒழுங்கினைத் தரப்பட்டுள்ள விடையிலிருந்து தெரிவு செய்க.

(1) வீட்டிற்குச் செல்லல்
(2) உடலியக்கச் செயற்பாட்டில் ஈடுபடல்
(3) இடைவேளை
(4) காலை 8.00 மணிக்கு காலைப் பிரார்த்தனை ஆரம்பமாதல்
(05) கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறல்

09) LIVED என்பது DEVIL என அமைந்தால் 6323 என்பது எவ்வாறு அமையும்

1) 2336 2) 3236 3) 3326 4) 6232

**♦ கோலத்திற்கேற்ப அடுத்து வரும் எண்ணைத் தெரிவு செய்க.**

10) 8, 13, 19, 26, ............

1) 28 2) 32 3) 34

11) 1, 3, 9, 27, ............

1) 75 2) 81 3) 54

**♦ பின்வரும் பாடல்களில் உணர்த்தப்படும் பிரதான கருத்து யாது?**

12) *இந்த உலகில் நீங்கள்*
*இயற்றும் தொண்டில் எல்லாம்*
*தந்தை தாயைப் பேணும்*
*தருமம் ஒன்றே பெரிது*

1) தொண்டு பல செய்யவேண்டும்
2) உலக மக்களுக்குத் தருமம் செய்ய வேண்டும்
3) தந்தை தாயைப் பேணும் தருமமே பெரியது

13) *கன்றை நினைந்தே உள்ளம்*
*கசியும் பசுவைப்போல*
*நன்றி புரிந்தோர் தம்மை*
*நாமும் நினைக்க வேண்டும்*

1) நன்றி புரிந்தோரின் நன்றியை மறக்கக் கூடாது
2) கன்றை நினைத்து மனம் இரங்க வேண்டும
3) கன்றையும் பசுவையும் நன்றியுடன் வளர்க்கவேண்டும்

14) "சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதனைப் பயன்படுத்த வேண்டும்" எனும் கருத்தை உணரத்தும் பழமொழி யாது?

1) காலம் பொன்னானது
2) அலைமோதும் போதே தலைமுழுகு
3) ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது

15) "பருவம் பார்த்து நாங்கள் பயிரைச் செய்வதுபோல" என்பது உணர்த்தும் பழமொழி

1) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
2) விளையும் பயிரை முளையிலே தெரியும்
3) வேலியே பயிரை மேய்ந்தது.

**♦ பின்வரும் சொற்கூட்டங்களில் வேறுபட்ட சொல்லைத் தெரிவு செய்க.**

16) 1. அழகு 2.எழில் 3. வனப்பு 4. அலங்கோலம்

17) 1. அண்மை 2.சேய்மை 3.சமீபம் 4.அருகாமை

18) அ) பட்டம் பெற்ற போதும்
ஆ) ஒழுகிக் கொள்ள வேண்டும்
இ) பலவும் படித்து நீங்கள்
ஈ) உலகத்தோடு ஒத்தே

1) இ, ஆ, ஈ, அ 2) இ, ஈ, அ, ஆ 3) இ, அ, ஈ, ஆ

19) "ஒரு மேசையைச் சுற்றி 4 பிள்ளைகள் இருக்கலாம். 28 பிள்ளைகள் இருப்பதற்கு இதுபோன்ற எத்தனை மேசைகள் தேவை?" என்பதனை எவ்வாறு கண்டு கொள்ளலாம்?

1) 28, இனை 4 ஆல் பெருக்குதல்
2) 28 , இனை 4 ஆல் பிரித்தல்
3) 28 , இல் இருந்து 4 ஐ கழித்தல்

**♦ 20 ஆம் 21 ஆம் வினாக்களில் சரியான கருத்தை வெளிப்படுத்தும் வாக்கியத்தைத் தெரிவு செய்க.**

20) 1.காந்தியடிகள் பிறருக்காக வாழாது தமக்கென வாழ்ந்த உத்தமர்களுள் ஒருவர்.
2.காந்தியடிகள் தமக்கெனவாழாது பிறருக்காக வாழ்ந்த உத்தமர்களுள் ஒருவர்.
3.காந்தியடிகள் உத்தமர்களுள் ஒருவராக பிறருக்காக வாழாதிருந்தார்.

21) 1.அபிராமி உண்மை பேசியதால் எல்லோரும் அவளைப் போற்றினார்கள்.
2.அபிராமி பொய் பேசியதால் எல்லோரும் அவளைப் போற்றினார்கள்.
3.அபிராமி உண்மை பேசியதால் எல்லோரும் அவளைத் தூற்றினார்கள்.

**♦ முதலில் தரப்பட்ட சொல்லுக்கு மிகக் கிட்டிய பொருள் தரும் (ஒத்தகருத்து) சொல்லைத் தெரிவு செய்க.**

22) ஆபத்து - 1) தழும்பு 2) இடையூறு 3) அபாயம்

23) தரை - 1) கூரை 2) நிலம் 3) மலை

**♦ முதலில் தரப்பட்ட சொற்களுக்கு இடையேயான தொடர்புபோல் அமையத்தக்க சொல்லைத் தெரிவு செய்க.**

24. புத்தகத்திற்கு ஆசிரியன் எனின் சித்திரத்திற்கு ..................

1) வர்ணம் 2) ஓவியன் 3) சிற்பன்

25. சூடான பிரதேசத்தில் பருத்தி உடை எனின் குளிரான பிரதேசத்தில்

1) பட்டுடை 2) நைலோன்உடை 3) கம்பளிஉடை

26. எந்த இரண்டு பொருட்களும் ஒரே விளையாட்டிற்கு உதவும்



A B C D


1) A,B
2) A,C
3) A,D

**♦ வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.**


27. 1) 2) 3) 4)



28. 1) 2) 3) 4)



29. கீழே காட்டப்பட்ட உருவில் எத்தனை சதுரங்கள் உள்ளன?



1) 16
2) 14
3) 11

30. பண்ணையொன்றில் 25 ஆடுகளும், 13 கோழிகளும், 9வாத்துக் களும் உள்ளன. இப்பண்ணையிலுள்ள விலங்குகளின் கால்களின் எண்ணிக்கை யாது?

1) 142 2) 144 3) 146 4) 145

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - பகுதி 2

01) பாடலைவாசியுங்கள்

| | |
|---|---|
| அல்லும் பகலும் நல்ல<br>ஆர்வத்தோடு நீங்கள்<br>கல்வி கற்று நன்மை<br>கருதி வாழ வேண்டும். | கன்றை நினைத்தே உள்ளம்<br>கசியும் பசுவைப் போல<br>நன்றி புரிந்தோர் தம்மை<br>நாமும் நினைக்க வேண்டும் |

♦ கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பாடலிலிருந்து தெரிந்து எடுத்து புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.

1. பாடலில் வந்துள்ள இணைமொழி எது?
...................................................

2. நன்றி புரிந்தோரைக் குறிப்பிடப் பயன்படுத்திய உதாரணச் சொல் எது?
...............................

3. கல்வியை எவ்வாறு கற்க வேண்டும்?
...................................................

4. "மனம்" என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக?
.....................................................

5. "தீமை" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக?
...................................................

6. "மனமிரங்கும்" என்பதை உணர்த்தும் சொற்றொடரை எழுதுக?
.......................................

02) கீழே தரப்பட்டுள்ள சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக

1.ஒருவர்/ ஒரு பொருள் தன்னுடைய கதையைத் தானே கூறுவது.
................................................

2.தாய் த்ந்தையரைக் குறிக்கும் தனிச்சொல்
..................................................

03) இடைவெளிக்குப் பொருத்தமான விடையை எழுதுக



1. This is a ...........................................

04) தொடக்கத்தில் தரப்பட்டுள்ள சொல்லின் ஒத்த கருத்துச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. ஆர்வம்:- ஆரம்பம், விருப்பம், பாராட்டு, திறமை
2. தருமம்:- மறம், அதர்மம், அறம், செயல்
3. கல்வி:- பெறுபேறு, வித்தை, பாடசாலை, வினா
4. உலகம்:- பிரதேசம், மாவட்டம், வையகம், ஆகாயம்

05) பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்துக்களில் உள்ள சொல்லின் கருத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1. மகாத்மா காந்தியின் பெற்றோர் பெருஞ் செல்வந்தர்கள
......................................

2. மக்களின் துன்பங்களைப் போக்க விழைந்தார்.
......................................

3. கருமம தொடங்கும் போது காலம் பார்க்கவேண்டும்.
......................................

06) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

எனக்குப் பசியாக இருக்கிறது :- ..........................................

07) "வாருங்கள்" என்னும் சொல்லை சிங்களத்தில் எழுதும் முறையைத் தமிழ் மொழியில் எழுதுக ..................................................

08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களைத் தமிழில் எழுதுக.

1. I am reading a book :-.................................................

2. கிரி சுது பாட்ட. :- ......................................

09) வினாக்களுக்குச் சரியான விடையின் கீழக் கீறுக.

1. "ே" இந்த உயிர்க்குறியைக் கொண்ட சொல் யாது?
(மலைவேம்பு, வையகம், நூலகம், கரப்பந்தாட்டம்)

2. "ை" இவ்வுயிர்க்குறியின் பெயர்
(அரவு, இரட்டைக்கொம்பு, சங்கிலிக்கொம்பு, விசிறி)

3. குடை, கைராட்டினம், கொக்கு....................இந்த அகரவரிசை ஒழுங்கின் படி இடைவெளியில் வரவேண்டியது. (கேத்தல், குடை, கோயில், காடு )

10) கருத்து எழுதுக.

1. உலகத்தோடு ஒத்து ஒழுகுதல் :-
.............................................................................

2. காற்றுள்ள போதே தூற்றிக்கொள் :-
.............................................................................

3. கண்ணாயிருத்தல் :-
.............................................................................

11) எதிர்க்கருத்து எழுதுக.

1. குற்றவாளி - ............................ 2. போற்றினார்கள் - ..........................

12) ஒத்தகருத்துச் சொற்கள் இரண்டு எழுதுக.

1. புராதனம் - ...................................
2. அழகு - ...................................



13) "மாணவன் ஒருவன் பாடசாலைக்கு ஆற்றவேண்டிய கடமைகள்" பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒரு வாக்கியமானது ஆறு சொற்களுக்குக் குறையாது இருப்பதோடு எழுவாய் , பயனிலைத் தொடர்புகள் சரியாக இருத்தல் வேண்டும்)

1...........................................................................................
...........................................................................................
2...........................................................................................
...........................................................................................
3...........................................................................................
...........................................................................................

14) பாடலைப் பூர்த்தி செய்க.

இந்த ...................................... நீங்கள்
இயற்றும் ................................. எல்லாம்
............................................ பேணும்
..................... ஒன்றே ...........................


15) படங்கள் குறிக்கும் ஆங்கிலச் சொல்லைஎழுதுக.


1)  ............
2)  ..............
3)  ..............
4)  ..............

16) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1) சூரிய நமஸ்காரம் செய்யப் பொருத்தமான நேரம்
1) இரவு 2) மதியம் 3) காலை 4) நள்ளிரவு

2) சூரிய நமஸ்காரப் பயிற்சியின் இரண்டாவது கட்டம்

1) 
2) 
3) 
4) 

3) 

அருகிலுள்ள படம் சூரிய நமஸ்காரப் பயிற்சியின் எத்தனையாவது கட்டம்
1) நான்காவது 2) ஒன்பதாவது
3) எட்டாவது 4) ஏழாவது

4) 

இந்த முகங்கள்காட்டும் சரியான ஒழுங்கு

1) துக்கம், பயம், மகிழ்ச்சி, கோபம்
2) கோபம், பயம், துக்கம், மகிழ்ச்சி
3) மகிழ்ச்சி, கோபம், துக்கம்,பயம்
4) பயம், கோபம், மகிழ்ச்சி, துக்கம்

5.பின்வருவனவற்றில் எது பயத்தின் வெளிப்பாடு?
1) கண்கள் சிவந்து காணப்படல் 2) உடல் நடுங்கி வியர்வை உண்டாகும்.
3) ஒதுங்கியிருத்தல் 4) துள்ளிக்குதித்தல்

6.இலங்கையின் சுதந்திரதின விழா கொண்டாடப்படுவது
1) மே மாதம் 01 ஆம் திகதி 2) ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி
3) ஜனவரிமாதம் 01 ஆம் திகதி 4) பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி

7.பின்வருவனவற்றில் எது சிறுவர் உரிமை மீறலாகும?
1) பாடசாலை சென்று கல்வி கற்றல்
2) பெற்றோருடன் சேர்ந்து வாழ்தல்
3) வேலைக்குச் செல்லுதலும் சிறுவயதில் உழைத்தலும்
4) தனது கருத்துக்களை வெளியிடும் உரித்துடைய நிலை

# கொழும்பு துறைமுகம் முன்னேற்றம்





2017ஆம் ஆண்டு சர்வ தேசஎல்பாலைனர்(Alphaliner) தரப்படுத்தலுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட துறைமுகங்களின் பட்டியலில் கொழும்பு துறைமுகம் உலகளாவிய ரீதியில் சிறந்த 25 துறைமுகங்களில் தரமுயர்ந்துள்ளதாக துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தின் ஊழியர்களை நேற்று சந்தித்தபொழுது அமைச்சர் இக்கருத்தினை வெளியிட்டார்.

இந்தத் தரப்படுத்தலுக்கு அமைவாக 2016 ஆம் ஆண்டு உலகிலுள்ள சிறந்த துறைமுகங்களுள் கொழும்பு துறைமுகம் 23ஆம் இடத்தை பிடித்திருந்தது. 2015 ஆம் ஆண்டு கொழும்பு துறைமுகமானது 26 ஆம் இடத்திலேயே தரப்படுத்தப்பட்டிருந்தது.

கொழும்பு துறைமுகத்தினுள் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடிய சிறந்த சூழலை உருவாக்கியமையே இவ் வெற்றியின் இரகசியம் என தெரிவித்தார்.

மேலும் கொழும்பு துறைமுக வளாகத்தினுள் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்ககூடிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளோம்.


அதன் அடிப்படையில் தங்களுடைய கௌரவத்தினை பாதுகாத்த வண்ணம் ஒட்டுமொத்த கொழும்பு துறைமுகத்தின் அபிவிருத்தியின் பொருட்டு அனைத்து தரப்பினரையும் எம்மால் ஒன்றிணைக்க முடிந்துள்ளது.

இதற்கு மேலதிகமாக கொழும்பு துறைமுகத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இத்திட்டத்தின் கட்டாய பிரதிபலனாக மற்றும் ஏனைய காரணிகளின் அடிப்படையில் எதிர்வரும் ஆண்டுகளில் கொழும்பு துறைமுகத்தை உலகிலுள்ள 20 சிறந்த துறைமுகங்களிற்குள் தரமுயர்த்த இயலும் என நான் நம்புகின்றேன் என அமைச்சர் தெரிவித்தார். (இ-7)



## கோட்டையின் நுழைவாயில் சேதம்



உலக பாரம்பரியம் மிக்க காலி கோட்டையின் நுழைவாயிலை பாரவூர்தியொன்று மோதியதால் அதன் ஒரு பகுதி சேதமாகியுள்ளது.

இந்தக் கோட்டையின் நுழைவாயில் பகுதியூடாக உள்நுழைய முற்பட்ட சந்தர்ப்பத்திலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## ஜனாதிபதி குழுவின் பரிந்துரை 5,000 % அதிகரிப்பாகும்


வாகனப் போக்குவரத்தின் போது இடம்பெறும் பாரியளவான ஏழு குற்றங்களுக்கான தண்டனை தொடர்பில் ஆராய்வதற்காக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்ட குழு, இந்த ஏழு குற்றங்களுக்கான அபராதமானது, 5 ஆயிரம் சதவீதத்தினால் அதிகரிக்கப்பட வேண்டுமெனப் பரிந்துரை செய்துள்ளது என, மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சரத் விஜிதகுமார தெரிவித்தார்.

ஏழு குற்றங்களுக்கான அபராதத் தொகையை, 25 ஆயிரம் ரூபாயாக அரசாங்கம் பரிந்துரை செய்திருந்த நிலையில், அந்தப் பரிந்துரைக்கு, பொதுப் போக்குவரத்து சேவைகளில் ஈடுபடுவோர் கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர். இந்நிலையிலேயே, இவற்றை ஆராய்வதற்காக ஜனாதிபதி, குழுவொன்றை நியமித்திருந்தார். இந்தக் குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்தப்படின், ஏனைய போக்குவரத்துச் சேவைகள் அடங்கலாக, சகல தனியார் பேருந்து சங்கங்களும், கடந்த டிசெம்பர் 2 ஆம் திகதி போல, நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தம் செய்யுமென அவர் தெரிவித்தார். இந்தக் குழுவானது, ஆகக்குறைந்த 20 ரூபாய் அபராதத்தை, ஆயிரம் ரூபாயாக மாற்றியுள்ளது. 25 ஆயிரம் ரூபாய் அபராதத்தை, 30 ஆயிரம் ரூபாயாக மாற்றியுள்ளது. இந்தத் தண்டனைகள், 150,000 ரூபாய் வரை அதிகரிக்கலாம். அத்துடன், நீதிமன்றங்களின் ஊடாக 10 வருடங்கள் வரை சிறைத் தண்டனையும் வழங்கப்படலாமென, அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 996

Search for people, places and things | Nagendram Home

### மயூரி




### குமார்




### சுதன்




### சுபாங்கி





### அனுசா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஐ.ம.சு.வுடன் எமக்கு உறவில்லை-விமல், வாசு



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் தங்களுக்கு எவ்விதமான உறவுகளும் இல்லை என்று, விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, வாசுதேவ நாணயக்கார எம்.பி. தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய இரண்டு கட்சிகளும் அறிவித்துள்ளன.

இதேவேளை, தங்களுடைய கட்சிகளின் உறுப்பினர்களுக்கு, நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படுவதற்கான அங்கீகாரத்தை வழங்குமாறும் அவ்விருவரும், சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் நேற்று முன்தினம் கோரி நின்றனர்.

முன்னதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ச எம்.பி. ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பி, "ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடனான அரசியல் ரீதியான உறவுகளை, எமது கட்சி துண்டித்துள்ளது. ஆகவே, எனது தலைமையின் கீழுள்ள எம்.பிக்கள் ஐவரையும் சுயாதீன அணியாக செயற்படுவதற்கு அனுமதிக்க வேண்டும்" என்றார்.

"இந்தக் கோரிக்கையை 6 மாதங்களுக்கு முன்னரே நாம் விடுத்திருந்தோம். சுயாதீனமாகச் செயற்படும் கட்சியொன்றுக்கு நாடாளுமன்றில் வழங்கப்படும் உரிமைகள், சலுகைகளையும் நாம் கோரியிருந்தோம். ஆனால், சபாநாயகர் என்ற ரீதியில் நீங்கள், இன்னும் எவ்வித முடிவையும் விடுக்கவில்லை" என்று குற்றஞ்சாட்டினார்.

அதற்குப் பதிலளித்த சபாநாயகர், "இந்த விவகாரம் தொடர்பில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு அறிவித்துள்ளோம். இந்த முடிவு குறித்து அக்கூட்டமைப்பு நீங்கள் இன்னும் அறிவிக்கவில்லையென்று தெரிவிக்கப்பட்டது. அத்துடன், இன்று தான் நேற்று முன்தினம் நீங்கள் இப்படியொரு அறிவிப்பையே சபையில் பகிரங்கமாக விடுக்கின்றீர்கள்" என்றார்.

"இல்லை. சபாநாயகரே, இதற்கு முன்னரே நான் கோரிக்கை விடுத்திருந்தேன். நாம் வெளியேறுவதை அனுமதிக்க முடியாது என்று தான், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கூறியுள்ளது. அதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. சுயாதீனமாகச் செயற்படும் உரிமை எமக்குள்ளது" என்று விமல் எம்.பி.குறுக்கிட்டு கூறினார்.

இதன்போது ஒன்றிணைந்த எதிரணியின் உறுப்பினர்களான பந்துல குணவர்தன, வாசுதேவ நாணயக்கார ஆகியோரும் விமலின் கருத்தை ஆதரித்தனர். தனது தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணியும் சுயாதீனமாகச் செயற்படப்போவதாக வாசுதேவ நாணயக்கார எம்.பி இதன்போது குறிப்பிட்டார்.

இடையில் குறுக்கிட்ட அமைச்சர் ரவூப் ஹக்கீம், "ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் போட்டியிட்டதால் கடந்த தடவை எமது கட்சிக்கு நாடாளுமன்றில் தனிக்கட்சிக்குரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை. அவ்வாறான அறிவிப்புகளைக்கூட விடுக்கமுடியாத சூழ்நிலை எமக்கு ஏற்பட்டது" என்றார். கருத்துகளுக்கு செவிமடுத்த, சபாநாயகர் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடி, முடிவை அறிவிப்பதாகக் கூறினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சின்னம் வெற்றிலை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## புலனாய்வு அதிகாரிகளை வேட்டையாடவே PTA

புலனாய்வு அதிகாரிகளை வேட்டையாடவே PTA பயன்படுத்தப்படுவதாகவும், பயங்கரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படுவோருக்கெதிராக, பொதுச் சட்டத்தின் கீழேயே சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், ஒன்றிணைந்த எதிரணி, குற்றஞ்சாட்டியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரொருவரின் கொலை முயற்சி தொடர்பில் கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேக நபர்களும், பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழேயே கைது செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று, கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது, முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார். "மேற்படி எம்.பியின் கொலை முயற்சிக்குப் பின்னால், நான்கு நாடுகளிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இருப்பதாக வெளிப்படுத்தப்பட்டதுடன், மேற்கூறப்பட்ட சந்தேநபர்களுக்கு அவர்கள் நிதியளித்திருந்த போதும், பயங்கரவாதச் சட்டத்தின் கீழ், சந்தேக நபர்கள் கைது செய்யப்படாததால், இவர்களைத் தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்துவதில் தடைகள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (இ)

## அன்றும் கள்வர் இருந்தனர் இன்றும் கள்வர் உள்ளனர்

### ஜனாதிபதி தெரிவிப்பு



களவெடுக்கும், தவறிழைக்கும் நபர்கள் கடந்த ஆட்சிக்காலத்திலும் இருந்தனர். இந்த ஆட்சிக்காலத்திலும் இருக்கின்றனர் என்று, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அவற்றை எல்லாம் கவனத்தில் எடுத்துத்தான் செயற்படுகின்றேன். அந்த நிலைமையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஒன்றிணைந்த எதிரணியில் இருக்கின்றவர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயலாற்றுவதற்கு, எவ்விதமான பிரச்சினைகளும் இல்லை என்று தெரிவித்த ஜனாதிபதி, தான் எதற்கும் தடைவிதிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தான், வைராக்கியம் கொள்ளவில்லை, யாருடனும் கோபமும் இல்லை. சகலரையும் ஒன்றிணைத்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்துவதே தன்னுடைய ஒரே நோக்கம் என்றும் சுட்டிக்காட்டினார். கட்சியின் மேதினத்தை, இம்முறை, மிகவும் பிரமாண்டமான முறையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். இதேவேளை, புதிய பொறிமுறையில், முன்னோக்கி நகர்வதற்கு, ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும், அதற்கு தாங்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்குவதாகவும் தொகுதி அமைப்பாளர்கள் தெரிவித்தனர். (இ-7)

# இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் விடுவது பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதாக அமையும்

## அமைச்சர் மங்கள சமரவீர தெளிவுபடுத்தல்

(கொழும்பு)

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பான சட்டமூலம் நாடாளுமன்ற துறைசார் குழுவின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது நிறைவடைந்ததும், புதிய சட்டமூலம் நாடாளுமன்றதுக்கு சமர்ப்பிக்கப்படுமென்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் விடுவது, பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என்றும் அது, நாட்டில் பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதாக அமையும் என்றும் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனால், நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது, "நாட்டின் இனப்பிரச்சினை, யுத்தத்தின் பின்னரான நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க, அரசாங்கம் முன்னெடுத்துள்ள பொறிமுறை, நாட்டு மக்களுக்கானது.

சர்வதேச அழுத்தத்துக்கு அடிபணிந்து, இவ்வாறானதொரு முடிவை அரசாங்கம் எடுக்கவில்லை. அத்துடன், இது குறித்து நாட்டு மக்களுக்கே பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு, அரசாங்கத்துக்கு உள்ளதே தவிர, சர்வதேசத்துக்கு அல்ல" என்றும் அவர் தெரிவித்தார்.

"1972 -1978ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பில் இல்லாத கருத்தொருமித்த தன்மை, தற்போது உருவாக்கப்பட்டுவரும் புதிய அரசியலமைப்பில் உள்ளது. இலங்கை வரலாற்றில், புதிய அத்தியாயத்தை எழுதும் வாய்ப்பு, இப்போது ஏற்பட்டுள்ளது.

அரசியலமைப்பை உருவாக்கும் பணியை, மக்கள் நாடாளுமன்றத்திடம் ஒப்படைத்துள்ளனர். இன்னுமொரு யுத்தம் நிகழாமையை உறுதிப்படுத்த வேண்டும். தேசிய ஒற்றுமையே இங்கு முக்கியம்.

பெரும்பான்மையினரான சிங்கள மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய தீர்வினை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று கூறியுள்ளார். பிளவுபடாத நாட்டில், அதிகாரப் பகிர்வினையே அவர்கள் முன்வைத்துள்ளனர்.

நாம் எந்தக் கட்சியாக இருந்தாலும், மக்களின் பிரதிநிதிகள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலை, இராணுவ உதவியுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அடுத்த வருடம், 70 ஆவது சுதந்திர தினத்தைக்



கொண்டாடத் தயாராகியுள்ளோம். அதற்குள், நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வினை வழங்க வேண்டும். புதிய அரசியலமைப்பில், சிறுபான்மை மக்களுக்கும் சில சிறப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. யுத்தத்தின் பின்னரான தீர்வை, நிலைமாறுகால நீதியைப் பெற்றுக்கொடுக்கும் வகையிலேயே முன்னெடுத்து வருகின்றோம். பொறுப்புக்கூறல், மீள நிகழாமை, நிலையான சமாதானம் ஆகியவை தொடர்பில், மிகவும் அவதானமாக உள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 'எதற்கும் என் ஆதரவில்லை'

### இந்திரஜித் கூறுகிறார்

திறைசேரிப் பிணைமுறி வழங்கல் விடயத்தில், எந்த முறைக்குமென தனது தனிப்பட்ட ஆதரவு கிடையாது என, மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி விளங்கப்படுத்தினார். சில ஊடக அறிக்கைகள் தொடர்பாக விளக்கமளிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திறைசேரி முறிகளை வழங்குதல் தொடர்பாகப் பரீட்சித்துப் பார்க்கும் மற்றும் புலனாய்வு செய்யும் ஜனாதிபதி புலனாய்வு ஆணைக் குழுவின் பகிரங்க அமர்வு, இரண்டாவது நாளாக நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அதன்போது ஆளுநர், "பிணைமுறி வழங்கலில் ஏலம் விடும் முறைக்கு நான் ஆதரவளிப்பதாக, சில பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்தது. இந்த விடயத்தை நான் விளங்கவைக்க விரும்புகிறேன். எந்தவொரு திட்டத்துக்குமான தனிப்பட்ட முன்னுரிமை, எனக்குக் கிடையாது" என்று அவர் தெரிவித்தார். இதேவேளை, கோப் அறிக்கையில், ஏலம் நடந்து கொண்டிருந்த போது, மத்திய வங்கியின் அரச கடன் திணைக்களத்துக்குள், அப்போதைய ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் நுழைந்தார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அத்திணைக்களத்துக்குள் ஆளுநர் ஒருவர் செல்வதற்கான தேவை இருக்கிறதா? எனக் கேட்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த ஆளுநர், அதற்கான தேவை எதுவும் கிடையாது என்றார். தொடர்ந்து, தனது காலத்தில், அந்தத் திணைக்களத்துக்குள் ஆளுநர் குமாரசுவாமி சென்றுள்ளாரா? எனக் கேட்கப்பட்ட போது, அதற்கு இல்லை என அவர் பதிலளித்தார்.

இந்தச் சாட்சியமளிப்பின் போது, மத்திய வங்கிக்குள் உள்ளக விசாரணைகள் இடம்பெற்றனவா? என்பது தொடர்பாகவும், ஆளுநரிடம் கேட்கப்பட்டது. அதற்குப் அவர் இல்லை என்று குறிப்பிட்ட போதிலும், தனது காலத்தில் பேர்பெச்சுவல ; ட்ரெஷரீஸ், ஊழியர் சேமலாப நிதியம் உள்ளிட்ட சில நிறுவனங்கள் மீது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

அதன்போது, "அவ்வாறாயின், உங்கள் வீட்டை நீங்கள் சுத்தப்படுத்தவில்லை என்று தானே அர்த்தம்?" என வினவப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர், சுத்தப்படுத்தப்பட வேண்டிய தேவை இருக்கிறது என தான் கருதவில்லை எனவும் தவறு செய்யும் சிலர் உள்ளதை ஏற்றுக்கொள்கின்ற போதிலும், அவர்கள் மிகவும் சிறுபான்மையினராக உள்ளனர் எனவும் தெரிவித்தார். ஏனைய விசாரணைகளில், யாராவது தவறு செய்தமை கண்டுபிடிக்கப்பட்டால், நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் உறுதியளித்தார். (இ-7)

# நேர்மையான சேவையால் தீவகத்திற்கு பெருமை சேர்த்த அமரர் கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம்



இலங்கைத் தீவின் வடபால் சிரமெனமிளிரும் யாழ்.குடாநாட்டின் தென்திசையில் அமைந்துள்ள சப்த தீவுகளில் தலைத்தீவாக விளங்கும் மண்டைதீவில் தோன்றிய கைலாசபிள்ளை விஜயலட்சுமி தம்பதியினருக்கு வரமாய் வந்துதித்த தலைமகனும் தலைமை அலுவலகங்களை எல்லாம் கொண்ட முதன்மைத் தீவாக விளங்கும் வேலணையில் பெரும் குடி மரபில் தோன்றிய நகுலேசபிள்ளை பராசக்தி தம்பதியினருக்கு வரமாய் வந்துதித்த தலைமகள் நித்தியலட்சுமியை கரம்பிடித்த கணவரும் கை.மகேந்திரலிங்கம் ஆவார்.

அவரது திடீர் மறைவு " இன்று இருப்போர் நாளை இங்கே இருப்பது என்ன உண்மை?" என்ற கருத்தியல்பை நமக்கு மெய்ப்பித்து காட்டியுள்ளது.

அன்னார் ஹற்றன் – நோட்டன் பிரிஸில் ஆசிரியர்களாக இருந்த தனது இரு சித்திமாருடன் இருந்து சிறுவயது முதல் ஆரம்பக் கல்வியைக் கற்றதால் தமிழ்,சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் கற்றதுடன், அதில் புலமையும் ஏற்பட்டது.

ஆறாம் ஆண்டு முதல் மண்டைதீவு மகா வித்தியாலயத்திலே தொடர்ந்து கல்வி கற்று க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றி எல்லாப் பாடங்களிலும் திறமைச்சித்தியைப் பெற்றுப் பாடசாலைக்கு பெருமை சேர்த்தார்.

கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தை யாழ். இந்துக் கல்லூரியில் கற்று பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு தெரிவானார். இந்தக் காலத்திலேயே பொது எழுதுநர் சேவை பரீட்சையிலும் தோற்றி சித்தியடைந்ததால் உடனடியாக வேலை கிடைப்பதைக் கருத்திற்கொண்டு மொனராகலை பிரதேச செயலகத்திற்குக் கிடைத்த பதவியை ஏற்றுக் கொண்டார்.

அதன்பின் கொழும்பிலும் கொழும்பில் இருந்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலும் காணி அலுவலகத்திற்கு நிர்வாக உத்தியோகத்தராகவும் பின் யாழ். மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபராக இருந்த பொன்னம்பலம் அவர்கள் (D.L.O.) யாழ். மாவட்ட காணி அதிகாரியாக இருந்த காலத்தில் நிர்வாக உத்தியோகத்தராகவும் இருந்து அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளை நன்கு ஆய்வு செய்து மேலதிகாரிகளும் திருப்தியடையக் கூடியதாக விளக்கமளித்து கால நேரத்தையும் கருத்தில் கொண்டு படித்த வாலிபர் திட்டங்களில் காணிகளை வழங்குவதற்கு தன்னால் இயன்ற முயற்சிகளை கடமைஉணர்வுடன் செய்தார். இதன் பிறகு தொடர்ந்து ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்திலும் வேலணைப் பிரதேச செயலகத்திலும் ஈற்றில் வேலணைப் பிரதேச சபையின் செயலாளராகவும் பணியாற்றினார்.

அன்னாருக்கு இயற்கையாகவே மொழிகளைக் கற்கும் ஆற்றல் இருந்ததால் ஆரம்பக் கல்வியும் முதல் அரச சேவையும் கிடைத்த இடங்கள் இவருக்கு மும்மொழித் தேர்ச்சியை மேலும் வளர்த்தது. இதனால் இவர் தொழிலை அலங்கரிக்க காரணமாக அமைந்தது எனலாம்.

மேலதிகாரிகள் கூட அரச நிர்வாகச் சுற்றறிக்கைகள் கிடைக்கும் போது ஆங்கிலப்பக்க சுற்றறிக்கையைத் தாங்கள் பார்த்து விட்டு சிங்களப் பக்கத்தை இவரிடம் கொடுத்துக் கேட்பதையும் மற்றும் அலுவலகங்களில் சிங்கள மொழிபெயர்ப்புச் செய்வதையும் தாங்கள் காணக் கூடியதாகவும் இருந்தது.

வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கான எழுதுநர் சேவ அதி உயர் சிறப்புப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்ததனால் மத்திய அரச சேவையிலிருந்து பதவி உயர்வு வழங்குவதற்காக மாகாண சபைக்கு உள்வாங்கப்பட்டு வேலணைப் பிரதேச சபைச் செயலாளர் நியமனம் வழங்கப்பட்டது.

அவர் அரச சேவைகளை ஆளுமையுடன் சரிவர நிறைவேற்றுவதுடன் சொந்த மண்ணில்கமத் தொழிலையும் மற்றும் ஆலய பரிபாலன சபைகளிலும் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம் போன்ற அமைப்புகளில் தலைவர், செயலாளராகவும் சமூகத்தொண்டனாகவும் இருந்து தன்னால் இயன்ற அளவு பொதுப் பணிகளை தான் வாழ்கின்ற, வசிக்கின்ற வேலணை மண்ணுக்கு தன்னலம் கருதாது சேவை செய்துள்ளார்.

அன்னாரின் திடீர் மறைவு அவரது மனைவி, அன்புச் சகோதரன் அவர்களது குடும்பங்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், சுற்றத்தார், அவர் கடமையாற்றிய பிரதேச மக்களுக்கும், குறிப்பாக மண்டைதீவு, வேலணைப் பகுதி மக்களுக்கும் தாங்க முடியாத பேரிழப்பாகும்.

எனவே அமரர் கை.மகேந்திரலிங்கம் எல்லோரது உள்ளங்களிலும் நிலைத்து நிற்பார் என்பதில் ஐயமில்லை.

சி.ஆ.ஏகானந்தசிவம்,
வேலணைப் பிரதேசசபை,
யாழ்.மாநகரசபை,
யாழ்.பி.சு.சே.பணிமனை
ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர்.

# பெண்களுக்கு எதிரான வன்முறை யாழில் அதிகரித்துச் செல்கின்றது

## பாதிக்கப்பட்ட பெண்கள் மனவேதனை

(யாழ்ப்பாணம்)

ஏமாற்றப்பட்ட பெண்களுக்கு உரிய தீர்வு பெற்றுக் கொடுக்கப்படாத காரணத்தால் தொடர்ச்சியான முறையில் பெண்கள் ஏமாற்றப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்றும், பெண்களை ஏமாற்றி பாதிப்புக்குட்படுத்திய ஆண்களுக்கு உரிய முறையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படாமையால் தான் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் யாழில் அதிகரித்து செல்வதாக பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்துள்ளனர்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆண்களால் ஏமாற்றப்பட்டு தமதுவாழ்க்கையினைக் கொண்டு செல்ல முடியாமல் அவதியுறும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கிராம மட்டங்களில் உள்ள பாதிக்கப்பட்ட பெண்கள் கருத்து தெரிவிக்கும் போதே இந்த விடயத்தினை தெரிவித்துள்ளனர்.

நாம் மிகவும் ஏழ்மை நிலையில் எமது வாழ்க்கையைக் கொண்டு செல்கிறோம். அத்துடன் எம் மீது சமூகத்தின் பார்வையும் எம்மை நோகடிக்கும் வகையில் அமைந்துள்ளது. திருமணம் செய்து கணவனால் ஏமாற்றப்பட்டது எமது தவறில்லை. அதிகமாக 18 வயது தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்ட பெண்களே இவ்வாறு ஆண்களால் அதிகம் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

கணவன் இல்லாத பெண்களை இந்தச் சமூகம் பார்க்கும் விதம் வேறாகத்தான் உள்ளது. ஆனால் பெண்களை ஏமாற்றிய ஆண்களை தண்டிப்பதற்கு சட்டமும் ஒழுங்கான முறையில் செயற்படவில்லை. அவர்களை தப்பிக்க வைத்து ஏனைய பெண்களையும் படுகுழியில் தள்ளும் செயற்பாட்டையே செய்து வருகிறது.

எமக்கு சரியான தீர்வு பெற்றுக்கொடுப்பதற்கு எவரும் முன்வருவதில்லை. எம்மையேதப்பான கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள். அவ்வாறு இருக்கும் போது எமது பிரச்சினைகளை எவ்வாறு வெளிக்கொண்டு வர முடியும். எமது பிள்ளைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் பெறுவது தொடக்கம் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கான வாழ்வாதாரத்தை பெற்றுக்கொள்வது வரைக்கும் எமது வாழ்க்கை போராட்டமாகவே உள்ளது எமது பிள்ளைகளின் எதிர்காலம் எவ்வாறாக அமையும் என்று எமக்குத் தெரியாது.

ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உளவளத்துணையாளர்கள், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள், முன்பிள்ளை பருவ உத்தியோகத்தர்கள், பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் என ஒரு குழுவினர் சமூக மட்டத்தில் களவிஜயம் மேற்கொண்டு பிரச்சினைகளை ஆராய்வதற்கெனவும் தீர்வுகளை பெற்றுக் கொடுக்க வழி அமைத்துக் கொடுப்பதற்காகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என அறிகிறோம். ஆனால் அவர்கள் எமது பகுதிகளுக்கு வருவதாக தெரியவில்லை. எமது பிரச்சினைகள் தொர்பில் ஆராய்கிறார்களா என்று எமக்கு தெரியவில்லை.

மேலும் பொலிஸார் எமக்குரிய பாதுகாப்பை வழங்குவதில்லை. ஏனெனில் குற்றம் செய்தவனை தப்பிக்க வைக்கவே முயலுகின்றனர். குறித்த நபர் ஏமாற்றி விட்டார் என சகல தகவல்களுடன் முறையிடுகின்ற போதிலும் அவர்களை கைது செய்து நீதிமன்றில் நிறுத்தும் சந்தர்ப்பம் மிகமிக குறைவாக உள்ளது. முறைப்பாட்டை மேற் கொள்ள சென்றால் எம்மையே கீழ்த்தரமாக பார்க்கிறார்கள், பேசுகிறார்கள்.

பிரதேச செயலகங்களில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு கிராம மட்டங்களுக்கும் சென்று உரிய முறையில் கவனமாகவும் பண்பாகவும் விசாரணைகளை மேற்கொண்டு தகவல்களை பெறுவதற்கு முயற்சி செய்தால் நாம் தயங்காமல் எமது பிரச்சினைகளை கூற முடியும். இதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பதுடன் எம்மை ஏமாற்றியவர்கள் மேலும் பலருடைய வாழ்க்கையை சீரழிக்காது தடுப்பதற்கு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உரிய தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்வதாக தெரிவித்துள்ளனர். (இ-9)

# 35 ஆவது ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம் செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் (றூட்) 35 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், வருடாந்த பொதுக்கூட்டமும் நாளை மறுதினம் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணியளவில் 16/2, சீனியர் ஒழுங்கை, கலட்டியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட தலைமைக் காரியாலயத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், சிறப்பு விருந்தினர்களாகவட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், நல்லூர் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிரிஷ்சாந்தி விக்னேஸ்வரன், வட மாகாண சமூக சேவைகள் திணைக்கள நிர்வாகி வனஜா செல்வரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-12)

# மாணிக்கக்கற்களை கடத்தியவர் கட்டுநாயக்கவில் வைத்து கைது

இலங்கையில் இருந்து மிகவும் சூட்சுமமான முறையில் மாணிக்கக்கற்களை தாய்லாந்திற்கு கடத்திச் செல்ல முற்பட்ட இளைஞரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தாய்லாந்தின் பாங்கொக் நகரிற்கு 48 இலட்சம் ரூபா பெறுமதியான மாணிக்கக் கற்களை மிகவும் சூட்சுமமான முறையில் தனது கைப்பையில் மறைத்துக் கொண்டு செல்ல முற்படுகையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவராவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் விமான நிலைய சுங்க அதிகாரிகள், மாணிக்கக்கற்களை பறிமுதல் செய்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)


# சிறுவர் அரங்கம்

## நாய்க்குட்டி சொன்ன நீதி

ஒரு வீட்டில் நாய்க் குட்டியொன்றை எடுத்து வளர்த்து வந்தார்கள். அந்த நாய்க் குட்டி காகத்துடன் நட்பாக இருந்தது. ஒரு நாள் காகம் மிகவும் கவலையுடன் அமர்ந்திருந்தது.

இதைக் கண்ட நாய்க் குட்டி காகத்திடம் சென்று. என்ன காக்கை யாரே! ஏன் ஒன்றும் பேசாமல் வருத்தமாக இருக்கிறீர்? என்று கேட்டது. அதற்கு காகம், மனிதர்கள் மற்றப் பறவைகளை அன்புடன் வளர்க்கின்றார்கள். அவைகளின் செயல்களைப் பாராட்டுகின்றார்கள் ஆனால் என்னை வெறுத்து. கல்லால் எறிந்து துரத்துகிறார்களே ஏன்? என்று கேட்டது காகம். இதற்குக் காரணம் உங்கள் தீய குணங்கள்தான். இதை இல்லாதொழித்தால் உங்களையும் அன்பாக நடத்துவார்கள், என்றது நாய்க் குட்டி எங்களிடம் அப்படி யென்ன தீய குணங்கள் உள்ளன? கடமை, சுத்தம், இப்படிப் பல நல்ல குணங்களில் நாங்கள்தான் சிறந்தவர்கள்!என்று சொன்னது காகம். உண்மைதான்! என்றது நாய்க் குட்டி பகிர்ந்துண்ணும் பண்பைக் கற்றுத் தந்ததும் நாங்கள் தான்! என்று பெருமையோடு சொன்னது காகம். ஆமாம் அதுவும் உண்மைதான்! என்று மறுபடியும் சொன்னது நாய்க் குட்டி. இப்படி நல்ல குணங்கள் எம்மிடம் இருந்தும், மற்றப் பறவைகளுக்கு உள்ள மதிப்பு எங்களுக்கு இல்லையே ஏன்? குயில் கூவும்போது அதன் இனிமையை இரசிக்கிறார்கள். மயிலாடும் போது அதை இரசித்துப் பாராட்டுகிறார்கள். கிளியை வீட்டில் வளர்த்து பேசக் கற்றுக் கொடுக்கிறார்கள். ஆனால் எவ்வளவோ நல்ல குணங்கள் இருந்தும் எம்மினத்தைக் கண்டாலே துரத்துகிறார்களே ஏன்? என்று மீண்டும் கேட்டது காகம். ஏன் என்று நான் சொல்லுகிறேன். உங்களிடம் எவ்வளவு நல்ல குணங்கள் இருந்தாலும். உங்களிடம் இருக்கும் சில தீய குணங்களால் தான் மனிதர்கள் உங்களை வெறுக்கிறார்கள், என்று கூறியது நாய்க்குட்டி அப்படி என்ன தீய குணங்கள்? என்று கேட்டது காகம். திருடுதல், ஏமாற்றுதல், என்று சொன்னது நாய்க்குட்டி. காகம் தலை குனிந்தது. நீதி: ஒருவரிடம் எவ்வளவு நல்ல பண்புகள் இருந்தாலும் அவரின் ஒரு சிறு தீயசெயல் அவரை, அவரின் அத்தனை நல்ல பண்புகளில் இருந்தும் மறைத்து அந்தத் தீயசெயலே முன்னிற்கும்.

முற்றும்



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

02.2017
24

- 1387 - நேப்பில்ஸ் மற்றும் ஹங்கேரி மன்னன் மூன்றாம் சார்ல்ஸ் கொல்லப்பட்டான்.
- 1582 - கிரெகொரியின் நாட்காட்டி பாப்பரசர் 13வது கிரெகரியினால் அதிகார பூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1739 - இந்தியாவின் முகலாய மன்னன் முகமது ஷாவின் படையை ஈரான் மன்னன் நாதிர் ஷாவின் படை முறியடித்தது.
- 1826 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிக்கும் பர்மா மன்னன் ஆவாவுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாட்டினை அடுத்து முதலாம் பர்மியப் போர் முடிவுக்கு வந்தது.
- 1875 - ஆஸ்திரேலியக் கிழக்குக் கரையில் எஸ்எஸ் கோத்தன்பேர்க் என்ற கப்பல் மூழ்கியதில் 102 பேர் கொல்லப்பட்டனர்.
- 1881 - சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1918 - எஸ்தோனியா விடுதலையை அறிவித்தது.
- 1920 - நாசிக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1942 - வொயிஸ் ஒஃப் அமெரிக்கா ஒலிபரப்புச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1945 - எகிப்தியப் பிரதமர் அகமது மாஹிர் பாஷா நாடாளுமன்றத்தில் வைத்துக் கொல்லப்பட்டார்.
- 1969 - மரைனர் 6 விண்கலம் செவ்வாய் கோளுக்கு ஏவப்பட்டது.
- 1981 - கிரேக்கத்தில் ஏதென்ஸ் நகரில் நிகழ்ந்த 6.7 ரிக்டர் நிலநடுக்கத்தினால் 16 பேர் கொல்லப்பட்டனர்.
- 1999 - கிழக்கு சீனாவில் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 61 பேர் கொல்லப்பட்டனர்.
- 2007 - மணிப்பூர் தமெல்லாங் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.
- 2009 - வாட்ஸ் அப் (WhatsApp) நிறுவனம், ஜான் கௌமால் கலிபோர்னியாவில் தொடங்கப்பட்டது.

பிறப்புகள்

- 1304 - இபின் பட்டூட்டா, பயணி
- 1886 - ஆர். முத்தையா, தமிழ் தட்டச்சுப் பொறியை உருவாக்கியவர்
- 1948 - ஜெ. ஜெயலலிதா, தென்னிந்திய நடிகை, தமிழ்நாட்டு முதலமைச்சர் (இ. 2016)
- 1955 - ஸ்டீவ் ஜொப்ஸ், ஆப்பிள் கம்பியூட்டர் நிறுவனத்தைத் தொடங்கியவர்களுள் ஒருவர்

இறப்புகள்

- 1986 - ருக்மிணி தேவி அருண்டேல், நடனக் கலைஞர், கலாக்ஷேத்திரா நடனப் பள்ளியினை நிறுவியவர். (பி. 1904)
- 2015 - ஐ. மாயாண்டி பாரதி, இந்திய விடுதலைப் போராட்ட வீரர், பொதுவுடைமையாளர், இதழாளர் (பி. 1917)

சிறப்பு நாள்

- எஸ்தோனியா - விடுதலை நாள் (1918)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 70 | 120 | 120 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 90 | 100 | 110 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 200 | 220 | 200 | 140 |
| தக்காளி | 40 | 60 | 40 | 30 | 50 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 60 | 70 | 80 | 60 |
| கோவா | 20 | 40 | 20 | 30 | 40 | 40 | 40 |
| கரட் | 50 | 60 | 40 | 60 | 60 | 100 | 40 |
| பூசணி | 100 | 60 | 30 | 50 | 90 | 60 | 50 |
| புடோல் | 80 | 60 | 40 | 100 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 60 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 110 | 100 | 100 | 120 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 80 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 150 | 120 | 200 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 100 | 100 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 60 | 80 | 140 |
| பயற்றங்காய் | 200 | 180 | 120 | 120 | 200 | 160 | 60 |
| லீக்ஸ் | 50 | 120 | 60 | 80 | 160 | 80 | 60 |
| பீற்றூட் | 60 | 100 | 40 | 50 | 70 | 30 | 60 |
| கறி மிளகாய் | 160 | 200 | 130 | 200 | 150 | 200 | 150 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 400 | 500 | 600 | 300 | 300 |
| போஞ்சி | 120 | 180 | 100 | 100 | 100 | 120 | 80 |
| கத்தரிப்புள்ளி | 120 | 100 | 60 | 100 | - | 80 | 80 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 30 | 40 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 60 | 80 | 100 | 120 | 60 | 100 |
| தேங்காய்(ஒன்று) | 60 | 60 | 20-50 | 60 | 60 | 50-60 | 50 |
| இராசவள்ளி | 200 | 300 | 150 | 250 | 130 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 50 | 30 | 40 | 50 | 60 | 30 | 40 |
| முள்ளங்கி | 60 | 60 | 30 | 50 | 60 | 60 | 60 |
| பிஞ்சு பூசணி | 40 | 60 | 15 | 30 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 100 | 60 | 50 | 50 | 50 | 60 | 60 |

பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா?... இருக்குமிடத்திலிருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே. - கண்ணதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## விடுதலைப் புலிகள் இல்லாத போது அவர்களைத் தூற்றுவது கோழைத்தனம்

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஒரு மாவீரன் என்று இலங்கையின் இராணுவத் தளபதிகளே போற்றுமளவில் விடுதலைப் புலிகள் அமைப்பும் அதன் தலைமையும் இருந்ததென்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழினம் பற்றி இந்த உலகம் நினைக்கவும் சிந்திக்கவும் தலைப்பட்டமைக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனே காரணம் என்றால் அதை அவரின் எதிரியும் மறுக்க மாட்டார் என்பதே உண்மை.

ஆக, எதிரிகளும் மெச்சுகின்ற ஒரு தேசியத் தலைவராக பிரபாகரன் இருந்தார் என்பதை எவரும் மறுதலிக்க முடியாது.

இதைக் கூறும்போது, விடுதலைப் புலிகள் அமைப்பின் அத்தனை நகர்வுகளும் மிகவும் சரியானது. அதை எவரும் விமர்சிக்க முடியாது என்பது பொருளல்ல.

ஓர் அமைப்பு என்றால் அந்த அமைப்பு எடுத்த தீர்மானங்கள், தீட்டிய திட்டங்கள் சில வேளைகளில் யதார்த்தத்துக்கு பொருத்த மற்றதாகவும் இருக்கும் என்பது ஏற்புடையதே.

பாரத தேசத்துக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுத்த மகாத்மா காந்தியை பாகிஸ்தானின் சிற்பி ஜின்னா ஏமாற்றினார் என்றும் இந்திய தேசத்தின் மீது பாகிஸ்தான் போர் தொடுக்க முற்படும்போதெல்லாம் மகாத்மா காந்தி விட்ட தவறே இந்திய தேசத்துக்கு ஆயுத அச்சுறுத்தலை தருவதாகக் குறைபடுவோரும் உளர்.

அதற்காக பாரத பூமிக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்த மகாத்மா காந்தியின் தியாகத்தை மறந்து விடவோ மறைத்து விடவோ முடியாது என்பது உண்மை.

இந்த வகையில்தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் முன்னெடுத்த விடுதலைப் போராட்டம்; அதைக் கட்டிக் காத்த நுட்பம்; போராளிகளின் ஒழுக்கநெறி; நிர்வாகக் கட்டமைப்பு; ஆயுத பலம்; தாக்குதல் திறன் என இவையனைத்தும் வியப்புக்குரியவை.

இந்த விடயங்களை தனிப்பட்ட காழ்ப்புணர்வு கொண்டு கீழ் நிலைப்படுத்துவதோ அன்றி அதற்கு மாசு கற்பிப்பதோ அழகல்ல.

அதிலும் இச்செயலை தமிழர்கள் குறிப்பாக விடுதலைப் புலிகளால் இழப்புக்களைச் சந்தித்தவர்கள் கூட, சொல்ல மாட்டார்கள் என்று கூறுவதில் தவறில்லை.

ஏனெனில் விடுதலைப் புலிகளால் இழப்புக் களைச் சந்தித்தவர்களும் இலங்கை ஆட்சியாளர்களின் ஈனச் செயல்களாலேயே தமிழ் இளைஞர்கள்ஆயுதம் ஏந்த வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானார்கள் என்பதை ஏற்றுக் கொள்வர்.

இதன்காரணமாக அவர்களும் விடுதலைப் புலிகள் என்ற அமைப்புத் தேவை என்பதுடன் ஒத்துப் போவார்கள் என்பதே நிதர்சனம்.

நிலைமை இதுவாக இருக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையொன்றில் விடுதலைப் புலிகள் அமைப்பைக் கீழ்நிலைப்படுத்தும் வகையில் உரையாற்றியிருப்பது மிகப்பெரும் வேதனைக்குரியது.

தற்போதைய ஆட்சியை நல்லாட்சி என்று கூறுவதற்கு அவர் விரும்புவாராக இருந்தால் அதனை மகிந்த ராஜபக்‌ஷவின் ஆட்சியுடன் ஒப்பீடு செய்து நல்லாட்சி என்று பேச வேண்டுமே தவிர விடுதலைப் புலிகள் அமைப்புடன் ஒப்பிட்டுப் பேசுவதென்பது தமிழினத்துக்குச் செய்கின்ற அநீதியாகும்.

இதைவிடுத்து பேச வேண்டிய தேவைகள் இருந்தால் தியாகங்களைச் கொச்சைப்படுத்தாமல் பேசுங்கள்.

இல்லை பேசுவோம் என்றால் புலிகள் இருந்த போதும் பேசியிருக்கலாமே. அவர்கள் இல்லாத போது அவர்களைத் தூற்றுவது கோழைத்தனமல்லவா? என்று கூறுவதில் தவறில்லை.

## கேப்பாப்பிலவு மக்களுக்காக இன்று சிவநாமம் சொல்வோம்

### சபா.வாசுதேவக் குருக்கள் அழைப்பு

பரம்பரையாக, பாரம்பரியமாக வாழ்ந்த தமக்குச் சொந்தமான பிரதேசத்தில் மீண்டும் வாழ்வதற்காக அறப்போரில் ஈடுபட்டுள்ள எமது கேப்பாப்பிலவு மக்களுக்காக இன்றைய சிவராத்திரி புண்ணிய தினத்தில் சிவநாமத்தினை அனைவரும் ஒன்று சேர்ந்து சொல்லுவோம். இவ்வாறு வீணாகான குருபீடாதிபதி சபா.வாசுதேவக்குருக்கள் சிவராத்திரி தின விரதநாளை ஒட்டி விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. நாம் ஒவ்வொருத்தரும் சொல்லும் சிவ நாமங்கள் அரசின் தலைமைத்துவத்திற்கு மக்களின் அவலக் குரலின் ஒலிகளாக சென்றடையட்டும். அவர்களின் மனதில் இம்மக்களும் எம் மக்கள்தான் என்ற உணர்வினை ஊட்டட்டும். வாழ்வாதாரத்தினை இழந்து நிர்க்கதியாக நிற்கும் மக்களின் பூர்வீகமான பிரதேசம் கிடைப்பதற்கு சிவ நாமம் வலுச் சேர்க்கட்டும். சிவராத்திரி விரதத்தினை அனுஷ்டிக்கும் அடியார்கள் ஒவ்வொருவரும் பூஜை வேளைகளிலும் கேப்பாப்பிலவு மக் களுக்குரிய தான பிரார்த் தனைகளையும் சேர்த்துக் கொள்ளுங்கள். சிவராத்திரியின் திருவருள் துன்பத்தினால் துவளும் மக்களின் அவல வாழ்விற்கு நிம்மதியைக் கொடுக்கட்டும்.

நல்லாட்சி அரசின் காலத்தில் மக்கள் அவலப்படுவது பொருத்தமானதல்ல. மக்களின் அவலத்தினை அரசு உடனடியாக தொடரவிடாமல் தடுத்தல் வேண்டும். இல்லையாயின் அரசுக்கு எதிரான கருத்துக்கள்தான் வலுப் பெறும். இதனை தொடரவிடா மல் இருப்பதற்கு அரசு நடவடிக்கைகள் எடுப் பதன் மூலம் மக்களின் நலன் காக்கப்படுவதுடன் அரசும் தனது வாக் குறுதிகளை காத்து நம் பிக்கைக் குரியவர்களாவதுடன் நல் லாட் சியையும் தொடரும் வாய்ப்பேற்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிளி. கல்வி வலயத்துக்கும் பணிப்பாளராக கிருஷ்ணகுமார்

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். கிருஷ்ணகுமார் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்த க. முருகவேல் ஓய்வுபெற்றுச் சென்றதையடுத்து தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கிருஷ்ணகுமார் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் பதவியையும் மேலதிகமாக வகிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**குளிக்கும் போது சொல்ல வேண்டிய மந்திரம் என்ன?**

குளிக்கும் போது சொல்ல வேண்டிய மந்திரங்களும் ஸ்லோகங்களும் உள்ளன.

ஸ்லோகம்

நமோஸ்துதே தர்மம் விரதே வரானனே

நமோஸ்துதேதேவ கணை கவந்த்யே

நமோஸ்துதே சர்வ பவித்ர பாவனே

ந மோ ஸ் து தே சர்வஜகல்ஸ® பூஜிதே இந்த மந் திரங்களை சொல் வது நல்லது.

**குளித்த உடனேயே உடை மாற்றலாமா?**

முந்தைய காலத் தில் ஆட்கள் நடந்து சென்று அருகில் உள்ள ஆறு, ஓடை, கோவில் குளங்கள் போன்றவற்றில் நீராடி ஈரத்துணியுடன் வருவதை வழக்கமாகக் கொண் டிருந்தார்கள். வீட்டிற்கு வந்த பின்பு தான் ஈரத்துணியை மாற்றுவார்கள்.

இன்றைக்கு குளித்த பிண்பு மாற்றுவதற்கான உடைகளை குளிப்பதற்கு முன்பே குளியலறை யில் கொண்டு வைக்கிறார் கள். குளித்து முடித்தவுடன் அதை எடுத்து அணிகிறார் கள் இந்த முறை முந்தைய கால த்தில் இல்லை. அந்தக் காலத் தில் சுத்தமாக இருப்பதை கறாராகக் கடைப் பிடித்து வந்தார்கள்.

குளித்த பின் உடுத்தும் ஆடையைக் குளிப்பதற்கு முன் யாரும் தொடுவதில்லை.

(தொடரும்)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### சீரான திட்டம்

உன்னுடைய வாழ்க்கை சீரானது. அது ஒரு சீரான திட்டம்: அது தானாகவே நிகழும் ஓர் அதிசயம்; ஒவ்வொரு நிமிடமும் அது சீராகவும் அதிசயமாகவும் உள்ளது.

படைப்பு சீரானது. எப்படி பறவைகள் இடத்தைவிட்டு இடம், நாட்டை விட்டு நாடு குடியேற அறிகின்றன? எப்படி இந்த மப்பில் மர இலைகளுக்குச் சிவப்பாக நிறம் மாற வேண்டும், பூமியில் விழவேண்டும் என்று தெரிகிறது? குளிர்காலம் வந்தால் நாம் சூரியனின் வெப்பத்தை உணரமாட்டோம் என்று எண்ணுகிறாய்; ஆனால் பனியைத் துளைத்துக்கொண்டு வெளிவரும் வசந்த காலத்தின் இளம் குருத்துக்களை நீ பார்க்கிறாய். இந்தப் பூ எப்படிப் பிழைத்திருக்கிறது? அது ஒரு அதிசயமே!

இந்த மனித உடல் ஒரு சீராகத் திட்டமிடப்பட்ட இயந்திரம். எலும்புகள், இரத்தக்குழாய்கள், தசைகள், உறுப்புக்கள் இவற்றால் எப்படி நம் உடல் பின்னப்பட்டு சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. அப்பொழுதுதான் பிறந்த ஒரு குழந்தையின் கண்களைப் பார், நீ பேச இயலாது வாயடைத்துப் போகிறாய்.

புரிந்து கொள்ள முடியாத பேரறிவின் (கடவுளின்) விளையாட்டைக் கூர்ந்து கவனிக்க, நாம் மூன்று நொடி நேரம் கண்களைத் திறந்தாலே போதும்.

நீயும் உன் வாழ்க்கையும் எப்படி உள்ளது? இந்தச் சீரான சிருஷ்டி கர்த்தா உன்னுடன் நிறுத்திக் கொண்டார் என்று நினைக்கிறாயா? நாம் பெரும் பொழுதை, காலத்தை அது ஏன் அப்படி? என்று காணும் முயற்சியில் செலவழிக்கிறோம். மரம் பிராண வாயுவை ஏன் வெளிவிடுகிறது என்று எப்போதாவது ஆச்சரியப்படுகிறாயா? நாம் அந்தத் திட்டத்தின் பகுதியைப் பற்றிக் கேள்வி கேட்பதில்லை. ஆனால், நம்முடைய வாழ்க்கையில் எது நேர்ந்தாலும் தொடர்ந்து கேள்வி கேட்டுக் கொண்டேயிருக்கும். அதைப் புரிந்து கொள்ளமுடியவில்லையோ. அதைக் கண்டுபிடிக்க மனம் முயலுகிறது. படைப்பின் திட்டத்தில் நம்பிக்கை வை. இயற்கை ஒரு சிறு அணுவையும் பிரமாதமாகத் திட்டமிட்டுப் படைத்துள்ளது என்றால் உன்னுடைய வாழ்க்கையின் நுண்ணிய விபரங்களுக்கு கவனம் காட்டாமல் இருக்காது. உன்னுடைய நிலைமை, உன்னுடைய சவால்கள் சீராக உள்ளன. நிம்மதியாக இரு. நம்பிக்கையுடன் இரு. எதையும் பற்றிக் கொள்ளாமல் விட்டு விடு.

## சாஸ்திரங்கள்

✦ மலம், சிறுநீர் போன்ற உறுப்புகளின் இயக்கத்தை மஞ்சள் நிறம் பாதுகாக்கிறது. ஆகவே சிறுநீரகம், சிறுநீர்ப் பையில் நோய் உள்ளவர்கள் மஞ்சள் நிற ஆடைகளையே உடுத்தி வந்தால் அந்த நோய் வெகு விரைவில் குணமாகும்.

-சித்தர்கள்

✦ விருந்தினர்களை வெறுத்து தர்மம் செய்யாதவர்கள் நச்சுச் செடிகளால் பற்றப்பட்டு கொடிய துன்பங்களை நரகத்தில் அனுபவிக்கச் செய்வது.

-பர்யாவார்த்தனகம் (கருடபுராணம்)

✦ தேக்கு மரத்தில் லெட்சுமி வாசம் புரிகிறாள். ஆகவே தேக்கு மரத்தில் கதவு மேஜை, கட்டில் செய்தால் லெட்சுமி கடாட்சம் பெருகும். தேக்கு மரத்தால் செய்த பணப்பெட்டியில் பணம் வைத்தால் நாளுக்கு நாள் பணம் பெருகும்.

-காத்யாயனர்

✦ முறைப்படி மந்திரங்கள் ஓதி பிறர் மீது ஏவப்பட்ட செய்வினைக்கு 1008 நாட்கள் மட்டுமே சக்தி உண்டு. அதன்பிறகு அது செய்தவனையே திருப்பித்தாக்கும். தான் செய்த வினையை தாமே அனுபவிப்பார்.

-தத்வ நிசானு போகசாரம்



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### கஷ்டம் விலகுவதற்கு எத்திசை நோக்கி தீபம் ஏற்றவேண்டும் தெரியுமா?

❖ கஷ்டம் விலகுவதற்கு எந்த திசையை நோக்கி தீபம் ஏற்ற வேண்டும் தெரியுமா?

நமது வாழ்க்கையில் இருக்கும் கஷ்டங்கள் நம்மை விட்டு நீங்க வேண்டும் என்றால் தெய்வத்தை வணங்கி, தீபம் ஏற்றும் போது, அந்த தீபத்தை கிழக்கு திசையை நோக்கி ஏற்ற வேண்டும்.

மேலும் நமது வாழ்வில் ஏற்படும் கஷ்டங்கள் நம்மை தொடராமல் இருப்பதற்கு, ஆன்மீக பழக்கவழக்கத்தில் இருக்கும் ஐதீகங்களை பற்றி தெரிந்துக் கொள்வோம்.

கார்த்திகை மாதத்தின் ஐதீகங்கள்

❖ திருவண்ணாமலை மகா தீபத்தை பார்த்தால், அவர்களின் வாழ்க்கை ஒளி பெற்று பிரகாசமாக இருக்கும் என்பது ஐதீகம். (தொடரும்)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### மென்மையை விரும்பும் இறைவன்

❖ எவர் இறைவனையும் மறுமையையும் ஏற்றுக் கொள்கிறாரோ, அவர் நல்லவற்றைக் கூறவும் .அல்லது மவுனமாக இருக்கவும்.

❖ (தவறு செய்பவர்களை) மன்னித்துவிட வேண்டும் பொறுத்துக்கொள்ளவும் வேண்டும். இறைவன் உங்களை மன்னிக்க வேண்டுமென விரும்புவதில்லையா என்ன?

❖ எப்போதும் குறை கூறிக்கொண்டே இருப்பவனும், சபிப்பவனும், ஆபாசமாகவும் அற்பமாகவும் பேசுபவனும் இறை நம்பிக்கையாளன் அல்லன்.

❖ இறைவன் மென்மையானவன். அவன் எல்லா வற்றிலும் மென்மையையே விரும்புகிறான். உன்னிடமுள்ள இரண்டு பண்புகளை இறைவன் மிகவும் நேசிக்கிறான். அவை மென்மை,சகிப்புத்தன்மை.

❖ நாணமும் இறைநம்பிக்கையும் இணைந்தே உள்ளது. அதில் ஒன்று கெட்டுவிட்டால் இன்னொன்றும் கெட்டுவிடும்.

❖ எந்தப்பொருளில் மானக்கேடான தன்மை பொதிந்துள்ளதோ அது அதனைப் பாழ்படுத்தி விடுகின்றது. அந்த பொருளில் நாணம் உள்ளதோ அது அதனை ஒளிரச் செய்கிறது.

- வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து.

# Northern challengers உதைபந்தாட்டம் மயிலங்காடு ஞானமுருகன் வெற்றி




வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் Northern Challengers உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் 21-02-2017 அன்று நடந்து முடிந்த சுப்பர் - 8 சுற்று முதலாவது ஆட்டத்தில் மன்னார் விடத்தல்தீவு விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் மோதியது.

விறுவிறுப்பான இப் போட்டியில் ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் 3:0 என்ற ரீதியில் வெற்றியீட்டி உள்ளது.

இதன் மூலம் A பிரிவில் மூன்று போட்டிகளிலும் வென்று பலமான அணி என தன்னை நிரூபித்துள்ளது ஞானமுருகன் விளையாட்டுக்கழகம்.(க)

# கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி நேதாஜி இளைஞர் சம்பியன்



வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் வல்வைக்கு உட்பட கழகங்களுக்கு இடையிடையே நடைபெற்ற கரப் பந்தாட்ட சுற்றுப் போட்டியில் நேதாஜி இளைஞர் விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தை தமதாக்கி கொண்டது. (க)

# இறுதிப்போட்டியில் சைனிங்ஸ்



வல்வை விளையாட்டுக் கழகமானது வல்வைக்குட்பட்ட கழகங்களிடையே நடத்தும் மாபெரும் விளையாட்டுப்போட்டி -2017 இன் ஓர் அங்கமான கரப்பந்தாட்டம் கடந்த 21 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை அன்று சைனிங்ஸ் கரப்பந்தாட்டத் திடலில் இடம் பெற்றது.

-இப் போட்டியில் றெயின்போ, இளங்கதிர் அணிகளை வீழ்த்தி சைனிங்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. (க)



**வலிகாம பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் 16 வயதுப் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி சம்பியனாகியது. மற்றும் 18 வயது பெண்கள் அணி 3 ஆம் இடம் பெற்றது. சம்பியனான அணியினரை படத்தில் காணலாம்.**

# நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மின்னொளியிலான உதைபந்தாட்ட போட்டி

## அரையிறுதியில் ஜோசப் வாஸ்




வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் "Northern Challengers உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 21-02-2017 அன்று நடந்து முடிந்த சுப்பர் -8 சுற்று இரண்டாவது ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மன்னார் ஜோசப் வாஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. பரபரப்பான இப் போட்டியில் மன்னார் ஜோசப்வாஸ் விளையாட்டுக் கழகம் 3:1 என்ற ரீதியில் வெற்றியீட்டியுள்ளது.

இதன் மூலம் B பிரிவில் இரண்டாவது அணியாக அரை இறுதிக்குள் நுழைந்தது ஜோசப் வாஸ் விளையாட்டுக் கழகம்.

இதன் மூலம் சென். அன்ரனீஸ் அரை இறுதி வாய்ப்பை இழந்துள்ளதுடன் B பிரிவுக்குள் இருக்கும் மற்றொரு அணியான அல்வாய் மனோகராவும் அரை இறுதி வாய்ப்பை இழந்துள்ளது.

ஏற்கனவே B பிரிவில் இளவாலை யங்கென்றீஸ் அரை இறுதிக்குள் சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (க)







**மன்னார் கல்வி வலயத்திற்குட்பட்ட தாராபுரம் அல் மினா மகா வித்தியாலயத்தின் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் அதிபர் ஜனாப் ஏ.சி.சிறுபுதீனது தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கைத்தொழில் வர்த்தக அமைச்சர் அல் ஹாஜ் றிசாட் பதியுதீனும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனும் வடக்கு மாகாண கல்வி அமைச்சரின் செயலாளர் ஆர்.இரவீந்திரனும் கலந்து சிறப்பித்தனர்.**

# தமிழர் உரிமை...

சவால் விடுத்துள்ளார்.

கந்தர்மடத்தில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவிக்கையில், பாராளுமன்றத்தில் ஒத்திவைப்பு பிரேரணை ஒன்றை பிரேரித்து எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தன் பல கருத்துக்களை கூறியுள்ளார். இந்தியா தமிழ் மக்களுக்கு 13ஆம் திருத்த சட்டத்தையே திணிக்க முயல்வதாக முதல் தடவையாக சம்பந்தன் ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்தியாவின் நிகழ்ச்சி நிரலுக்குள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு செயற்பட்டு தமிழ் மக்களை விற்றதால்தான் கூட்டமைப்பில் இருந்து தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி வெளியேறியிருந்தது. இந்த நிலையில்தான் முதல் தடவையாக இந்தியா துரோகம் செய்வதனை சம்பந்தன் ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஆனாலும் பாராளுமன்றத்தில் பேசியிருந்த சம்பந்தன், தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான கோரிக்கையான சமஷ்டி என்ற வார்த்தையை கூட அங்கு கூறவில்லை. இது தவிர இலங்கை அரசின் போர்க்குற்றங்களை தனிமனித குற்றமாக சித்தரித்து இலங்கை அரசை காப்பாற்றவும் சம்பந்தன் முயல்கின்றார்.

போர்க்காலத்தில் நடைபெற்ற குற்றம் என்பது மனிதகுலத்திற்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை குற்றமாகும். அதனைத்தான் ஆரம்பத்திலிருந்தே நாம் வலியுறுத்தி வருகின்றோம். ஆனால் இவற்றை தனிமனித குற்றங்களாக சித்தரித்து இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றம் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை சம்பந்தன் நிராகரிக்கின்றார்.

பாராளுமன்றத்தில் சம்பந்தன் ஆற்றிய உரையில் எங்கள் மீதும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார். அதில் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் தம்மை துரோகி என குலறுகின்றனர் என கூறியுள்ளார். அவர் கூறியது போன்று நாம் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள், பெறுமதியற்றவர்கள் என்றால் எம்மை பற்றி பாராளுமன்றத்தில் ஏன் பேச வேண்டும்?

கடந்த 5 வருடத்திற்கும் மேலாக நாம் கூறியவை தற்போது நடைபெற்றுக் கொண்டுள்ளன. அதனால்தான் சம்பந்தன் பயப்பட ஆரம்பித்துள்ளார். சமஷ்டியை எதிர்க்கும் சம்பந்தன் ஒற்றையாட்சி முறைமையை ஆரம்பத்திலிருந்தே ஆதரித்து வருகின்றார். இதனால்தான் வட்டுக்கோட்டை தீர்மானத்திலும் கலந்து கொள்ளாமல் நழுவியிருந்தார். இப்போது சிங்கள தேசியவாத அரசோடு கைகோர்த்து தமிழர் நலன்களுக்கு விரோதமாக செயற்பட ஆரம்பித்துள்ளார்.

நாம் தமிழ் மக்களுடைய கொள்கைக்கு விரோதமாக செயல்படவில்லை என்பதை கடந்தகால எமது செயற்பாடுகள் நிரூபித்துள்ளன. ஆனால் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தலைமைக்ள் தமிழ் மக்களுடைய உரிமைகளை விற்று அரசியல் பிழைப்பு நடத்துவது அவர்கள் மூலமாகவே உறுதி செய்யப்பட்டுள்ளன. நாம் எமது கொள்கையில் உறுதியாகவே இருக்கின்றோம். சம்பந்தனுக்கு முதுகெலும்பு இருந்தால் எம்மோடு பகிரங்க விவாதத்திற்கு வரட்டும் எனவும் கஜேந்திரகுமார் தனது உரையில் தெரிவித்துள்ளார். (செ-4)

# இந்தோனேசியா...

ளில் ஜகார்த்தாவில் நடைபெறவுள்ள இந்து சமுத்திர பிராந்திய ஒத்துழைப்பு ஒன்றிய மாநாட்டில் ஜனாதிபதி பங்குபற்றவுள்ளார்.

அந்த மாநாடு நிறைவடைந்த பின்னர் இந்தோனேசியாவில் உத்தியோகபூர்வ விஜயத்தில் ஈடுபடுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ விஜயத்துக்காக விடுக்கப்பட்ட அழைப்புக்காக நன்றி தெரிவித்த ஜனாதிபதி அந்த விஜயத்தின்போது வர்த்தக முதலீடுகள், போக்குவரத்து மற்றும் சுற்றுலா உள்ளிட்ட துறைகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் இருதரப்பு உறவுகளைப் பேண எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

நிலவும் வறட்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்காக 5 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசியை அன்பளிப்பாக வழங்குவதற்கு இந்தோனேசிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அந்த அரிசி அடுத்த மாதமளவில் இலங்கைக்கு கிடைக்கவுள்ளதாக இந்தோனேசிய பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

இந்தோனேசிய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கும் உதவிகள் தொடர்பில் இந்தோனேசிய அரசாங்கத்துக்கும், மக்களுக்கும் நன்றி தெரிவித்த ஜனாதிபதி இது இரு நாடுகளுக்குமிடையிலான நீண்டகால உறவுகளை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாகும் என குறிப்பிட்டார்.

இந்தோனேசியாவுக்கும் இலங்கைக்குமிடையிலுள்ள நெருங்கிய உறவை நினைவூட்டிய ஜனாதிபதி 1976ஆம் ஆண்டில் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் கொழும்பில் நடைபெற்ற அணி சேரா நாடுகளின் மாநாட்டில் இந்தோனேசிய ஜனாதிபதி நல்கிய பங்களிப்பு தொடர்பிலும் விசேடமாக நினைவு கூர்ந்தார்.

இந்தோனேசிய தூதரக தலைமை அலுவலர் திவ்யட்மாஜி ஹெனமன்கிரஷி (Dwiatmaji Hanomanresi) உள்ளிட்ட பிரதிநிதிகள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (செ-11)

# கறுப்புப்பட்டி...

இந்த போராட்டத்துக்கான அழைப்பினை வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் விடுத்துள்ளார். அவர் விடுத்துள்ள அறிவித்தலில் மேலும் தெரிவிக்கையில்,

கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்களின் நில விடுவிப்பு போராட்டம் தொடர்கின்றது. புதுக்குடியிருப்பு மக்களின் நில விடுவிப்பு போராட்டமும் தொடர்கின்றது. மக்களின் நியாயமான இப் போராட்டம் வெற்றிபெற வேண்டுமென பலரும் தமது ஆதரவினை வழங்கிகொண்டிருக்கின்றனர்.

இந்த வகையில் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை உங்கள் உங்கள் இடத்திலிருந்து உந்துருளிகளிலும் (மோட்டார்சைக்கிள்) ஏனைய வாகனங்களிலும் கறுப்பு பட்டி அணிந்தபடி அணி அணியாக கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு பகுதிக்கு நண்பகல் 12 மணிக்கு முன்பாக வந்து சேரக்கூடிய வகையில் வருகைதாருங்கள்.

இந்த மக்களுக்காக மக்களோடு மக்களாக சேர்ந்து அந்த இடத்திலிருந்து அனைவரும் எமது நிலம் எமக்கு வேண்டும் என குரல் எழுப்புவோம், நியாயமான இப்போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவோம் என அவ் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9, 281)

# பரவிப்பாஞ்சான்...

கிளிநொச்சி பரவிபாஞ்சானில் விடுவிக்கப்படாது உள்ள மக்களின் காணிகளை மாவட்ட மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் அடையாளப்படுத்தி உறுதிப்படுத்தினால் உடனடியாகவே காணிகள் விடுவிக்கப்படும் என நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சி இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். இருந்தபோதும் தாங்கள் காணிக்குள் செல்லும் வரைக்கும் தங்களின் கவனயீர்ப்பு போராட்டத்தை கைவிடப்போதில்லை என பொது மக்களும் தெரிவித்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை பிற்பகல் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களில் சிலரை மாவட்டச் செயலகத்திற்கு அழைத்துச் சென்று அங்கு படையதிகாரிகள் கரைச்சி பிரதேச செயலர், மாவட்டச் செயலக அதிகாரிகள், காணி உத்தியோகத்தர்கள் ஆகியோர் அடங்கிய கூட்டம் இடம்பெற்றது.

அதன் பின்னர் கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், கரைச்சி காணி உத்தியோகத்தர், கிராம அலுவலர், இராணுவ உயரதிகாரிகள் ஆகியோர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடும் சில மக்களுடன் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளகாணிகளை நேரில் சென்று பார்வையிட்டனர். இதன்போது மக்களின் காணிகள் அடையாளம் காணப்பட்டது.

இந்த நிலையில் கருத்து தெரிவித்த படையதிகாரிகள் பரவிபாஞ்சான் பகுதியில் விடுவிக்கப்படாது உள்ள காணிகளில் விடுதலைப்புலிகளின் பாரிய கட்டிடங்களை தவிர ஏனைய காணிகள் மீண்டும் பொது மக்களிடம் கையளிக்கப்படும். ஆனால் அதற்கு முன்னதாக மக்களின் காணிகளை அதிகாரிகள் ஆவணங்களை கொண்டு உறுதிப்படுத்தி அடையாளப்படுத்த வேண்டும் அதற்காகவே இன்று (நேற்று) நேரில் சென்று பார்க்கப்பட்டது. அதிகாரிகள் விரைவாக மக்களின் காணிகளை அடையாளப்படுத்தும்போது படையினரும் விரைவாகவே குறித்த காணிகளை விடுவிப்பர் எனத் தெரிவித்தனர்.

படையினரின் தகவலின் படி கிளிநொச்சி மாவட்ட மற்றும் பிரதேச செயலக அதிகாரிகளின் கையில் தற்போது பரவிபாஞ்சான் காணி விடுவிப்பு தங்கியுள்ளது. அதிகாரிகளின் விரைவான நடவடிக்கையே கவனயீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடும் மக்களை விரைவாக அவர்களின் காணிகளுக்குள் செல்ல வழி வகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பரவிப்பாஞ்சான் மக்கள் இராணுவம் காணி விடுவிப்பதாக உறுதி அளித்தாலும் தாங்கள் தங்களது காணிகளுக்குச் செல்லும் வரை தங்களின் கவனயீர்ப்பு போராட்டத்தை கைவிடப்போவதில்லை எனத் தெரிவித்து போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர். (செ-312,15)

# இராணுவத்தை...

கடந்த ஒக்டோபர் மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட சிறுபான்மை மக்கள் தொடர்பான விவகாரங்களை ஆராயும் ஐ.நாவின் விசேட நிபுணர் றீட்டா ஐசாக் நாடியா ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையி லேயே இந்தப் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அரசாங்கம் முன்னுரிமை நடவடிக்கையாக வடக்கில் இராணுவத்தின் வசம் காணப்படுகின்ற பொதுமக்களின் 6ஆயிரத்து 124 ஏக்கர் காணிகள் உடனடியாக முன்னுரிமை அடிப்படையில் விடுவிக்கப்பட வேண்டும். கரையோரப் பிரதேசங்களில் அபகரிக்கப்பட்டுள்ள மக்களின் காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும். தற்போது இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகள் தொடர்பாக ஒரு முறையான திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டும்.

இராணுவத் தேவைகளுக்காக பயன்படுத்துவதை நியாயப்படுத்த முடியாத காணிகளை அதன் உரிமையாளர்களுக்கு வழங்க வேண்டும். எந்தவிதமான முறையான செயற்பாடுகள் இன்றியும் நட்டஈடு இன்றியும் அபகரிக்கப்பட்ட காணிகள் மீள் வழங்கப்பட வேண்டும் அல்லது நட்டஈடு வழங்கப்பட வேண்டும். மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து இராணுவம் அகற்றப்படுகின்றமையானது மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு முக்கியமானது மட்டுமன்றி ஒரு அடையாளத்துக்காகவும் செய்யப்பட வேண்டும்.

அத்துடன் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும். அதற்குப் பதிலாக முன்வைக்கப்படும் சட்டம் சர்வதேச தரங்களைப் பின்பற்ற வேண்டும். சிறுபான்மை மக்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசியல் அமைப்புக்குட்பட்ட விசேட ஆணைக்குழு ஒன்றும் உருவாக்கப்படுவதும் அவசியமாகும் எனவும் ஐ.நா விசேட நிபுணர் பரிந்துரை செய்திருக்கிறார்.

தேசிய நல்லாட்சி அரசாங்கம் தேசிய நல்லிணக்கத்துக்காகவும் அரசியலமைப்பு மறுசீரமைப்புக்காகவும் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. ஆனால் அரசாங்கத்துக்கும் நாட்டின் சமூகங்களுக்கும் இடையிலான நம்பிக்கை கட்டியெழுப்பப்பட வேண்டிய தேவை காணப்படுகிறது. அத்துடன் குற்றவாளிகள் தண்டிக்கப்படாத நிலைமை ஆராயப்படாமல் உள்ளது. இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தனது பரிந்துரையில் வலியுறுத்தியுள்ளார். (செ-11)

# உணவு தவிர்ப்பு...

நாளை எட்டியநிலையில் தொடர்ந்து வருகின்றது

இதேவேளை புதுக்குடியிருப்பு பொதுமக்களால் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ள உணவுத்தவிர்ப்பு போராட்டமும் நேற்று பத்தாவது நாளாக முன்னெடுக்கப்பட்டு தொடர்ந்து வருகின்றது.

2009 ஆண்டு இறுதிக்கட்ட யுத்தம் காரணமாக புதுக்குடியிருப்பு பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா செட்டிகுளம் மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் வசித்து வந்த பொதுமக்களை 2012ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்படுவதாக அழைத்து வந்து வீதியில் இறக்கி விடப்பட்டதாக மக்கள் கவலை தெரிவித்தனர்.

தமது சொந்த வீட்டிற்கு செல்கின்றோம் என எண்ணி சென்ற நிலையில் தமது காணிகளில் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்ததை கண்டு ஏமாற்றம் அடைந்ததாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இந்த நிலையில் தமது போராட்டங்களிற்கு அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் எனவும், இல்லையேல் உணவுத்தவிர்ப்பு போராட்டம் உயிர் மாய்ப்புப்போராட்டமாக மாறும என மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை சொந்த வீடுகளின்றி உறவினர் வீடுகள், வாடகை வீடுகளில் வசித்து வந்த நிலையில் காணிகளை விடுவிக்குமாறு தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வந்ததாக மக்கள் குறிப்பிட்டனர்.

இதுவரை தாம் முன்னெடுத்த போராட்டங்களிற்கு எந்தவொரு தீர்வும் முன்வைக்கப்படாத நிலையிலே கடந்த 3 ஆம் திகதி தொடர் போராட்டம் ஒன்றை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்பாக முன்னெடுத்திருந்தனர்.

இந்த போராட்டம் கடந்த 13ஆம் திகதி சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு போராட்டமாக மாற்றப்பட்டது.

49 குடும்பங்களுக்கு சொந்தமான 19 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தியே மக்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். எனினும் தமது காணிகளுக்குள்கால் பதிக்கும் வரை தமது போராட்டம் தொடரும் எனவும் மக்கள் குறிப்பிட்டுள்ளனர். (செ-281)

# 31 ஆயிரம் ஏக்கர்...

ளதுடன் அதனை அபிவிருத்தி செய்வது தொடர்பில் பல தரப்புகளுடனும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அத்துடன் வடக்கு மாகாணம் தொடர்பில் செயல் நுணுக்க ஆய்வும் செய்யப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி வனம், சுற்றாடல், நீர் வளம், சுற்றுலா உள்ளிட்ட அடிப்படைகளின் கீழ் ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. இதனடிப்படையிலேயே அபிவிருத்தி நடைபெறும்.

இதேவேளை, மாங்குளத்தை தலைநகரமாக அபிவிருத்தி செய்ய ஏ9 வீதியின் இருமருங்கிலும் 31ஆயிரம் ஏக்கர் காணி இனங்காணப்பட்டுள்ளது.

இதில் 1400 ஏக்கர் காணி காடு சார்ந்தது. வனம் மற்றும் நீர் நிலையங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் சுற்றாடல் தொடர்பான நடைமுறைகள் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படும். குறிப்பாக, கனகராயன் குளம் ஆற்றுக்கு எந்தவித, ஆபத்தும் ஏற்படாது.

அத்துடன், அபிவிருத்தி இனங்காணப்பட்டுள்ள இடங்களை காட்டு யானைகள் வழித்தடங்கல் இருப்பதாக குறிப்பிடப்பட்டாலும் அவ்வாறு எதுவும் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. திட்டத்தை தயாரிப்பது எமது கடமை. அதனை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் இது குறித்து சகல தரப்பினரதும் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படும் என அமைச்சர் சம்பிக்க மேலும் தெரிவித்தார். (செ-11)

# வெட்டப்பட்ட...



மாடுகள் வெட்டும் தொழுவத்தில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் சட்டவிரோதமாக மாடுகள் வெட்டப்படுவதாக அறிந்து கொண்ட வைத்திய அதிகாரி சம்பவ இடத்திற்குச் சென்றதுடன் வவுனியா மாவட்ட கால்நடை வைத்திய அதிகாரியின் உதவியும் பெறப்பட்டு வெட்டப்பட்ட மாடுகளை பரிசோதித்தபோது அனுமதி ஆவணங்கள், போக்குவரத்து ஆவணங்கள், மாடுகள் பெறப்பட்ட உரிமையாளர்களின் ஆவணங்கள், எதுவும் இன்றி சட்டவிரோதமான முறையில் மாடுகள் வெட்டப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதன்போது கொழும்பிற்கு வெட்டப்பட்ட மாடுகளை கொண்டு செல்ல வாகனச் சாரதி எத்தனித்துள்ளார். எனினும் அதிகாரிகள் உடனடியாக வாகனத்தை துரத்தி மடக்கிப் பிடித்துள்ளனர்.

மேற்படி சம்பவத்தின்போது நகரசபை சுகாதார பரிசோதகர் மற்றும் கால்நடை வைத்திய அதிகாரிகளை தனது கடமைகளைச் செய்யவிடாமல் இடையூறு விளைவித்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கைப்பற்றிய வாகனம் வெட்டப்பட்ட மாடுகள் மற்றும் வாகனச் சாரதியை விசாரணையின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறித்த மாடுகளில் பல இளம் பசுமாடுகள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-85)

**A/L Personal Class**
A/L, 2017, 2018, 2019 & Day Batch
உயிரியல், இரசாயனவியல்
37 வருட Past Papers & Theory
கற்பிக்கப்படும்.
**T.P No: 075 629 5662**
(8038)

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
**V2 TRAVELS-0768226240**
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(அ-7588)

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**
100% SATISFACTION GUARANTEED
070 330 5500
021 221 5656
உங்கள் உறவுகளுக்கு துரிதமாகவும் நம்பிக்கையாகவும் பொதிகள் மற்றும் கடிதங்களை உலகின் முன்னணி நிறுவனங்கள் ஊடாக அனுப்பிவைத்திட
அண்ணா அன் கோ
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்
(C-7541)
எம்முடன் இணைந்து இந் நிறுவனங்களின் முகவர்களாக விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்

**போட்டிப் பரீட்சைக்கான வகுப்புக்கள்**
**SLAS (Open/ Limited)**
ஆரம்பம் : 26.02.2017
ஞாயிறு : 8.30am - 1.30pm
முகாமைத்துவ உதவியாளர் தரம் III (PMA)
ஞாயிறு (கிழமை தோறும்) : 8.30am - 1.00pm
ஆசிரியர் சேவை/ வங்கியாளர்/ LAW
ஞாயிறு : 8.30am - 1.30pm
கணக்காளர் சேவை
சனி : 8.30am - 1.30pm
ஞாயிறு : 8.30am - 1.30pm
உயர்கல்லூரி
தொடர்பு: 0778760992, 0773443962
(C-7453)

## நிறைவேற்றதிகார...

பினரும் விளையாட்டுத்துறை அமைச்சருமான தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் நேற்று கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆளுநர்களின் அதிகாரங்கள் நீக்கப்பட்டு மாகாண சபைகளின் அதிகாரங்கள் பலப்படுத்தப்படுமாயின் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையினை பலப்படுத்தியாக வேண்டும என்பதே ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நிலைப்பாடாகும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கி மாகாணசபை அதிகாரங்கள் பலப்படுத்தப்பட்டால் நாட்டின் போக்கும் சிக்கலடையும். நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி இல்லை.

அதேநிலையில் மாகாணசபை அதிகாரங்கள் பலப்படுத்துவது தொடர்பிலும் கட்சி ஆதரவை தெரிவித்துள்ளது. எனினும் மாகாண சபை அதிகாரங்கள் பலப்படுத்தப்பட்டு ஆளுநர்களின் அதிகாரங்கள் நீக்கப்படும் நிலையில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நடைமுறையில் இருப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**
**SLAS**
சனி, ஞாயிறு
9.00 - 3.00 மணிவரை
சட்டமாணி நுழைவு
வெள்ளி, சனி, ஞாயிறு
9.00 - 3.30
முகாமைத்துவ உதவியாளர்
பிரிவு I
ஞாயிறு
10.00 - 2.00
பிரிவு II
ஞாயிறு
2.00 - 5.30
பிரிவு III
செவ்வாய், புதன்
4.30 - 6.00
076 688 3394, 021 222 3382
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

**KINGS ELECTRONICS (PVT) LTD**
**கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்**
SPECIAL OFFERS
LED TV'S
Samsung 32" -29900
Hisence 32" -24500
Sony 40" -64900
Hisence 24" -17900
Tcl 32" -21900
Panasonic 32" -28500
3 YEARS WARRANTY
அழகிய, அதிநவீன தரத்தோடு மின் உபகரணங்கள், தளபாடங்கள், மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்
INNOVEX WASHING MACHINE
FIVE YEARS WARRANTY
34500/=
SAMSUNG R19 REFRIGERATOR
34900/=
10 YEARS WARRANTY
SONY DVD Player
ONE YEAR WARRANTY
PRICE RS 5,250/=
Furnitures
Toys
Electronics
Baby Care
Glass TV Stand
10,200/=
WEB: WWW.MYKINGS.lk
021-4546699
Facebook/kingsjaffna
12A, Point Petro Road, Jaffna
(வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)
(அ-7644)

**இயக்கச்சியில்... உறுதியுடன்**
**காணி விற்பனைக்கு**
**கற்பகவனம்**
1 ஏக்கர், 2 ஏக்கர் காணிகள்
A9 இல் இருந்து 1km தூரத்தில்
5 லட்சம் செலுத்தி காணியினை சொந்தமாக்குங்கள்
மிகுதியை 5 வருட மாதாந்த தவணையில் செலுத்தலாம்
வங்கிக் கடன் வசதி

1 ஏக்கர் – 16 பரப்பு
● 40 தென்னை ● 40 - 60 தேக்கு
● 20 கஜு மரம் ● 10 - 15 மாமரம்
● 01 குழாய்க்கிணறு
● சுற்று முட்கம்பிவேலி படலையுடன்



2 ஏக்கர் – 32 பரப்பு
● 80 தென்னை ● 80 - 90 தேக்கு
● 40 கஜு மரம் ● 20 - 30 மாமரம்
● 01 குழாய்க்கிணறு
● சுற்று முட்கம்பிவேலி படலையுடன்

● 15 அடி அகல பாதை ● **5 வருட பராமரிப்பு** ● 24 மணிநேர பாதுகாப்பு
● துறைசார் வல்லுனர்களின் ஆலோசனை ● விடுமுறை வீடு அமைப்பதற்கான இடவசதி
● மாதாந்த பராமரிப்பு அறிக்கை ● விளைபொருட்களுக்கான சந்தை வசதி

பொதுவான வசதிகள்
பொது விடுதி · உணவகம் · உடற்பயிற்சிக்கூடம் · நீச்சல் தடாகம் · விளையாட்டுத்திடல்
நடைபயிற்சிக்கான பாதை · மீன்பிடி குளம் · முந்திரிகை தோட்டம் · மூலிகைத் தோட்டம்

மேலதிக பெறுமதிசேர் சேவைகள் (கட்டணங்களிற்கு உட்பட்டது)
● இயற்கை விவசாயம் ● மின்சார வசதி ● தண்ணீர்த்தாங்கி
● ஓய்வுக் கொட்டில் ● நீண்டகால நீர்விநியோக அமைப்பு
● மரக்கறித்தோட்டம் ● உள்ளக பூந்தோட்டம்
● பாதுகாப்பு காவல் (இணைய இணைப்புடன்)
● 5 வருடங்களிற்கு பின்னரான பராமரிப்பு


சி. அனுராஜ்
உரிமையாளர், விற்பனையாளர்

078 284 5000 021 492 7778
55A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
Good Gift Property Developers (Pvt) Ltd
Reg. No.: PV 115306
(அ-7645)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.